# ஆதி திராவிடர் வரலாறு.

இது

திரிசிரபுரம் ஆ. பெருமாள் பிள்ளை,

அவர்களால் இயற்றப்பட்டு

---

சென்னை வியாசர்பாடி,

ஸ்ரீ சிவஞான சுந்தர சித்விலாச பக்த பஜனையின்

ஆசிரியரும்,

பூஜை தாக்கர் தெரு

ஆதி திராவிட சங்கத்தலைவருமாகிய,

பூஜை

ஸ்ரீமான் மு சிவசுப்பிரமணியம் பிள்ளை,

அவர்களது முயற்சியால்,

சென்னை, விக்டோரியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

---

1922-ஹு

விலை ரூபாய்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 1 | 6 | விளஙகஙகூறல | விளஙககககூறல் |
| 4 | 7 | ஸதலஙவளின | ஸதலஙகளின |
| 4 | 14 | பொனனலமபலம | பொனனமபலம |
| 6 | 22 | வகுககமபடடுளள | வகுககபபடடுள்ள |
| 8 | 5 | Gcological | Geological |
| 9 | 26 | எனபபடுபவரில | எனபபடுபவரில் |
| 13 | 5 | யசராணட | யரசாணுட |
| 13 | 20 | உறவினராக | உறவினராக |
| 15 | 13 | ஆராயசினபடி | ஆராயசியின்படி |
| 15 | 19 | கரலம | காலம |
| 15 | 20 | இரரவணன | இராவணன |
| 16 | 3 | இததியாதியரல | இததியாதியால் |
| 19 | 6 | விளஙகபபடுதவின | விளஙகபபடுதலின |
| 19 | 10 | இருநதாகவே | இருநதாகவே |
| 19 | 11 | சாரபாகவே | சாரபாகவே |
| 19 | 19 | தணடகததின | தணடகததின் |
| 19 | 19 | இராமயணததில | இராமாயணததில |
| 19 | 21 | விருஷஙகடகு | வருஷஙகட்கு |
| 21 | 21 | வகுடஙகளுககு | வருடஙகளுககு |
| 23 | 12 | பஷையை | பாஷையை |
| 23 | 13 | காட்டுசின்றனர | காடடுகினறனர் |
| 23 | 22 | பரஷர | பாஷா |
| 24 | 6 | எனறவாறு | எனறவாறு |
| 25 | 17 | தேய'ததின | தேயததின |
| 25 | 27 | நெடுநதூர | நெடுநதூர |
| 26 | 3-6 | இராமயண | இராமாயண |
| 26 | 21 | ஜமபதும | ஜமபதும |
| 28 | 6 | ஆழுமுக | ஆறுமுக |
| 29 | 22 | அலவது | அலலது |
| 29 | 25 | அகததியனருநகு | அகததியனருக்கு |
| 30 | 18 | வாயதத | வாயநத |
| 31 | 1 | யரல | யால |
| 31 | 19 | இவவழககோடு | இவவழககோடு |
| 32 | 5 | நூலில | நூலில |
| 32 | 10 | இவவாறுக | இவவாறுக |
| 7டி | 46 | வணடோதரி | மணடோதரி |
| 6[illegible], | 24 | ஐஙகாரா | ஐயஙகார் |
| 88 | 10 | முகததாரர | முகததாரா |

# முகவுரை

"ஆதிதிராவிடர் வரலாறு" என்பது ஆதிதிராவிடர் என்ற சொற்பெயர் வந்த காரணத்தை எடுத்துக்காட்டுவதாம். எனவே இது இந்நூற்குப் பெயராயிற்று.

ஆதியெனும் அடைச்சொல் எண்டுக்க காலத்தின் பொருட்டாயக் கொண்டுள்ளதின், அதனடைப்பே ஆதிதிராவிடர் யாவர் என்பதை விளங்கக்கூறல் இந்நூலின் வழக்காகும்.

இக்கருத்தினை வலியுறுத்துவான் நக்குத்தும் வழங்கு தோற்றம் தோற்றமாய முகிளாச்சி முறையும், ஆன்ற அறிவு சான்ற சரித்திர ஆராய்ச்சி வல்லுநர்தம் உடன்பாட்டையே அண்பாயக்கொண்டு இரட்டப்பட்டதாகும்.

ஆதலால் இது வாசிப்போருக்குப் பார்த்த பொய்க்காப் புனைவை இனப்பேதங்களை எனக்கெடுத்துக்காட்டி உண்மையினை யறி யச் செய்யும் பயனுடையதாகும்.

எமது நூசிய நாடு மிகப் பழமையான இருப்பிடம் ஆதலின், இது பலவினத்தரசர்களையும், அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்ட பகைமையால் அவ்வவர் சாதியினரால் சோதந்திரியான பலவாயிர சரிதைகளையும் அகணிதமாய்க் கொண்டுள்ளதாம்.

இவையனைத்தையும் ஆண்டருகேயிருந்து கண்டேனென்றும் அல்லது கற்றேனென்றும் எண்டு கூடிப்பேனல்லேன் . . . யரிய இமா சலத்தினமுன குமரி ஒரு சிறு மண்ற்கல் குருத்தொலைப்பு திரமபிய ஆராய்ச்சி மிகப் பண்டிதருன, சிறிப்பன "பழமேரா ஒத்தா" என்ற திட்டத்திருவ கற்பித்துரைகளோடு கருவக் கூட்டி நூலென ஒன்றை வெளியிட்டனன் "பனிமய மியம்" பொருப்பகத்து சோதக பொருளாகக் கருவகக்களையும் பொன்னிறமா

யிருக்கும்." என்ற அமுதசாகரர் கூற்றொப்ப இது சின்னூலே யாயினும் பெருநூல் உணர[illegible]ர் மாட்டுத் சிறக்குமென்பது துணிபு.

இந்நூலை இயற்றுமாறுவந்தெனக்குக் கட்டளையிட்ட வரும், சென்னை ஆதிதிராவிட மகாஜன சபையின் கௌரவ காரியதரிசியும் சென்னை சட்டசபை மெம்பருமாகிய ஸ்ரீமான் M C இராஜா M. L C அவர்களுக்கும், அங்ஙனே இந்நூலிடை அபிமானமுடையராகி, இஃது வெளியாகத் தமது அங்கீகாரங்காட்டிய ஆதிதிராவிட பண்டிதமணிகளுக்கும், இந்நூலை அச்சுவிமான மேற்றப் பெரிதும் முயன்று முடித்த ஸ்ரீமான் மு. சிவசுப்பிரமணியம் பிள்ளையவர்களுக்கும் நான்மிகவும் நன்றிபாராட்டக் கடப்பாடுடையனாகின்றேன்.

தி. அ. செ.

சிவமயம்.

# ஆதிதிராவிடர் வரலாறு.

---

### காப்பு.

குலம்போற்று மெளியவர்க்குங் குறுங்கருத்திற்
சகனாறுவெள்ளி குவிந்தத்தேய
நிலம்போற்று முயிரனைத்து நிறுத்தியருள்
பொழிகின்ற நிமலபெம்மான்
வலம்போற்று நற்றமிழின் மலிந்தவாதி
திராவிடரின் வரலாற்றுயப்பாம்
நலம்போற்று மதம்பிளிற்றும் மழகளிற்றின்
றடங்கழலே நயந்துநாளே.

ஆதி திராவிடர் என்பது முதன்மையான திராவிடர் எ[ன்ற] பொருளுடையதாம் எனவே பண்டைய திராவிடர் என்ப[து] கருத்து. முதன்மையான திராவிடர், பண்டைய திராவிடர் என்ப[த]ால், இடை திராவிடர் அல்லது கடை திராவிடர் அல்லது புது திராவிடர் என்று பிறிதோர் திராவி[ட]ரும் உளரோவென்பது உட[ன்]னுண்டாகும் ஐயப்பாடாகும். இங்ஙனம் பேதம் உள்ளதோவெனின் உள்ளதென்பதே பலநூல்களின் துணிபாம்.

அவற்றைப்பின் வருமாற்றாலறிக. திராவிடர் என்பது திரா விடம் என்ற பகுதியடியாய்ப் பிறந்த பெயராகும்.

இந்தத் திராவிடம் என்ற சொல்லின் வரலாற்றைச் சீர்தூக்கு மளவில் அது பல சரித்திரவடியாய்ப் பிறந்துள்ளதாகவே தெரியப் படுகிறது. விரிந்த அவ்வரலாறுகளை இடம் பாஷை ஜாதியென்[னு]ம் மூவதிகாரமாகத் தொகுத்து அவற்றொவ்வோர் அதிகார முகத்[தா]ல் விளக்கிக்காட்டுதும்.

# முதலாவது திராவிடர்.

## இடத்ததிகாரம்.

1. "பூர்வகாலத்தில் திரௌ வென்னும் நாமமுள்ள அரசன் தென்னாடுகளுக்குள் பிரவேசித்ததால் அவன் சிறப்புற்றோங்க இத் தென் திசைக்குத் திராவிட தேசமென்று பேர் நேரிட்டதாகச் சில சரித்திரங்களால் தெரிய வருகின்றது" என்றார் *டாக்டர் ஸ்ரீ. பழநி ஆண்டி M. D அவர்கள்

2. பின்னும் "தென்முனைக் கடல்வழியாய் எதியோப்பிய கண்டத்திலிருந்து எகிப்து முதலிய ஸ்தலங்களின் மார்க்கமாய்த் தென் திசையில் திராமிளி என்ற நாமமுள்ள ஜனங்கள் பிரவேசித்ததாகவும் சொல்லுவர் ஆராய்ச்சியுடையோர்" என்றுங் கூறினார்.

3 திராவிடம் என்பதற்குப்பொருள், முடி வளைந்ததாம், எனவும், ஆதலால் மகாநதிமுதற் கன்னியா குமரிமுக ஓடிவளைந்த கோடி மண்டல நிலமே திராவிடம் எனவுங் கூறுவர் சிலர்

4. "திருவிடம் என்பதே திராவிடம்" என்றாயிற்று என்பார் ஸ்ரீமான் T பொன்னம்பலம் பிள்ளையவர்கள் M. R. A. S. (Retired Excise Commissioner of Travancore)

மேற்கண்டவற்றால் திராவிடமென்றசொல் திரௌவென்னும் மன்னன் பேரால் பிறந்ததென்றும் அம்மன்னன் தென்திசைக்குட் குடிபுகுந்தான் என்றும் அங்ஙனே திராமிளி என்ற இனத்தாரும் தென் திசைக்குட் குடிபுகுந்தாரென்றும், கொள்ளப்படுமாறுள்ளதால் அத்தென்றிசையாம் நிலம் யாது? என விசாரிப்புழி மேற்றந்தபடி மகாநதிமுதல் கன்னியாகுமரி பரியந்தமாம் நிலமே திராவிடம் என்றுங் கொள்ளற்காகின்றது இதனைச் சார்பாகவே திராவிட கர்நாடக கூர்ச்சர மகாராஷ்டிர தைலங்கமாம் ஐந்நிலமும் திராவிடமென்றார் அபிதான கோசத்தாசிரியர்.

---

*வித்வ வித்யா விநோதினி March 1908 7-ம் பக்கங்காண்க.

ஆகவே* பழந்தின் கதையினால ஜம்புத்துவீபம் என்றும் †
தன் ஆட்சியினால பரதநாடெனறும, நதியின பெயரினால் சி-
ந்துவெனறும (இந்தியாவெனறும) ஆரியா இருக்கையால ஆ-
வர்த்தமானமெனறும அழைக்கப்படும இந்த இந்திய தேயமே திரா-
விடம என்ற மற்றொரு பெயரும பெற்றுள்ளதேபோலும்.

இதனை சார்பாகவே 1911ம் வருஷத்திய குடிமதிப்பு விளக்கத்தில் Mr. E. A. Gait C. S. I. C. I. E. I. C. S. அவர்களும் சித்தோ திராவிடா ஆரிய திராவிடா மங்கோலிய திராவிடர்களை இந்திய பெருமபாலாரையுமே திராவிடரெனக் கூறியுள்ளார் என்றபோதிலும் ஷை திரௌ திராமலி தெற்கே குடிபுகுந்தார் என்றபடியே திராவிட — கானடக — கூர்ச்சர — மகாராஷ்டிர — தைலங்கமெனப்படும பஞ்ச திராவிடத்துள திராவிடம் என்பது சிறப்புப்பெயராக முனனைக்கதோதப பட்டிருத்தலோடு ஷை அ-தான கோசமும திராவிடம எனபதற்குத தமிழ நாடெனறும பொருள தந்துளளமையால இந்தியாவின தமிழ்த் தேயமாகி தென பாகமே திராவிடமெனப படும இந்தத தமிழ இடத்தைப் பின வருமாற்றாலறிக

*மேருமலைக்கு அருகே 11000 யோசனை யளவாய உயர்ந்த ஜம்பு மரமொனறு உணடாம. அது அநேக பெனனமபெரியபுரி கடபோனற பெருமபழங்களைத தருமாம அபபழங்கள மேரு மீது விழுந்த மாத்திரத்தில சாறுக்குணடு ரசம நதியாக வோடு மாம இந்த ரசத்தாலவந்த நதியே ஜமபுநதியெனறும அதன கிழ-க்கிறகுச் சமபுத்துவீபமெனறும, அந்தப பழரசம கரைநது காய்ந்து உலரச சாமபுநதம எனற பொனனாகுமாம இஃதொரு விநோ-கதை

† துஷயநத மகாராசனுக்குச சகுநதலையினிடம தோன்றிப் பிரசித்திபெறற ஓராசா பெயரும் பரதன இராமன தமபியின் பெ-ரும பரதன்.

"Saivas, in this sense form the bulk of the population [in] the districts of Tinnevelly, Madura, Trichinopoly, Tanjore South Arcot Salem and Coimbatore and are also found in large numbers in certain parts of Ceylon, Malabar, and Travancore, in short wherever Tamil is the prevailing tongue"

(Tamilian Antiquary By Prof P Sundaram Pillai M. A.)

அதாவது திருநெலவேலி, மதுரை, திருசசிறுபபளளி, தஞ சாவூர, தெனனாறகாடு, சேலம, கோயமபுததூர முதலியவை தமிழ் நாடு என்றவாறு

"Tamil is the language of a section of the Dravidian Race, inhabiting the extreme south of the Indian Peninsula [Tamil Studies By Srinivasa Ayyangar M A ]" எனபது இந நூலின தெனகடை பாகம திராவிடம எனறவாறு பினனும் விளககமாக

வையை யாறறின வடககும, மருதயாறறின தெறகும கரு வூரின கிழககும மருவூரின மேறகும செநதமிழ நாடெனறும

தெனபாணடி குடடம குடஙகறகா வேணபூழி
பனறியருவா வதன வடககு—நனறாய
சீதம மலாடு புனனாடு செநதமிழ சே
ரேதமில பனனிரு நா டெனப எனறபடி

ஆயவை கொடுநதமிழ நாடெனறும வகுககபபடடுளள இவைகளே திராவிட மெனபபடும. இது நனகு தோற்றமாகும வண்ணமே திராவிடம எனபதறகுத திரு—இடம எனறு பிரிததுக காட்டி அதற், செவ்வியமாயத தூயமை - அழகு பொருநதியது இததென்னாடே யெனறும, தேறறமாக கோதாவரி, கிருஷ்ணை, பெணணை, பாலாறு, காவேரி, கொளளிடம, வைகை, தாமபரபரணி இவைகளால் பாயச் சப்பட்ட, செழிபபினால் ஓஙகிய வளஙகளைப் பெற்றிருப்பதுமன்றி,

உள்ளங்களி கூறல் வண்ணம் செய்யும் இடங்களிலும் புண்ணிய தீர்த்தக்கரைகளிலுமுண்டா யிருக்கப்பட்ட வட இந்தியாவிலில்லாத வியப்பை விளக்கும்படியான கோயில்களும், அறச்சாலைகளும், தென்னாட்டிற்குச் சிறப்பியல்பாக விருக்கின்றன. இந்நல்ல சீதேவி யானவள் என்நாளுமிங்கு வாழ்கின்றுள் என்றுகிறது. அந்நிமித்தங் கொண்டே இந்நாட்டிற்குத் திருநாடென்றும் திருவிடமென்றும் கூறத்தகும்.'' திருவிடம் என்பதைத்தான் ஆரியர் தங்கள் மொழிக்கிணங்கத் திராவிடமென்றழைப்பாராயினார் என்று பெருஞ் சொற் கூறிய ஸ்ரீமான் T பொன்னம்பலப்பிள்ளையவர்களின் தீர்மானமே போற்றத் தகுந்ததாம்.

இதனை சார்பாக * Dr கிரீர்சன் † Mr ரிஸ்லி யவர்களு தமது நூல்களிலே தென்னிந்திய மக்களே பண்டைய திராவிட குடிகளென்றும், அவர்கள் புராதன குடிகளல்லர் என்று துணிவதற்குத் தாம் யாதொரு உரையும் பெற்றிலர் என்றும் எடுத்தோதினர். Prof Wilson Sir Moniur Williams அவர்களும் திராவிடர் என்ற சொல்லின் வரலாற்றைப் பிரித்துரைக்குமிடத்து 1-வது தமிழரே திராவிடரென்றும் 2-வது தமிழ்த் தேசத்தின் பூர்வ குடிகள் என்றதும் கண்டுப் போற்றத் தக்கதாகலைக் காண்க.

சமஸ்கிருத பண்டிதர்களும் திராவிடம் என்பது தென்னிந்தியாவிலுள்ள ஒருநிலப்பகுதிக்கேயுரிய பெயர் என்று கூறுவர் என்பதாக ஸ்ரீமான் ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் அருளிய 'Tamil Studies' என்ற நூலில் முதற்பக்கத்தில் அமைந்துள்ளதும் ஈண்டுப் போற்றத் தக்கதாம்.

இந்தியாதியால் திராவிடமென்பது இந்தியா முழுதுக்கு பெயராகாமல் இந்தியாவின் தென்பாங்கர் நிலத்திற்கே பெயராய்க் கொள்ளற் பாலது. இத்தென் பாங்கர் நிலமாவது விந்த்ய முத

* The language of India.

† The Peoples of India.

கன்னியா குமரி பரியந்தம் பரந்துள்ள இடமாகும். இதுவே ஆதி திராவிடம் எனப்படும் அவ்விடத்து மக்களாய் விளங்குபவர் தாமே ஆதி திராவிடர் எனப்படுவர்

* This race the most primitive of the Indian types occupies the oldest geological formation in India, the medley of forest clad ranges, terraced plateau, and underlying plains which stretches roughly speaking, from the Vindhyas to Cape Camorin [Report on the Census of India 1911. By Mr E. A. Gait C. S. I., C. I. E., I. C. S., F. R. S.]

இங்ஙனமிருக்கத் திராவிடமென்ற பெயர் பல வேறிடத்து மக்களுக்கும் பெயரானது நாம் பெரிதும் சீர்தூக்கி அறியவேண்டியதொன்றாயிருக்கின்றது அவற்றைப் பின்வருமாற்றாலறிக திராவிடம் எனபது தென்னிந்தியா வென்றும் திராவிடர் எனபது தென்னிந்திய மக்களென்றும் பொருள் கொண்டுள்ளமையாற்றானே இந்தியாவிற் குடியேறிய வேற்றாருக்குந் திராவிடர் என்ற பெயர் போலிப் பெயராகத் தோற்றுவான, சித்திய திராவிடர் ஆரிய திராவிடர், மங்கோலிய திராவிடர் என்றும், ஆந்திர—கானடக—கூர்ச்சர—தைலங்க திராவிடர் என்றும் பின்னும் பல அடை மொழிச் சார்த்தித் திராவிடர் என்றழைக்கப் படுகின்றனர் பலர் இதனை விரிவு படக் கூறும் ஜாதி யதிகாரத்திற் காணக சுத்த திராவிடன் என்ற இலக்கணங்களுக்கு இலக்காய் இருந்த திராவிடர் தாமே [illegible]டைய திராவிடர் என்ற பொருள் குறிப்புறும் ஆதி திராவிடர் [illegible]ப படுவர்

[illegible]ற்றத் திராவிடர்களாயுள்ளவர்களிற் சிலர் மத்திய ஆசியாவினின்று அஸ்ஸாம்—பர்மா வழியாக இந்தியாவின் வடகிழக்கெல்லையுட் புகுந்தமர்ந்தனர் என்றும், சிலர் வடமேற்கு வடகிழக்கெல்லையாகவே நோக்கிக் குடிபுகுந்தார் என்றும், சிலர் ஆசியாவின் மேற்குத் திசையினின்று இந்தியாவிற் குடியேறினோராவர் என்

றும் சிலர் இந்துமகா சமுத்திரத் தருகான லெமூரியாவெனும் இடத்தினின்று குடிபுகுந்தாரானவர் என்றும், திபேத்தினின்று குடிபுகுந்தாரானவர் என்றும் இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் பலவாறாகக் கூறுவர். இவர்களெல்லோரும் திராவிடர் என்றழைக்கப்பட்டது மிகவும் சீர்தூக்கத் தக்கதொன்றாம். பின்னும் திராவிடர் எனப்படுபவர் ஆரியரினின்று பிரிந்தவர்கள் என்பது அன்டர் துரையவர்களின் கோட்பாடு. ஆயினும் திராவிடர்களில் இருவகுப்பினருளர் அவர்களோவெனின் ஒருவர் கொலேரியர் என்றும் மற்றொருவர் திராவிடர் என்றும் அழைக்கப்படுவர். இவர்களில் கொலேரியர் என்பார், வடகிழக்கு வாயிலாக இந்தியாவுக்குள் நுழைந்து விந்தியமலையின் வடபாகத்தில் தங்கினர் என்று கூறிய ஹைறண்டர் துரையவர்களே திராவிடரென்பார் ஆரியர் படையெடுப்புக்கு முன்னரேயே சிந்து கணவாய் வழியாக இந்தியாவுக்குள் பிரவேசித்தவர் என்றும் கூறுவர்.

ஆரியரினின்று பிரிந்தோர் ஆரிய திராவிடர்களே யாதலால் இவ்வாரியரின் புராதன நகரத்தையுஞ் சீர் தூக்குமளவில், ஆரியர்கள் ஐரோப்பாக் கண்டத்தின் ஓர் பகுதியாகிய ஸ்காந்திநேவியம் என்ற இடத்தினின்று மத்திய ஆசியாவிலுள்ள துருக்கிஸ்தானம் என்ற இடத்தில் தங்கிக் காபூல் வழியாக இந்தியாவில் பிரவேசித்தாராவர், என்றும் திபேத் தேயத்திற்கு வடக்கிருக்கும் உயர்ந்த குளிர்ச்சி பொருந்திய பமீர் எனும் நாட்டினின்று பின் ஆசியாவின் மேற்குப் பக்கங்களிற் சென்றதாகவும் அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் இந்தியாவுக்குட் பிரவேசித்தவரானாரென்றும் (Vedic India) T Wheeler Prof Sayce அவர்களின் அபிப்பிராயப்படி நோக்குமளவில் இவ்வாரிய ரென்பார் மோகல் வகுப்பின் சந்ததியாவரென்றும் அறிய விருத்தலால் ஆரியரும் திராவிடர் எனப்படுபவரில் பெரும்பாலாரும் இந்தியாவில் குடிபுகுந்தோராகவே தெரிவாகின்றது. திராவிடம் என்ற பெயர் இந்தியாவின் தென்பாகத்திற்கே

உரியதாயிருத்தலின் தென்னிந்தியரே ஆதி திராவிடர் என்ற பெய
ருக்குரியராதலோடு வந்தேறிகளாயுள்ள மற்றையோருக்கும் இந்
தத்திராவிடப் பெயர் வழங்குகின்ற காரணமென்னவெனின் இது
ஆதி திராவிடர்களின் இனம் பற்றி வந்ததாகுமேயன்றி வேறன்று.

நாம் வசிக்கும் இவ்விந்தியாவானது மிகவும் பெரிய தேசமாம்
இதன் விஸ்தீரணம் 15 லட்ச மைல் பரப்புள்ளதாம் வடிவத்தில்
ஒரு ரூபாயும், அரையணாவும் எப்படி உள்ளவா யிருக்கின்றதோ அது
போல நமது இந்தியாவும் ஐரோப்பாக் கண்டமும் ருஷியாவொன்று
தவிர ஓரளவின் தென்றே சொல்லற் காகின்றது ஆகையாற்
றானே (Seeley) சீலி நிபுணர், இந்நாட்டின் பரப்பை விளங்கக் கூறு
வான் ஆண்டபோது "இந்தியாவின் வடமேற்கு மாகாணம் வங்கா
ளம் ஆகிய இவற்றின் பரப்பளவு, ஐரோப்பாவின் இங்கிலாந்து,
ஸ்காத்துலாந்துக்குச் சற்றேறக் குறையச் சமமென்றும், அயோத்தி
ஹாலண்டுக்குச் சமமாமென்றும், மத்திய மாகாணங்கள் பெல்ஜி
யத்திற்கும், மதராஸ் இத்தாலிக்கும், இந்திய சுதேச நாடுகள்
யுனைடெட் ஸ்டேட்டுக்கும், சமானமென்று வியாத்துள்ளார்கள்.
இது போலவே Mr. E. A. Gait, அவர்களும் பம்பாய் தேச
மானது ஐரோப்பாவின் பகுதியாய ஸ்பெயின் தேயத்திற்கும், மத்
ராஸ், பஞ்சாப், (பலுச்சிஸ்தானம்) இந்தியாவின் மத்திய மாகா
ணங்கள், பீரார் இராஜபுத்தனம், ஆகிய இவைகள் பிரிட்டிஷ் தீவுக
ளுக்கும் United Provinces (ஐக்கிய மாகாணம்) பீஹார் ஒரிஸ்ஸா
இத்தாலியா தேசத்திற்கும், ஐதராபாக்கம் காஷ்மீர் தேயம் (யார்க்
ஷர் தவிர) கிரேட் பிரிட்டனுக்கும் இந்தியாவுக் கணித்தாயுள்ள
பர்மா ஏறக்குறைய ஆஸ்திரியா ஹங்கேரியாவுக்கும்) சமமெனப்
தாக்கக் கூறுகின்றனர் இந்தியாவின் ஜனத்திரளோ ருஷியா வொன்
றுதவிர ஏனைய ஐரோப்பாக் கண்டத்திற்கு மேம்பட்டதென்னுங்
கூறுவர்

இத்தகையதாய்ப் பரந்துள்ளது இந்தியாவாதலினால் அதன்

எல்லைகள் பலவாகப் பெயரிடப் பட்டிருக்கின்றன. இவற்றுளே ஆரியர்கள் குடியேறித் தங்கி யிருந்தமையால் இந்தியாவின் வடபாகங் கா ஆரிய வர்த்தமானமென்றும், ஜம்பங்கனி மேருமலைக் கணித்தே பழுத்து ரசம் பிரவாகித்த தென்பதால், இந்தியாவின் வட பாலே ஜம்புத்துவீபமென்றும், சிந்து நதியானது இந்தியாவின் வடபாலே புள்ளமையால் இந்தியாவின் வடபாகத்தே சப்தசிந்து வென்றும் அயோத்தியரசனுகிய தசரதபுத்திரன் பரதன் அரசாண்டமையால் இந்தியாவின் வடபாகத்தே பரதகண்டமென்றும் பெயர் பெற்ற தெனலாம்.

சிந்து நதியின் பெயரடியாகவே பிறந்த இந்தியாப் பெயர் நந்நாடெல்லா வற்றிற்கும் பொதுப் பெயராக விளங்குகின்றதே போலப் பழம் பெயர்களாகிய ஆரியவர்த்தமானம், நவகண்டமாய வழங்கப்படும் பரதகண்டம், ஆகிய இப் பெயர்களும் நந்நாடு முழுமைக்கும் பெயராய் விளங்கிற் றெனலாம்.

இங்ஙன மிருக்க இந்தியாவின் தென்றிசைப் பெயராகிய திராவிடம் என்பதூஉம் நந்நாடு முழுமைக்கும் மற்றொரு பெயராய வழங்கற் கிருந்தது யாதினு லெனின்,

வடதிசைக் கண்ணிருந்த ஆரியர்களிற் சிலர் திராவிடமாய தென்றிசைக்குக் குடி புகுந்ததே போல திராவிடரிற் பெரும்பாலோர் வடக்கே சென்றும் வந்தும் இருந்தோராவர். எங்ஙன மென்றால், பாரதப்போர் நடந்த இடம் குருக்ஷேத்திரம் என்றியம்புவர். இந்த இடமோ தற்காலம் பஞ்சாப் என வழங்கும் வடஇந்தியாவின் கண் உள்ளது (அஸதினபுரி டில்லி என்றுங் கூறுவர்)

• இவ்விடத்திலே யுண்டான பாரத போர்வீரருக்குத் திசை யரசன் உணவளித்தான் எனப் பின்வரும் பழஞ் செந்தமிழ்ப் பாக்களால் தெரிவாகின்றது.

## புறநானூறு.

ஈரைம பதின்மரும பொருது களத்தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம வரையாது கொடுத்தோய.

## சிலப்பதிகாரம்.

ஓரைவர் ஈரைம்பதின மருடன் றெழுந்த
போரிற பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன பொறையன மலையன றிறம்பாடி
கார்செய குழலாட வாடோமோ ஊசல
கடம்பெ றிந்தவா பாடி யாடாமோ ஊசல் "

எனபவற்றைககாணக

பின்னும் நாட்டுச சரிதங்களில் வெகு பழங்காலத்ததெனக கொண்டாளப்படும் இராமாயண வாயலாயக காணுங்கால இந்திய தெனகடை பாகமாகிய இலங்கையின வேந்தனுகிய இராவணன எனபான அககாலத்திலேயே இந்தியாவின வடபாலாகிய இமா சலத்திற்குச சென்றதாகவும குபேர நாடாகிய அளகாபுரிக்குச சென்றதாகவும தெரிவாகின்றது

இத்தியாதியால திராவிடா வடதிசைக கேகிப்பரவின தாற றனே திராவிடம என்ற பெயரும வடதிசைமுதல நாடு முழு துக்கும ஒரு சாா ஏற்பட்டது போலும இவற்றல திராவிடம வேறு, ஆரியவாத்தமானம வேறு என்ற பிரிவு நனகு தேற்றமாகின றதனறே? இந்த ஆரிய வாத்ததிலின்று திராவிட தேசத்திற்கு குடியேறினவாகளுள் முதனமையானவா மாறா அலலது பழையன எனப்படுவாரென ஆராய்சசி யுடையவா கூறுகின்றனா. இதற்கா தாரமாக

## மதுரைக்காஞ்சி.

மழையொழுககறுப பிழையா விளையுட்
பழையன மோகூா வையகம விளங்க — எனபதூஉம்.

பழமையென்னும் பொருளுடைய 'பண்டு' என்ற பதத்தடியாக மாறன் என்றது பாண்டியன் என்றாயிற்று *இந்தப் பாண்டியருக்குப்பின்னால் தென்றிசை நாடினவர் திரையர். இவர்கள் அரசன் இருநிலங்கடந்த திருமால் வழித்தோன்றினவன், என்றும் இவ்வழி வந்தோரே காஞ்சி நகரத்தை யரசாண்ட சூரியவம்ச சந்ததிகளாகிய சோழர்கள் என்றும் புலப்படுகின்றது, இதற்கு,

"இருநிலங்கடந்த திருமறுமார்பன
முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்த்
திரைதருமா பினுரவோ னும்பல
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசு முழங்குதானை மூவருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக்கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையற் படர்குவி ராயின்"

என்னும் பெரும்பாணாற்றுப்படையும் சான்று பகரும். இவர்களுக்குப் பின் வந்தவர் வானவர் எனப்படுவோர். இவர்கள் முதலில் தென்னிந்தியாவிலுள்ள கொல்லிமலை முதலிய இடங்களில் குடியேறி யிருந்ததாகத் தெரிகிறது. இம்மலையில் வாழும் வானவ ரென்னும் கூட்டத்தாரை உறவினராகக் கொண்டவர்கள்.

"மாநீர் வேலிக்கடம் பெறிந்திமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய
வானவர் தோன்றல்" என்று சிலப்பதிகாரம் கூறுவதும் இதனை வலியுறுத்துவதான எழுத்துப்போலும்.

(1) இந்தப்பாண்டியர் ஆரியர் தென்னிந்தியாவுக்குள் முதன்மையாகப் புகுந்தகாலம் எப்போதென்ன நிச்சயிக்கு மளவில்

* ஸ்ரீமான் S சிவஞானம் பிள்ளை "தமிழ்மொழி"

இவர்கள் கி மு. 1100 வருடங்களுக்குமுன் குடிபுகுந்தோராவார் என்று (Tamil Studies Page 57) கூறுவர் ஆராய்ச்சி மிக்கார் எனவே இவர் குடிபுகுந்தகாலம் இற்றைக்கு 3020 ஆண்டாகின்றது.

(2) கிறிஸ்துவுக்குமுன் 1500 வருடங்கட்குமுன் எனக்கணிக்கக் கூடிய மகாபாரத காலத்தில் திராவிடர் எனப்படுவார் மேலிந்தியாவின் ஒரு சிறுபாகத்தில் வசித்திருந்ததாகவும், மகாபாரத முடிந்த மாத்திரத்தில் இந்தியாவின் மேற்குவாயலாக புறப்பட்டுத் தென்றிசை நோக்கி மைசூரிலுள்ள சுவார சமுத்திரத்தில் சிலகாலந்தங்கியிருந்து அதன் பின்னர் மூன்று சிறு கூட்டமாக, இந்திய தென்பாகத்தில் கிழக்கு தெற்கு மேற்கு என்ற எல்லையளவில் இராஜ்யங்களைத் தாபித்துக்கொண்டனர், இவர்களே சோழ பாண்டிய சேரர் எனப்படுவர் (Tamil Studies Page 378) என்றுங் கூறுவர் இதனால் ஷை மூவரசர்காலம் இற்றைக்குச் சுமார் 3420 வருடங்களாகின்றன

(3) அசோக சக்கிரவர்த்தியின் கி மு 250 வரையுள்ள, Edicts கற்பிளவுச் சின்னத்தின் சான்றுகத் தமிழ் அரசர்களாகிய சேர சோழ பாண்டியர் வெகு புராதன காலத்தவர் என்றும் பெறப்படுகிறது Mr. M. J Payne அவர்கள் தருமாறு அசோகன் சிங்காதனமேறினது கி மு 272 என்பதும் கவனிக்குமளவில் திராவிடர் எனப்படுவார் தென்னிந்தியாவில் குடியேறின காலம் இற்றைக்குச் சுமார் 3420 வருடங்களாமெனத் தோன்றுகின்றது தற்போதிய இந்தியா ஐரோப்பிய அரசுக்குட் பட்டிருத்தலின் அவ்வரச இனத்தையே சேர்ந்தவர் ஆரியர் என்றியம்பும் படித்தவர்கள் புராதனம் ஐரோப்பாகண்டம் என்றெழுதப் பட்டிருப்பதுபோல, சேர சோழபாண்டியர் ஆளுகையில் அவர்களது உறவையுங் கொள்ளுமாறு இம் மூவரசரும் ஆரியரினின்றே பிரிந்தவரென்றும் எழுதப்பட்டிருக்கின்றது. அங்ஙனே மகமதியர்

ஆட்சி யிருந்த காலேயில் அந்த மகமதியா உறவைப் பெறும்படித் தாங்கள் மோகல் வம்சத்தவா என்று மகாண எழுதப்பட்டிருக்கின்றது வெகு பழைய அரசாகிய இராவணன் உறவைக்கொள்ளும்படித் தமக்கில்லாத நிறமாகிய கரிய நிறத்தையுடையேம் என்பார்போல இராமனும் இராவணனைப் போல கரிய நிறத்தை யுடையவன் என்பபோல் எழுதிப்பின்னும் இராம இராவண சம்பந்தம் பல வெடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது இதனை உண்மைத்திறம் யாதாயினுமாகட்டும் என்றுபோகிறோம்

ஆரியரினின்றும் பிரிந்தவர்களே திராவிடரென்று கொள்ளவிருத்தலால், இவ்வாரியர்கள் இந்தியாவில் குடியேறின காலம் யாதெனை விசாரிப்பாம்

Historians' History of the world என்ற நூலாசிரியராகிய (1) Mr விலியமன் அவர்களின் ஆராய்ச்சியின்படி, ஆரியர்கள் இந்தியாவில் குடியேறியகாலம் குறைந்தது கி—மு 1000 வருடமென்றபடியாம் பின்னும் (Tamil Studies Page 54) இவர்கள் கி மு 1500 ஆண்டுகளுக்குமுன் குடியேறினேர் என்றபடியாம்

(2) இராம லட்சுமணர் ஆரியரே யாதலாலும், இந்திய சரித்திரங்களின் மிகவும் பழமையானதாகவும் உள்ளது இராமாயணமேயாதலாலும் ஆரியர் குடியேறியகாலம் இராமாயண காலமேயாகலாம் ஆயின் இராமனின் விரோதியாகிய இராவணன் ராவணனிடமிருந்து அடைதற்கரிய பிரமசிரமென்ற அஸ்திரத்தைப் பாண்டியன் பெற்றிருப்பது தெரிந்து, அம்மன்னனுடன் சந்திசெய்துகொண்டு இந்திரலோகத்தை வெல்லப்போனன் என இரகுவம்சம் சாக—6' சுலோ—66 காணவிருத்தலால் இராமாயணகாலமும் ஏறக்குறைய இற்றைக்கு 4000 வருடமென்றே அளவிடற்காகின்றது அல்லது மகாபோதிசங்கத்தாரின் பிரசுரம் (Oct. 1912.) தருமாறு பாரதம் புத்தருக்குமுன் 2800 ஆண்டெனக் கொள்ளுங்கால் அது இற்றைக்கு 5200 வருடங்களாகின்றன.

ஆதலால் ஆரியர்குடியேற்றமும் சுமார் 5200 வருடமென்றே கொள்ளலாம்.

இத்தியாதியரால் முற்கூறியபடித் திராவிடர்களும், ஆரியர்களும் குடியேறிய சுமார் 4000 அல்லது 5000 வருடங்களுக்கு முன்னர் ஆதிதிராவிடம் என்ற பெயருக்குரிய தென்னிந்தியாவானது எந்நிலைமையிலிருந்தது என விசாரிப்போம்.

வான்மீகி பகவானது வாக்கியத்தால், விந்தியபர்வதத்துக்குத் தெற்கே நருமதை கிருஷ்ணவேணி, கோதாவரி தாம்பிரபர்ணி முதலிய நதிகளும் மேகலதேசம் (விந்தபிரதேசம்) உத்கலதேசம் (கஞ்சம்) தசார்ணம் (சண்டாகிரின் கிழக்கு) அசுவவந்தி, விதர்ப்பம் (பீரார்) ருஷிகதேசம் (பங்காளப்பகுதி) மாஹிஷகதேசம் கலிங்கம் (வடசர்க்கார்) மௌசிகம் ஆந்திரம் தெலுங்காணம் புண்டரம் (வங்கதேசப்பகுதி வங்காளப்பகுதி) சேரசோழ பாண்டியம் முதலிய நாடுகளும், தண்டகாரணியம் என்ற பெரிய காடும் குறிக்கப்பட்டுள்ளன. சுக்கிரீவன் வானர வீரர்களைத் தெற்றிசைக்குச் செல்லும்படி விடுக்கப்பட்டது இந்நாடு முதலியவை குறித்ததால் இவை ஆரிய மக்களால் தக்ஷிணபதியர்களாக முன்பு கருதப்பட்டிருந்தனவாக விளங்கும்" (ஸ்ரீமான் மு. ராகவய்யங்கார், செந்தமிழ்ப் பத்திராசிரியர்)

மேற்றந்தவற்றால் ஆரிய மக்கள் காலத்திலே யிருந்த நகரங்கள் இன்னவென்பது தோற்றமாயின. ஆனால் நாமெடுத்துக் கூறிய தண்டகாரணியத்தின் வரலாற்றை நோக்குமளவில் அதுதானும் ஆரியர் தெற்கே வருதற்கு முன்னரேயே சிறந்த நகராக விளங்கியிருந்ததென்பதே தெளிவாகின்றது எப்படியென்றால்.

இக்ஷ்வாகுவின் புத்திரருள் ஒருவனாகிய தண்டகன், தன் தந்தைக்கு மாறுபொழுகி வருநாளில் அவனைத் தந்தை விந்தியகிரிப் பக்கத்திற் போயிருக்குமாறு ஓட்டி விட்டான். அவன் அங்கே மதுமந்தமென்னுமொரு பட்டணத்தை யுண்டாக்கி, அங்கே சுக்கிரருக்குச்

சென்றயினன. ஒரு நாள் சுக்கிரனுடைய மகள் அரசையைக்கண்டு மோகித்து அவளைப் பலவந்தமாய்க் கூடினன அது கேட்ட சுக்கிரன, அவனும அவன பட்டணமும மண்மாரியாலழிக வென்று சபித்தான அங்ஙன மழிந்த விடமும அதன தெறகின கணுள்ள பிரதேசமும தண்டகாரணியமெனப போபெறறது'' அதுவே தக்ஷிணதேசம எனறு யாழ்ப்பாணம ஸ்ரீமான. முத்துத்தமபி பிள்ளையவர்கள்

"தண்டகாரணிய மெனபது, முறகாலத்தில, சேர சோழ நாடுகளை அடுத்திருந்த தெனபது, அந்நாடுகட்கும, விந்தத்துக்கு மிடையில வேறு தேசங்களைக் குறியாது விந்தத்தின தெறகே ஆயிரம யோசனை யளவும வெறுங காடாயக கிடந்தது'' எனவான்மீகி கூறுதலால விளங்கும "எனறு செந்தமிழப பத்திராசிரியர்

இவ்வளவு பரந்த நிலமுழுவதையுஞ் சாபஞ் சென்றழித்தது எனும விதம அக்காலத்தவர்களே நமபுவதறகாக வெழுநிய உண்மையோ அல்லது அக்காலத்தவருக்குச் சமமாகவுள்ள இக்காலத்தவா கண்டினபுறம உண்மையோ! இது நல ஆராயச்சி மிகவேயுடைய சானறோர்பால அடங்கி கிடக்கும கதையேயாம பாரத காலத்தில இந்தியாவின தெனபாலில அநேக ராஜயங்கள் இருந்தனவாகப பந்தாக்கரும தனது தக்ஷிணசரித்திரம எனும நூல 142ம் பக்கத்தில குறிக்கினறு

இந்தத் தண்டக வனத்தின்கதை இராமன இலங்கைக்கு வருங்காலத்தில் சொல்லப்பட்டதா யிருக்கினறது. இராமனின் விரோதியாகிய இராவணன் அரசோச்சிய இலங்காபுரியின் விபரத்தை நோக்குமளவில, அது முதலாவது மாலியவந்தனுக்கு இராஜதானியாகவும, பினனா குபேரனுக்கு இராஜதானியாகவும் அதன பின்னா இராவணனுக்கு இராஜதானியாகவும் இருந்ததென்பாா சிலா. அகஸ்தியா முதலியவாகளுக்கு நாம வயது குறிக்கின்ற உண்ணும் பத்துத் தலைகளையுடைய இராவணனுக்கும் பல்லாயிர

வருடங்களே வயதா யிருந்திருக்கலாமென நமது நாட்டின் புராண விதிகாச ஆசிரியர்களின் கொள்கையின்படியே யீண்டு நமபவேண் டியதாகிறது.

அப்படி முழுதுமே நமபுவது அறிவு முதிர்ந்த இக்காலத்தில செல்லா. ஆயினும ஓராயிரமாகவேனுமகொண்டு பார்ப்போமா யின் முறகூறியபடி ஆரியர் குடியேற்ற காலத்தோடு இறறைக்கு ஏறக்குறைய 6000-ஆணடு ஆகும். அந்நெடுங்கால வளவில "இந்தி யாவின தெனபாகமானது தறபோதுள்ளதுபோலக் கன்னியாகு மரியோடு முடிந்ததோ! அன்றே வெனபதும சந்தேகம். ஏனெ னின் தறபோதுள்ள குமரிமலைக்கும (ஆறறுக்கும) தெறகாகவும, பஃறுளி யாறறுக்கு வடக்காகவும 800 காதம அதாவது 8000 மயில தூரமுள்ள தரை இருந்ததாகவும', தெரிகினறது

இந்த" இராமாயண காலத்தில விந்தியமலைக்கு வடக்கு நாடாக விருந்தது, அதறகுத தெறகு தணடகம் ஜனஸ்தானம எனமிருகங்கள சஞசரிக்கும இருவனமிருந்தன, அவைகள நாடா காமல அவைகட்குத தெறகில நாகரீகமேராசசியமடைந்த நாடுநகரங களும அவைகட்கிணங்கிய கோட்டை கொததளங்களுமிருந்தன. அந்நாட்டுமக்கள பலவித கலைகளிலும், அரசியல முறைமை, இராணுவவகுப்பு முதலிய இராசசிய தந்திரங்களிலும, மிகவும் மேனமையடைந்திருந்தாாகள (ஸ்ரீமான் T. பொன்னமபலம்பிள்ளை M. R. A S ) எனககலவி கேளவியாளாகள கூறுமாறறை நோக்கு மளவில ஆரியாகள மழையையும நதிகளையும் மக்களையும கொணடுவந்து இநதிய தெனபாலைத திருததினா என்பது ஒரு தலைக கூற்றுகின்றது. "துவராபதிபபோந்து நிலங்கடந்த நெடு முடியணணல் வழிககண, பதினெணகுடி வேளிருளளிட்டாரையும் அருவாளரையும கொடுபோந்து காடுகெடுதது நாடாக்கி (செழிக்கவைததாா) என்று தொலகாபபியப பாயிர வுரையில் நச்சினாாக்கினியா இயமபுதலும மாறுபடலாகின்றது

தண்டகாரணியமானது சேரசோழ பாண்டியநாடுகளை யடுத் திருந்ததாகவே வானமீகி தருகினறா மேறபடி யாமாற தென பாற் கணணிருநத நாடு நகரஙகள கோட்டை யாதிகளெனப படு பவை சேர சோழ பாண்டிய ராஜயஙகளாக விருப்பினும அம்மூவர சா தாமும அகததியரால தெனனாடடுககுக கொணடு வரபபட்ட வராய விளஙகப்படுதலின கோட்டை யாதிகளை உடைததா யிருநத நகா தணடகமேயாகும தணடகமானது இராவணனது இராஜ் யததிறகுளளடஙகியதாகவே யிருககலாம

அறறேல பாண்டிய இராவண ராஜயஙகளுககு இடை யில அநதததணடகவனம இருநததாகவே கொளளவுமபடும இந நோககுககுச சாரபாகவே அணடுக கனனியா குமரியினினறு 8000 மயில அளவு தரையிருநத தெனபதுஞ சாததியமாம பினனும அந தணடகவனமானது இராவண ராஜ்ய மெனறுகொளவதறகுச் சாாபாகவே, இராவணனின தநதையாகிய விசரவாகு எனும பெயரினமாயுளள விசிததிரவாகு பராககிரமபாகு கஜவாகு எனற இராவண தேசாதிபதிகளின பெயா சமபநத வகைபாய் தோன றும் இடசுவாகு எனபானறன மைநதனது நாடாக அஃதிருநத தெனும வரலாறும வலியுறுததுகினறது

இநதத தணடகததின பெயா இராமயணததில கேட்கப் படுவதால இராவணனுககு முறபடடவன் இடசுவாகு எனறும் — து காலம ஷை 6000 விருஷஙகட்கு முறபடடதாகும் எனற ...லதாம் இவனது இடமாயிருநத தெனபாயகரே ஆதிதிரா விடம எனலாம

கன்னியாகுமரி தொட்டு 8000 மயில பரபபாபக ... பெரு நிலமானது கடலால மூழ்கப்பட்ட தெனபாா சரிததிராசிரியாகள. ஆண்டு மதுரை ராஜதானிககுக கதவனைய தாயிருநத கபாடபுரமும் ...ழியில் மூழவுற தென்பாா. உதாரணமாக.

## சிலப்பதிகாரம்.

" பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்றதற்கு
அடியார்க்கு நல்லார் உரை தருவதாவது

" அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வட வெல்லையாயது பஃறுளி யென்னும், ஆற்றிற்கு மிடையே எழுநூற் றுக் காவதவாறும், இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்றநாடும் ஏழ்குணகரைநாடும் ஏழ்குறும்பனைநாடும் ஆகிய இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரிகொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால்" எனப்படில் ஏழ் மதுரைநாடு என்னுந்தொகுதியில் கபாடபுரமும் ஒன்றேயாகும்.

" ததோ ஹேமமயம் திவ்யம் பாண்ட்யாநாம பாண்டய
ராஜாநாம புக்தம் யோக்யம் கவாடம் அநேக
நகரம லக்ஷ்யதே முக்தாருபைர மணியி ரத்னை
பூஷிதம் தத்தபத்தி தேஜக வாதிதி பாவ

இதன் பொருள் முத்துமயமான மணிகளால் அலங்காரமானதும் பாண்டியர்க்கு யோக்யமானதுமான பாண்டியரது கவாடபுரம்' என்றார் ஸ்ரீகோவிந்தராஜர். பின்னும்

" இவ்வகை யரசிற கவியரங் கேறினா
ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாட புரமெனப."

இத்தியாதியால் கபாடம் பாண்டிய நாடென்றும் இது தற்போதிய மதுரைநகர் அமைவதற்கு முன்னர் பாண்டிய இராஜதானியாக இருந்ததென்றும் இது மதுரையின் கிழக்கே 3 அல்லது 4 மயில்

தூரத்தில் அமைந்திருந்த ஒரு கிராமமென்றும் அறிய விருப்பத்தோடு இதுதானும் ஊழியில் மூழ்வுற்றது என்னுங்கால் பிரளயம் பாண்டிய நாட்டோடு 8000 மயில் அளவு பிரவாகித்தது எனக் கொள்ளப்படும்

இந்தப் பிரளயம் எப்போதுண்டாயிற்றோவெனின்,

"According to Professor Elliot there were many erosions and the last of which was about 9000 years ago." (Hon Mr S Rm M Ramaswami Chettiyar)

அதாவது, 9000 வருடங்கட்கு முன்னர் தென்பாலில் இப்பிரளய முண்டானது என்ல் தெரிவாகிறது இதனால் 9000 வருடங்கட்கு முன்னர் தென்பால் 8000 மயில் அளவு தரையாக விருந்தது எனத் துணிவதோடு அக்காலம் தென்னிந்தியாவானது புறதேயத்தாரால் குடியேறப்படாததாய்த் தன்னகத்திருந்த மக்களையே குடியாயக் கொண்டிருந்ததாய் விளங்குகின்றது இந்த நெடுங் காலத்திய சரிதமாய் விளங்குவது இராவணன் சரிதந்தானே யாகுமல்லது வேறொன்றும் ஆதலின் அந்த நெடுங்காலத்தியதாயக் கொள்ளற்பாலதாம் கபாடபுரம் என்பது பிற்றைஞான்றெழுந்த பாண்டியராலான தென்று கூறவும் ஆதாரமில்லை அல்லது இலங்கை பௌத்த வம்சாவளியெனும் நூல்கருமாறும் கிறிஸ்தவ பைபிள் எனும் நூல் தருமாறும், மேற்படி பிரளய காலமானது இற்றைக்கு 4300 வருடங்களுக்கு முற்பட்டதென்பது திராவிட இதனைச் சார்பாக நோக்குமிடத்தில் இராமாயண காலத்திற்குச் சற்று முந்திய நூற்றாண்டிலேயே மேற்படி பிரளயம் உண்டானதா யிருக்கலாம் ஆதலால் தண்டக நாடும் பிறவுமாயவிந்தத்தின் தென்னோடு முழுவதுமே ஆதி திராவிடம் எனத் துணியலாம்

இதுகாறுங் கூறியவற்றால் திராவிடம் எனுஞ் சொல் தென்னிந்தியாவுக்குரிய பெயர் என்றும் திராவிடத் திருமக்களே வடதிசையாதி எல்லைகளுக்குப் போக்கு வரத்துடையராயிருந்த கார

ணத்தால் வடதிசையாதி நிலங்கட்கும் திராவிடமென்ற பெயர் தோன்றற்காயிற்றென்றும் பின்னர் வடவிந்தியாவின் மூலமாய் அநேக புறதேயத்தவர்கள் வந்து குடியேறினார்களென்றும் அவர்களும் நாளடைவில் திராவிடர் என்ற பெயரை தம் பெயராகப் பாவித்துக் கொண்டார்களென்றும், காலநீட்சியளவாகக் கணிக்குங் கால இராவணனே திராவிட அரசனுவானென்றும், ஏனைய அரசர்கள் திராவிடர் என்ற பெயரைத் தம் பெயராகப் பாவித்துக்கொண்டார்களென்றும் ஆகலால் திராவிடம் என்ற அருத்த சம்பந்தமாகவுள்ள தென்னிந்தியாவை ஆதி திராவிடமென்றும், இவ்விடத்தவரே ஆதி திராவிடரென்றும் வடதிசையாதி நிலத்தும் இவ்வாதி திராவிடர் போந்து அமர்ந்துள்ளமையால் இன்றும் ஆங்காங்கு ஆதி திராவிடர் உளரென்பதாகவும் ஏனைய மக்களைப் போல் புறதேயத்திருந்து இந்தியாவுக்குள் குடிபுகாது புராதனமாகவே இவர்கள் ஈண்டுறைகின்றமையானருனே துணிபுடன் இவர்களே ஆதி திராவிடரென்றும் இவர்களது அரசனாக இராவணன் இருந்தமையால் இராவணனே ஆதி திராவிட அரசனென்றும் குறிக்கொள்ளக் கூறினும்

திராவிடம் என்ற சொல் இடத்தடியாக வந்தபெயர் என்பதாக விவகரித்தாற்றியபடியே இரண்டாவதாக, திராவிடமென்பது பாஷை யடியாகப் பிறந்ததென்றும் வழக்குள்ளதால் அதனைப் பின் வரும் திராவிடம் பாஷை யதிகாரம் எனுமுகத்தால் விளக்கிக் காட்டுதும்

## இரண்டாவது திராவிடர் பாஷை யதிகாரம்.

ஆரியர்கள் ஆதியில் தமிழ் எனும் மொழியை உச்சரிக்கக் கூடாதவர்களாயிருந்தார்கள். தமிழ்எனும் மொழியிலுள்ள ழகாரம் தமிழ்ப் பாஷையொன்றற்கேயுரிய சிறப்பெழுத்தா யிருப்பதினாலும் ஆரியர்கள் பெரும்பாலும் மெய்யெழுத்துக்களை மொழிக்கு முதலாகக் கொண்டு உச்சரிப்பவர்களாதலானும் இந்தத்தமிழ் எனும் மொழி

யை தமிள் த்மிளம் எனறு வழங்கினதாகவும அதுதானே திரிந்து திரமிளம திராவிடம எனருயிற றெனபாா சிலா.

ஆயின் இநதத தமிழபபாஷை எநநிலததில தோனறிற்றே எநநிலததிலே நிறைநது வழஙகப்படுகிறதோ அநநிலநதானே ஆதி திராவிடம எனறகாகும.

இநதத தமிழ்பபாஷை யாணடுததோறறமாயிற்றெனவிசாரிப் புழி, சிலர் இபபாஷை வட இநதிய பாஷையாகிய ஆரியபாஷையாம சமஸகிருததகின கிளைப்பாஷை யெனறியமபுவா. ஆனல் தமிழ்ப் பாஷையினது நல இலககணததோடு அப்பாஷைககுரிய மககளது புராதனம இடம முதலியவறறை நோககுமளவில அது ஒரு கிளைபாஷையென்று சொலலற்கு நியாயமிலலை ஆகையாற் றனே ஆரிய தமிழெனும பஷையைத தோநத ஆசிரியாகள் இரு பாஷைககுமுளள பேதஙகளை நனகெடுததுககாட்டுசினறனர், அவற் றுள் சிவஞானசுவாமிகள கூறுவதாவது —

“ தமிழ் மொழிபபுணாசசிககட படுஞ செயகைகளும் குறியீடுகளும வினைககுறிபபு, வினைததொகை முதலிய சில சொலலிலககணஙகளும உயாதிணை, அஃறிணை முதலிய சொற்பாகு பாடுகளும் அகமபுறமெனும பொருட்பாகு பாடுகளும ,குறிஞசி வெட்சி முதலிய திணைபபாகுபாடுகளும அவறறின பகுதிகளும, வெணபா முதலிய செய்யுளிலககணமும இனனோரனன பிறவும வடமொழியிற் பெறப்படா. எனபதாம

Dr. Caldwell. துரையவாகள தானியற்றியுள்ள திராவிட பாஷா விலககண நூலிலே கூறுவதாவது

(“தான் நினைககினறவாறு) சமஸகிருத பாஷையானது தமிழ்பபாஷையினினறு 20 வாாததைகளைக கடனுகப் பெற்றிருக் கின்ற” தெனபதாம அவ்வாாததைகளாவன அககா, அத்தை அடவி , அம்மா ; ஆணி , கடுகு , கலா, குடி, கோட்டை, நீா, பட்டணம முதலியவையாம

ஸ்ரீமான் M. ஸ்ரீனிவாசயயங்கார M. A. அவாகள் கூறுவ தாவது. This in itself is sufficient to prove that Tamil has no philological affinity with either Sanskrit or any Indo—European tonque " அதாவது தமிழ பாஷையானது சமஸ்கிருதம அலலது ஐரோபபிய பாஷையினினறு பிறநததெனற காகா. எனறவாறு.

பணடையகாலத தமிழரும ஆரியரும எனும அரிய நூலிலே ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம அவாகள கூறுவதாவது.

" ஆரியாகள இநதியாவிற புகுநத பினனரே ஆரிய பாஷை முறைசெயயபபட்டது" எனபதாம Hon Mr. S Rm இராம சுவாமி செட்டியாா அவாகள கூறுவதாவது

" Tamil language has an originality and a singularity of its own and it cannot be classified under the Turanian Group." etc , etc.,

இததியாதியால தமிழபபாஷையானது மறறொரு பாஷை யின கிளைபபாஷையலல வெனபது தெளிவாம

ஆரியபாஷையினது கலபபிலலாமலே தமிழபபாஷை எழுதற காகும ஆறறல அதனகணணுள வெனறும அஙஙனே, முதல் ஔவையாராகக காணபபடும பணடிதையின நூலகள முதல, பழந் தமிழ இலககியஙகளில பலவும ஆரியபாஷை கலபபிலலாமலே எழு தப்பட்டுளளனவாகவும ஸ்ரீமான செலவகேசவராய முதலியாா. M. A. அவாகளும தனது " தமிழ " எனும நூலிலே நனகெடுத் துக் காட்டியுள்ளாா.

தமிழப் பாஷையானது கிளைபாஷையலல வெனறுணரா விருத்தலின் இப்பாஷையானது யாணடுதிததது எனபதை விசா ரிப்யாம:—

Tamil Studies எனும் நூல 41-ம் பக்கம தருவதாவது "இந்தியாவின் தெனகடை பாகததே புராதனமாயுள்ள திராவிடர்

களின் பாஷை இத்தமிழென்பதாம், எனவே (6) பக்கத்தில் குறித்த செந்தமிழ் கொடுந்தமிழ் நாடுகளைக் கூர்ந்தறிக. கொடுந்தமிழ் நாடெனக்கூறிய குட்டம்—குடம்—கற்கா—வேணா—பூழி யென்பன தற்போதிய மலையாளம் திருவாங்கூர் இராஜ்ஜியத்தைச் சார்ந்தனவாம். அருவா வடதலையாதி செங்கற்பட்டு வடஆர்க்காடு ஜில்லாவைச் சார்ந்தனவாம். சீதம் நீலகிரி மலையைச்சார்ந்ததாம். மலாடு அல்லது மலாடு தென்னார்க்காடு ஜில்லாவைச் சார்ந்தனவாம். பன்றி மதுரையின் வடமேற்கு எல்லையைச் சார்ந்ததாம். பொதுங்கர், ஒலி என்பன பூர்வ இராமநாத தேயத்தைச் சார்ந்தனவாம். (இஃதால் சேரநாடு, சோழநாடு, தொண்டை மண்டலமும் கொடுந்தமிழ் நாடென மயங்கப்படுகின்றன.)

பின்னும், "நெடியோன் குன்றமுந் தொடியோன் பௌவமுந் தமிழ்வரம்பறுத்த தண்புனனாட்டு" என்றது சிலப்பதிகாரம். அதாவது வடக்கே வேங்கடமும் தெற்கே குமரியாறும் தமிழ் கூறு மெல்லை யென்றவாறு.

வேங்கடமெனும் திருப்பதிக்கு மேற்கிலுள்ள மடிக்கரையி லிருந்து, புராதன நம்முத தேயத்தின் வடகிழக்கு பரியந்தமுள்ள தேயங்களும் முப்பாங்கரும் கடலால் சூழப்பட்டுள்ள இந்திய தீபகற்ப (Peninsula) தென்பகுதிப் பாங்கரும் தமிழகம் என்றூர் ஸ்ரீமான் M ஸ்ரீநிவாசய்யங்கார் M A அவர்கள் தமிழின் பண்டைய நாடுகள் இவையென்னல் காண்க. பிரளயத்திற்கு முன்னர் ஜாவா, நியூசிலண்ட், ஆஸ்திரேலியா பரியந்தமும் தமிழ் பரவி யிருந்ததாகவும் தெரியப்படுகின்றது. அங்ஙனே பண்டை நாளிலே வடக்கே இமயமலைச்சாரல் மேற்கே ஆப்கானிஸ்தானம் வரையிலும் பரவி யிருந்ததாகவுந் தெரிகின்றது. தமிழ்மக்கள் பரவியிருந்தமையால் அவர்களது பாஷை யவ்வளவு தூரம் பரவலாயிற்றன்றி ஆஸ்திரேலியா ஆப்கானிஸ்தானம் முதலிய நெடுந்தூரத் தேயங்களும் தமிழகம் எனக் கொள்ளற்காகா.

தமிழ்ப் பாஷையானது மிகவும் பழமையானது என்பதற்குச் சான்ருக, இப்பாஷையானது அந்நாளிலே அநாரியரான வேறு சாதியாராலும் இராக்ஷசராலும் வழங்கப்பட்டிருந்ததாக இராமாயணத்தாலும் (இல்வலன் வாதாபி கதையுரைக்கு மிடத்து) ஸகாந்தத்தாலும் தெரியப்படுகின்றது இதிகாசங்களிலே மிகப் பழமையானது இராமாயணமேயாம் இராமாயண காலத்திலேயே தமிழ்ப் பாஷையிருந்ததென்றால் இது 9000 வருஷங்களுக்கும் முற்பட்டதென்றே கொள்ளற்பாலதாகும். அபிதானகோசத்தாரின் கணிதப் பிரகாரம் பன்னீராயிரவருடம் தமிழ்ச் சங்கத்தின் காலம் என்பதைக் கொள்வராயின் தமிழ்ப் பாஷையின் காலம் மிகை மிகையேயாம் ஆனல் தமிழ்ச்சங்கம் அவ்வளவு காலத்தது என்பது உறுதியாகுமானல் பாண்டிய ராஜாக்கள் பிற்காலத்தில் வந்து அச்சங்கத்தைத் தாங்கினவராதல் வேண்டும் ஏனெனின் இந்தியாவில் குடிபுகுந்தோரெல்லோரும் இற்றைக்குச் சுமார் 5000 வருடங்களுக்குப் பின்னாதானே இந்தியாவுக்குள் புகுந்ததாகச் சரித்திரங்கள் தருகின்றனவாதலால். அற்றேல் பாண்டியா ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவரே யாதல் வேண்டும். இவ்விசாரணையின் பின்வருஞ் சாதி அதிகாரத்தில் சீர்தூக்குவாம்

இத்தியாதியால் தமிழ்ப்பாஷை மிகப்புராதனமான தொன்றேயாம். ஆகையாலன்றே "தமிழ்ப்பாஷையில், காற்று என்னுஞ் சொல்லுக்கு 34 பிரதிச்சொற்களும் அங்ஙனே நீருக்கு ஐம்பதும், மேகத்திற்கு 35-ம் மண்ணுக்கு அறுபத்திரண்டும் மலைக்கு அறுபதும்." * குறிஞ்சித்திணை யுணர்த்த 21. சொற்களும், அசசத்திணை யுணர்த்த சொற்களும் உயர்வினை யுணர்த்த 17 சொற்களும் மலையினை யுணர்த்த 28 சொற்களும். † வருகின்றன வென்பார் பண்டிதர்கள். ஒரேகாலத்து இச்சொற்களெல்லாம் ஒருங்கு பிறந்தனவாகா. ஒவ்

* Tamil Studies

† பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்.

வோர் சொல்லும் ஒவ்வோர் காலத்துத் தோன்றிச் சிலகால மெ
லாம் நடைபெற்று அச்சொல் வழங்கிய மக்களோடு அதுவுமொழி
அவர்க்குப்பின் னெழும் மக்களோடு பிறபுதிய சொற்கள் தோன்
அவையு மவ்வாறே நடைபெற்றொழிய இங்ஙனம் பாஷை நா
ளும் திரிபெய்திவரும் இயற்கைத்தாமெனக். இதனாலே
தமிழ்ப்பாஷை மிகப்புராதனமான தென்றறிக.

பின்னுமொருசார் நோக்குமிடத்து தமிழ்ப்பாஷை அகத்தி
மானுக்கரென்று இயம்பப்படும் தொல்காப்பியனரால் செய்யப்
தென்பதாலும் அப்பெரிய நூலின்கண் வழங்கப்படும் அத்துணை
பலதிறப்பட்ட சொற்களானவை இலக்கியமாய்ப் பொதி
கிடந்திருப்பினன்றி இலக்கண வரம்படையா தாதலினாலும் தமி
பாஷையானது தொல்காப்பியனர் அகத்தியர் முதலிய பிற்காலவ
வாக்கும் முற்பட்டதென்பதே துணிபாம். அங்ஙனே பூர்வீகதமி
வரலாறுகளும் மறைப்புண்டு போயின வென்றும் துணியற் கா
றது நிற்க.

தமிழ், எனுஞ்சொல்லின் அமைப்பும் அதன் பொருளை
சீர்தூக்குவமேல் தமிழ்ப் பாஷையானது மிகப்பண்டைய கா
தொட்டே இலக்கண வரம்புடையது என்று துணிபாமற் வி
கின்றது. ஒரு பொருள் அல்லது ஒரு காரியம் உண்டான போ
அதற்கொரு பெயர் உடன் தோன்றாமற் போகாது. பாஷைக்
தமிழ் என்ற பெயர் எழுந்ததூஉம் தமிழ் தோன்றிய காலத்ததா
யிருத்தல் வேண்டும். "இலக்கியத்தினின்று எடுபடு மிலக்கணம்"
என்றபடித் தமிழ் இலக்கியமாக விருந்தபோது தமிழ் என்பதற்
பொருள், தம்-அம்பன் தகப்பன், தாய் அல்லது தம்-ஆய், தம
தம்பி, தம்பிரான், என்றபடித் தம்-இழு என்பது தங்களி
இனிமை என்று பொருள் படுமாறே தமிழ் என்று பெயர் தந்த
போலும் 'தேனுறை தமிழ்' என்றது கல்லாடம் "இனிமை
நீர்மையுந் தமிழெனலாகும்" என்றது பிங்கலந்தை. பின்

தனிமை யென்றும பொருள படும் இவவாறாக இதறகுப
"ருள் தாவிருந்த தெனனேயோ"

தமிழ எனும சொலலமைதியை நோககுமளவில, த-மி-ழ
ம மூவெழுத்துககளில த + அ = த, ம + இ = மி, ழ் + உ =
, என ஆறெழுத்துககள அமைநதன இந்த ஆறே
முகஙகளாகவும கொணடு தமிழககாசான ஆறுமுககடவுள
யதூஉம ஸகாநதத்தில இந்த ஆறுமுகனே அகத்தியனுககுத
ஓதினானெனறதூஉம, ஆறுமுகனது பெயராகிய குமரன
ற் தா தமிழ இலககணம இருநததாகவும கொளளப
ிறது ஷை தமிழில உளள அ. இ உ. வெனற் மூவெழுத்தாளு
ளயே தமிழ் எழுததுககள எலலாம கொணடுளளதாம எஙஙன
ின் ஒலியுணடாக அஙகாபபு தரும அகாரமானது முத
வும அகா முதல ஔகாரம பரியநதம உயிரெழுத்துப பேதங
ாறறி அவறறுள அய அவ அஃ எனற அயல மூனறெழுத்துக
ளில் ஆதி அகாரத்தை எடுததுத தோறறிக ககாரத்திறகு க கும
காரத்திறகு ச சும முடிவுபோல மெயயெழுத்துககளை வகைபடுத
தொபப, அகாரத்திறகு முடிவுபோல, ஃ எனற எழுத்தை
மைத்தனா. ஆகவே அகரமுதல ஃ பரியநதம அகரத்தின ஆடசி
ஃ என்பதை எடுத்துசசரிபபதால் உதித்தது க எனற எழுத்து
ானபோலும ஃ எனபதற்கு அணிதகே வைத்துளள க என
உச்சரிககுமளவில இககு இசசு எனறறைய விருநதலால
எழுத்துககளுககு முனனே இகரத்தின ஆடசியாம இக் இச.
ஒறறுககளில ஒலி நிரபப உகரந தோனறி இககு இச்சு
வழஙகறகாகினறமையால ஒறறெழுத்துககளுப பினனே
த்தின் ஆட்சியாம ஆகவே இமமூவெழுத்துககளின ஆட்சியே
எழுத்துககளியாவும கொணடனவாகும. இந்த ஆளுகை
த்துககளின் பெருமை காடடுவானபோலுமே ஃ என்ற
புள்ளிகள் தோறறினா என்றுங கூறலாம. இந்த மூன்று

எழுததுககளும " தனிநடங குயிறறுஞ சமபுரம பெருமான்
ருகப பறைகக்ணை அ இ உணுவென, றமாதரு சூததிரம்

திருந்திசை நுணுககச செநதமிழியல பினைச்

பின்ன" என்றபடி பரசிவததின துடியினின்று பிறநததாகக்
னா ததததுவராய சுவாமிகள. பினனும ஆதி பரசிவமே முதற்றமி
சஙகததிறறலைமை பெறறிருந்தாா எனறுங கூறபபடுகிறது. ஆ
சிவமே தமிழாசிரியா எனறவாறும ஆயின இதனபெருமை
சிறிதோ' ஒதது முறைவைப்பாயக கவனிககுமிடகது அ. முதலு
டாகும ஒலியேயாம இ இரணடாவதுணடாகுமஒலியேயாம். இ
குவிய உதட்டகததிருநது வெளிபடும பெறறியது உ, வாறி
இது மூனறாவ துணடாகும் ஒலியேயாம ஆகவே இம்மூன்றெ
துககளையே பாஷாபபெயாககணணே முறைபபடி, அமைத
ளாாகள.

தமிழ் எனபதிலுளள அ. இ உ வெனபதின் பெற்றியி
படியே ாணடுள்ள த- ம- ழ எனபவறறைச் சோாககுவமேல்
எழுததுககளெலலாம, வல்லினம-மெலலினம-இடையினம
மூவகுப்பினதாக வகுககபபட்டுளளதால அவவவற்றுள்ளே ஆ
வெழுததுககளில ஒனறுய தகாரமும, மெலலெழுததாறனுள்
ஒறுய மகாரமும இடை, யெழுத்தாறனுள ஒனறுய ழகா
ஆகமூவினத தொவவோரெழுதது எடுததுப பாஷைககுப்
ராக முறைபபடி அமைததுளளாாகள பின்னும இது (செ
தெனமொழி என்று காடடுவானபோலும செ-ந-மொ-ழி என
ராகவம அலலது தீம-மொ-ழி எனறனராகவும காண்ட
த-மி-ழு என்ற மூவெழுததொருமொழிப பாஷாப்பெயர்
ளிய நுண்ணிய அறிவோ டமைத்த பெயராக விளஙகுகின்றது

இததியாதியால தமிழப்பாஷை அகததியனுருநகுமுன்ன
லததிலேயே இலககணமுடையதாயிருநததெனலாம.

தமிழ் ஒலியெழுத்துக்களின் முதலும் முடிவுமாகத் தோவது
ரப் பியறறும அகாரமேயாம இவவகாரததை வரியெழுததாக
தொடஙகிய ஆசிரியர் வரைவான ஏற்றபோது அதாவது எழுத
ரியை ஓலையினமீது ஊனறிய வககணததில முதல தோறற
ாது, புள்ளியேயாம. இநதப் புளளிதானே வரியெழுததுகக
த முதலும முடிவுமாம.



"உட்பெறு புள்ளி உருவாகுமமே" எனறூா தொலகாபபிய
என்றபடி ● புளளிதானே ○. உருவமாகி உருவ ்தானே
ரியேற்க ൭. கொமபாகிக கொம்புதானே ா காலாகி அமைநத
ா இம்மூனறுமே அகாரமெனற வரியெழுததாய விளஙக
மத்துளளாாகள ஆகையாறறுனே அகரமுடிவாறற முபபுளளி
த்தினை ஆணடு முடிபெனத தாதுளளாரெனலாம

சுருககமாகக கூறமிடடது மெலலின இடையின வெழுத
ளெலலாம வலலினத தொடஙகவும அநத வலலினததுள ககா
யுதவெழுததாம முபபுளளியுள இருபுள்ளி யுளளொடுஙகவும
வொரு புளளியானது, ா ൭. எனவிருாதபடியே புளளியுள
கமாமெனலாம

இததகையதாயப பெருமை வாயதத தமிழ் எனற பெயரின
டைய புராதனததை நனகு காணபிபபதாக விளஙக இருதத
ப் பாவையானது கி மு. 3-4. நூறறாணடிலே யிருநதவராகக
ப்படும அகஸ்தியரால வெளியிடப் படடதெனபது எவவாறு
ருநதும

அகஸதியா எனபாா வடவிநதியாவில காசி(Benares)யிலுள்ள
இருத சஙகததில வேதமேறபடுததிய வியாசரின அகதிராச
ரின் கீழ் ஓரஙகமாக விருநதனரெனறும அஙகே தனது சகபாடி

களோடு சச்சரவிழைத்துக் கொண்டமையால், தான் தென் இந்தியாவில் குடியேறி மதுரையில் முதல் தமிழ்ச் சங்கத்தை யேற்படுத்தினரெனத் (Tamil Studies P. 237) தெரிய வருகின்றது.

ஆரியர் குடியேற்றத்தின் காலம் பற்பல சரித்திரக் கணிதத்தைக் கூட்டியுங் கழித்தும் பார்த்தபோதும் சுமார் 5000ஆண்டு என ஏற்படுகின்றது.

ஆனல் "Origin of Brahmins" Page 46 எனும் நூல் தருவதையுங் கவனிக்க வேண்டியராகின்றேம். இந்நூல் தருவதாவது:

The migration of the Aryans towards India could not have taken place before about 690 or 700 B C.

ஆரியர் இந்தியாவில் குடியேறின காலம் கி. மு. 690 இல்லது 700 வருஷம் இக்காலத்திற் கதிகமாகாது என்றவாறு.

வேதமேற்படுத்தினர் வியாசர் என்றபடியினல் வேதவரலாறு குறித்து நூலை விசாரிக்கு மளவில்

Vedas are supposed to have been composed some 2000 years before Christ, some people even holding that they are as old as 4000 B C

வேதமேற்பட்டது கி மு. 2000 வருஷம் என்ற

இவ்வழக்கோடு பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும் என்ற நூலைக் காணுங்கால் "ஆரியர் இந்தியாவிற் புகுந்த பின்னரே ஆரிய பாஷை முறை செய்யப்பட்டது" என்றறியற்கா கின்றேம்.

இத்தியாதி முரணபடும் காலங்களை யொருபடுத்திக் காணுமமுற்கூறியபடியே 5000 வருஷம் ஆரியர் குடிபுகுந்த காலமாய்த் தீரும். அக்காலத்திலே அகஸ்தியர் இந்தியாவுக்கு வந்தவராய் இருக்குமானல் பிரளய காலமாகிய தமிழ்ச்சங்க பீடமாகிய கபாடபுரத்தைக் குறிக்கும் 8000. 9000 எனப்படுந் தமிழ்காலத்தை என்னென்று கூறுவது?

பின்னும அகஸதியா என்பாா அவலோகிதா எனபாரிடம தமிழ் கறறுககொணடதாக ஜைனா கூறுவா ஜைனமதாசாரியராகிய மகாவீரன் எனபாரது காலம கி மு 5து நூறறாணடென றூட்சின்சன M A F R. G S F R A I துரையவாகளதனது History of the Nation எனும நூலில குறிககினறூா. இதனாலும அகஸதியா காலம மூவாயிரவருடமெனறே தெரிவாகினறது

"About the precise date of Agastyas' migration to the south nothing defnite can be said but as has been pointed out it cannot be earlier than the 5th or 6th Century B. C."

இவவாறுகக தோபபடும அகஸதியரைப பாரத இராமாயண சரிதங்களிலே நுழைதது அவா அககாலததிறகுப் முற்பட்டவா என்றும இனனும அவா திருநெலவேலியிலுளள பொதிய மலையில் வசிக்கினறூா என்றும பொய்ககதை கட்டிவிட்டாாகள்

இதனூலே அகஸதியர் தமிழுககாசிரியா எனபது பொருததமற்றதாகின்றது. பின்னும இவரது மாணாககரெனபபடும தொலகாப்பியா தானும உணமையிலே அகததியரின மாணாககாதானே வென்று நோககுமளவில, தொலகாப்பியததில எஙகினும தமிழ இலககண விதிபபடி அவா அகததிய குரு வணககங கூறினதாகவுந தோற்கிலலை. தொலகாபபியனூரது காலமும இறறைககு 4300 வருடஙகளே யாகிறதாக பணடிதாகள் கூறுவா. இததியாதியால் 9000 வருடஙகளுக்கு முனனே இசதெனனிநதியாவில தமிழ இருந்ததாகவும இதன முதல அதிகாரத்தில கணடபடித் தெனனிநதியமககள் வடதிசையாதி பல்லிடங்களில் சென்று இருந்து வந்தமையினூலே யவவவவிடஙகளில தமிழ்ப்பாஷை பரவியதாமென்றும் துணிதறறககதாகும. ஆகவே முதலஅதிகாரததிற் குறிததபடி ஆரியா, ஆரியரினின்று பிரிநத ஒரு கூட்டத்தாரைப் போலத தமிழா இந்தியாவில் குடிபுகுநதோராகார்.

“முக்கியாம்ஸங்களில் தமிழராயுள்ளோருக்கு வேதங் விருந்தும் மற்றைய ஸம்ஸ்கிருத நூல்களிலிருந்தும் அநுமதிகளும் ஆதாரங்களும் தேடப்புகுவது தப்பு. இந்தியாவின் வடபாகத்தில் வேதகாலத்தில் குடிபுகுந்தோரினின்றும் தமிழர் உற்பத்தியாகவில்லை. தமிழர் நிர்ப்பாதிக்கப் பட்டாவது சுயேச்சையாகவாவது வடக்கினின்று குடியெழும்பித் தெற்கே குடிபுகவில்லை” என்றார் ஸ்ரீமான். P சுந்தரம்பிள்ளை M A யவர்களும்.

ஆதலால் பண்டைப்காலத் தமிழ் மக்களே ஆதிதிராவிடர். குடிபுகுந்து தமிழ் கற்றவர்தாமே வேறு திராவிடர். குடிபுகுந்து தமிழ் கற்றவர்களுள் முதன்மையாக நிற்பவர் ஆரியரேயாவர். சமஸ்கிருத பாஷையாளர்கள் தமிழ் கற்றுக் கொள்ளினும் அவர்கள் திராவிடராகார். இந்திய பாஷையானது பஞ்ச கௌடம் என்றும் பஞ்ச திராவிடம் என்றும் இருவகையாகவே வகுக்கப் பட்டிருக்கின்றது. அவற்றுள் பஞ்ச கௌடமானது சாரஸ்வதம், கன்னியாகுப்சம், மிதிலம், கௌடம் உத்கலம் என்னும் இவைந்து தேயத்தாரின் பாஷை யென்பார். இவற்றுள் கௌடம் என்பது வங்க தேசமாம். வங்கமாவது தற்காலம் வங்காளமென்று வழங்கப்படும் வடவிந்திய தேசமாகும். இத்தேயத்துற்பத்தியான பாஷையாகி அதினின்று கிளைப்பாஷைகள் தோன்றின போலும். திரிந்த அப்பாஷைகளுக்கும் கௌடமென்றே பெயராகிப் பஞ்ச கௌடமென் றழைத்தற்காயிற்று. இதனால் வடவிந்திய பாஷைகளெல்லாம் பஞ்சகௌடமென முடிய அவற்றை யுடையார் பஞ்சகௌடர் என்றே முடியுமாறும்.

இந்தச் சம்பவத்தைப் போலவே விந்தகிரியின் தென் பகுதியாம் தென்னிந்தியாவின் கடைக்கோடி பாகத்தே தமிழ்ப் பாஷை விளங்கி யிருக்க, அந்தத் தமிழ் திரிந்த அடைவே திராவிட மென்றாகித் தென்னிந்திய பாஷையாய் விளங்க அதன் கிளையெனப் பிறந்த தெலுங்கு-மலையாளம்-கன்னடம்-துளு வென்பவற்றையும் உரிமைப் படுத்திப் பஞ்ச திராவிட மென றழைத்தற்காயிற்று.

" பலவுயிரும பலவுலகும படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரமபொருள முனனிருநத படியிருநதது போல்
கன்னடமுங களிதெலுங்கும கவினமலையா ளமுந்துளுவும
உனனுதரத துதிதெழுநதே யொனறு பலவாயிடினும
ஆரியமபோ லுலகவழக கழிநதொழிநது சிதையாவுன
சீரிளமைத திறமவியநது செயன மறநது வாழததுதுமே."

ஏனறா P சுநதரமபிளளை யவாகள்.

தமிழ்ச்சஙகஙகளும தமிழபபுலவாகளும தமிழ நூலகளும நிரமபிய ...ணமைச சாரபால அறியககூடிய தெனனிநதிய வரமபினைத ... திராவிட தேயமெனறும அநத இடததைச சாரநததாயும தமிழின திரிபாயும விளஙகும ஷை பாஷைகளைப பஞச திராவிட மென்றும வழஙகன முறையே தாயப பாஷையாகிய தமிழலலாது வேறு பாஷைகள வேறுத திராவிட மெனறும தமிழ ஒனறே ஆதி திராவிடமெனறும கோடன முறையேயாகும இதறகுச சான ருக இறறைககுந ஏறககுறைய 2000 வருடஙகடகு முனனிருநத ஆதி திராவிட வகுப்பைச சோநத திருவளளுவ நாயனா அருளிய திருக்குறள எனற செநதமிழ் நூலே ஆதி திராவிடாகளின பாஷை யையும அவாகளது குணஙகளமச சிலஙகளையும தெறறென எடுத துக கூறுவதா யிருககினறது இநத ஆதி திராவிடா திருககுறளைப் புகழாதாருமுணடோ? இநதத திருககுறளை ஆஙகிலததில மொழி பெயாத்தவராகிய Rev G U Pope M. A D D. அவாகள, இக்குறளைப் பற்றிய தனது அபிபபிராயங காடடுவதில,

"Sweet to the thought Sweet to the ear Sweet to them outh
Great cure for twof old deed's disease is Valluvar
Sweet kurral Venba verse, with tongue right eloquent,
Set forth, that we the way of good may know."

...படி இனிமையானது மருநது போல்வது சனமார்ககமானது ... சாற்றியுள்ளார், இவ்வண்ணமாக திருககுறளை விசாரித்தா

ரொவ்வொருவரும் அதனைப் புகழுந் தரத்ததாகவே இயற்றினார். ஆதி தமிழரான வள்ளுவனார்.

இதுகாறும் கூறியவற்றால், பாஷையடியே வந்த திராவிடப் பெயரை விளக்கிக் காட்டி ஆதி திராவிடமென்பதை விளங்கக் கூறினோம்

மூன்றாவதாகத் தற்கால இருளவழி வழக்காரும் சாதி பேதத் துதாகத்தால் திராவிடம் என்பது ஒருவருடைய சாதியென அற்றாய்க்கூறும் விபரீதம் நீங்க 'ஜாதி'யெனுமோரா அதிகார முகத்தால் உண்மை ஆதி திராவிடா என்பதை விளக்குதும்.

## மூன்றாவது. திராவிடா.

### ஜாதியதிகாரம்

மள்ளா எனுஞ்சாதியார் ஒருவருளரென்றும் அந்த மள்ளர் என்னுஞ்சொல்லோடு திருவெனும் அடைச்சொல் சேர்த்த திருமள்ளர் என்றிச் சிதைந்து சிதைந்து திராவிடா என்றாயிற்றென்பார் ஒருசாரார். ஆயின் இந்த மள்ளா எனுஞ்சாதியார் எத்தேயத்தாரென நோக்குழி, "குசிநகரத்திருந்த மள்ளாகள் பத்தரின் உடலை சுட்டெரித்தார்கள் என்று (Early History of India By Mr V A Smith) தருகின்றபடியால் இதன் ஆதாரவின்படி மள்ளா தேயம் குசிநகரம் எனத்தெரிகிறது. இந்தக் குசிநகர மாவது காசிக்கு 120 மயில் தூரத்ததென்றும் ஷைபுத்தகமே தருகின்றது

ஆகவே மல்லா அல்லது மள்ளாகளின் தேசம் நாம் முந்தற் காரங்களில் காட்டியபடி வந்தேறிகளின் இடமாகிய வடவிந்தியாவே யாதலைக்காண்க. ஆதலால் முந்துகூறிய செழும்பி ளாதாரவின்படி இந்த மல்லா பெயர் கௌடரென்றுதற் பாறித் திராவிடரென்றகாகாது. ஆதலின் தென்னிந்திய ஆதி தமிழர்பெயரானே திராவிடா என்பதை உய்த்துணர்க.

1912-ம் ௵ அக்டோபர் ௴ பிரசுரமான மகாபோதி சங்கத்தாரின் பிரசுரப் பிரகாரம "புததா கி.மு. 578 ௵ ல காசிநகரில் பிறந்தார்" எனறமையாலும, காலஞ்சென்ற H. S ஆலகாட்டுதுரையவர்கள் புத்தரின காலம் கலியுகம 2478 ௵ எனகினறமையாலும, பின்னும ஒகடோமஸ்கி யெனபவா புததரது காலம குறிதத ஷைகணிததோடு 1000 வருடஙகளுககு முன்புளளதாக கருகினறமையாலும, தீாப்பாக சராசரி இறறைக்கு 4000 வருடங்களுககு முன்னிருநதவராவா புததபிரான.

இக்காலததில மல்லரெனுஞசாதிப்பெயர் கேட்கபபடுகிறது. அஃதோடு அக்காலததிலே "மகத தேசாதிபதியாகிய அஜாத சததுரு வேசாலியிலுளள லிக்காவிஸ் (Lechavis) கபில வஸதுவிலுளள சாக்கியர்கள், அளகபபாவிலுளள புயூலிஸ் (Bulis) இராமகாமாவிலுளள கோலியர் (Koliyar) வேதாதிப்பாவிலுள்ள பிராமணன் இவாகளெலலோரும ஷை புததரின அஸதியிலோர்பாகம வேண்டினா."

எனப்படுவதால மல்லாகளனறி யநேக சாதிகளும அநநாளிலேயே வடவிநதியாவினகண இருநதனா எனறுதெரிகிறது. அதுபோலவே தென்னிநதியாவில கனனியாகுமரி தொட்டு 8000 மயிலபரப்புள்ள நிலமிருநததாகவும முனனே காட்டினேம். இது நனகுதேரப் பின்வரும வியாஸததைக கவனிபபீரகளாக.

The identity of certain fossil flora and faune in India and South Africa supports the theory of a former land connection, the fragment of which survive in Madagascar the Seychelles and other continental islands. At the same period an Indo-Austral continent linked together New Guinea, Australia, Tasmania and New Zealand, so that a continuous land surface permitted migration of the Hominidol in various directions. Apart from the impermanence

incidental to traditional forms the enormous changes in the distribution of land and water have obliterated traces of origins and movements. The starting point in the enquiry is unknown and may never be discovered as it may be buried in the bed of the Indian ocean or of some other marine or lacustrine basin."

என்றார் எட்வாட். கிலாட் (தனது Magic & Religion என்ற வியாசத்தில்) ஆதலால் தென்னிந்தியா குமரியோடு முடிந்ததாகாமல் ஆஸ்திரேலியா பரியந்தம் நீண்டிருந்ததாகும். அங்ஙனே ஜனப்போக்குவரவும் உடைத்தாயிருந்திருக்கலாம், தமிழ்ப்பாஷையும் சங்கமிருந்த தமிழகத்தினின்று விசாலித்துப் பரவியிருக்கலாம் தமிழ் ஐம்பெருங் காப்பியங்களிற்சிறந்த மணிமேகலை சிலப்பதிகாரம் பிறந்தஇடம் சேரநாடாய்கருவூராயிருப்ப (திருவஞ்சைக்களம்) இவ்விடத்தில் தமிழ் மருவி மலையாளப் பாஷையானதுபோல தூரநாடாகிய நியூஜீலண்ட் முதலிய இடங்களிலும் தமிழ் மருவியிருக்கலாம் அங்ஙனே தமிழ் அரசனாகவிருந்த இராவண தேசமானது சிங்களதேசமானதும் அதற்கு அணித்தாயுள்ள யாழ்ப்பாணம் செந்தமிழுடைத்தா யிருப்பதும் சாதூக்கற பாலனவாய இருக்கின்றது.

என்னே கிரேதத்தில் ரேணுகையே கூற்றுவனும்
தன்னோ திரேதத்தில் ஜானகியே—பின்யுகத்தில்
கூடுந் திரோபதையே கூற்றாங் கலியுகத்தில்
வீடுதோறும் பெண்களே யாம்.

என்ற நீதிவெண்பாவிற்கண்டபடித் திரேதாயுகம் ஜானகிராமன் காலம் என்றவாறுகின்றது இதனுள்கண்ட ரேணுகையென்பவள் ஜமதக்கினியின் மனைவி, பரசுராமனின் தாய் இரண்டாவது ஜானகி இராமனுடைய மனைவி. திரௌபதி பஞ்சபாண்டவரின் மனைவி. இவர்களது சரித்திரங்கள் ஒன்றனோடொன்று

முன்னும பின்னும் பினனுக்கு முன்னுமாக முரண்டுகிடப்பதும் யுகமொன்றுககு விரிததுள்ளதாயுள்ள வருடத தொகையும் பின்கண்டபடி,

கிரேதை 1 728,000 வருஷஙகள
திரேதை 1,296,000 வருஷஙகள
துவாபரம 864,000 வருஷஙகள்
கலி 432,000 வருஷஙகள். (என)

அளநது கொட்டிககிடககவும அவறறை நமபவும ஆட்களிருப் பதால இவவளவு சாமாததிய பொய்ககாலஙகளே நாமெனன வென்று தோவதோ அறியிலம். கிடககட்டும ஈணடைககு வேணடியது அநதததிரேதாயுகமே ஆனுல அது அவவளவு வருடஙகளைககொணடதாகா, எனறுமடடுஞ சொலலககூடும அதிகமாகப பாாககுமிடததில இராமனகாலம 5,000 ஞூததிற்கு அதிகப்படுவதாகவிலலே அதறகு முனனே யிருநத தெனனிந் திய பரப்பெலலேயில மிகுபாகம இராவண ராஜஜியமாகவே யிருநததாகப் பினவருபவறறுல தெரிகிறது

அதாவது —விநதியமலேயின தெனபாகமுழுவதும (இலங கையுமசேர) இராவணனது இராஜஜியமாகவிருநதது இதன் கிழககு கடலணித்தான பாகம, நிறததால் வானரமெனறு அழைககபபட்ட திராவிடர்களின இருக்கையாக விருநதது.

குரஙகுகளேபபோனற இநததிராவிடர்களின புராதன இடம ஷே தெனனிநதியா பாஙகா தாமோவெனின, இலலே. யெனறே வாலமீகியாரது வாககினுல தெரியவருகிறது. எப்படி யெனறுல கிஷகிநதையில சுககிரீவ மகாராஜன் சீதாபிராட டியைத் தேடிவரும்படி வானரவீரர்களே ஏவும்போது தென் பக்கமாகச் செலலுதற குரியாரை நோககிச சொனனதாக வானமீகி முனிவர் கூறியவை அடியில வருமாறு :—

அப்பெரிய வானர சேனேயை அனுப்பிவிட்டுக் குறிக்கப் பிலரைத் தென்றிசைக் கேவுவானுயினுன ..................

பின்புஅவன் தென்றிசையில போதறகரிதாயிருககுமென்பதைப் பற்றி அவாகளை நோககிச சொலலத தொடஙகி பலவித மரஙகளும் கொடிகளும செறிநத ஆயிரஞ் சிகரஙகளையுடைய விநத மலையையும், பெருமபாமபுகள தஙகுவதும கடததறகரியதுமாகிய நருமதா நதியையும, பெரும பகுதிகளையுடைய வரதா நதியையும மேகலை உதகலை தசாாண முதலிய நாடுகளையும, அசுவவநதி, அவநதி முதலிய நகரஙகளையும நீஙகள காணபீர்கள் விதாபபம ருஷிகம மாஹிஷகம வஙகம கலிஙகம் கௌசிகம, மலைகளும நதிகளும குகைகளுமுடைய தணடகாரணியம கோதாவரி நதி முதலியவறறையும காணபீாகள அவவாறே ஆநதிரம புணடரம, கேரளம, கேரளநதோடு கூடிய பாணடிய நாடுகளையும காணபீாகள, பினபு தாதுககள நிறைநததும விஜிநதிரமான சிகரஙகளையுடையதும பலவாணமான பூககள நிறைநத சோலைகளையுடையதும சநதன வனஙகள் செறிநததுமான அயோமுக மலையைத தேடுஙகள அதனபின் தேவரமபையா வநது நீராடுகினற திவயமான தெளிநத நீருடைய காவேரி நதியை அஙகே காணபீாகள அநத மலயமலையின் சிகரததிலே ஆதிததனுககுச சமானமான மிகுநத ஒளியையுடைய முனி சிரேஷடரான அகஸதியரைக காணபீர்கள், பின் அமமகரிஷியிடததில அனுமதிபெறறுசசெனறு முதலைகள் நிரமபிய பெரிய தாமிரபாணி நதியைத தாணடுஙகள. அநநதி அழகிய சந்தனச சோலைகளால மூடபபெறற திட்டுககளையுடையதாய், கணவனிடததனபுள்ள யுவதியானவள புககம புகுமாறு சமுததிரததிற செனறுவிழும பிறகு பொன நிறததததாயும், அழகுடைததாயும முததமயமான மணிகளால அலஙகரிக்கப்பெற்றதாயும, பாணடியருககு போக்கியமாயுமுளள கவாடத்தையும் பாாககககடவீாகள அதனபின சமுததிரத்தையடைநது காரியநிசசயததைச செயயுஙகள ” எனறவாறும

• [மேகலதேசம்—விநதப்ரதேசம ; உதகலதேசம—கஞ்சம் தசார்ணம—சணடமுகிரியின் கிழக்கு, அசுவவநதி, விதர்ப

இதனால் ஷை வானரத்திராவிடர்கள். விந்தத்திற்கப்பாலைய வடவிந்திய பகுதியினின்று தென்னிந்தியாவுக்குள் புகுந்தவர்களென்றே நன்கு தேற்றமாகின்றது, பின்னும்

Ancient History of India, Prof Max-Duncker.

Page 8 In epic poetry of the Indians we find mention of black inhabitants of Himavat (*i e.*, inhabitants of the snowy mountains the Himalayas) and of black sudra beyond the delta of the Indus.

வடவிந்தியாவிலுள்ள இமயமலைக் குடிகளிலும் கரிய நிறத்தோர் இருந்தனராகக் குறிக்கப்படுகிறது

"*Vibishnan Buddhi*"—By Srimath M S. Purnalingam Pillai Avergal, B A , L T , Principal Camisis College, Tinnevelly.

. . . . "The hardy and enterprising Dravidians, who, from their deminutive size and black or brown colour were poetically described as monkeys Evidently these nigger Mannikins were paying homage to their overlord and writhed under his supermacy."

இதனால் திராவிடர்தாமே ஆரியரால் வானரமென்றழைக்கப்பட்டாரென்று ஏற்படுகிறது

எனவே வான்மீகி பகவானது மொழிக்கிணங்க ஷை மாக்ஸ் டங்கர் தருமாற்றலின்படி வடவிந்தியா வாசிகளானோர் கரிய

---

யம்—(பீரார்), ருஷிகதேசம்—பங்காளப்பகுதி, மாகிஷதேசம் லிங்கம்—வடசாக்கார், கௌசிகம், ஆந்திரம்—தெலுங்கா ணம்; புண்டரம்— வடதேசப்பகுதி, அயோமுகமலை—குடகு மலை அங்கம்—கிழக்குபீரார்; வங்கம்—பங்காளம்—கலிங்கம்— ஒரிஸ்ஸா.]

நிறத்தோர் என்றும் ஷை விபீஷண புத்தி. தருமாற்றலினைபஞ் கரிய நிறத்திராவிடரே வானரமென்று கொள்ளற்காகின்றமையாலும் ஷை Ancient History of India. Page 25.

The Southern Indian, the Non-Aryan population, who were at that time for less broken up in the Deccan by Aryan and other settlers than now and must therefore have existed in far greater masses were not quite so black as the Ethiopians (the Negrœs)

வடநாட்டார் புகுமுன்னர் பண்டு தொட்டிருந்த ட திராவிடராம் தென்னிந்தியர், கரியரேயாயினும் ஷை வடவாசிகளுக்கு வேறும் நிறத்தவர் என்பதாலும் ஆதி திராவிடர் என்பவர் இந்தத் திராவிடர்களுக்கு வேறானவரென்றே தேற்றமாகும்

இராவணனது கொடுமையைச் சகிக்காதிருந்த திராவிடர்களென்னப் படுவோரும் இந்த வானரத் திராவிடரைச் சொந்தமக்களாகவேயிருந்து இச்சேனைகளுக்குச் சற்று முன்பதாகத் தென்னிந்தியாவில் வந்திருந்தவர்களாகவே கொள்ளலாம். அநாகரீகமாயிருந்த வானரமக்கள் நாகரீகநிறைந்த இராவணன் ஆட்சியில் இருந்தல் அவர்கட்கு விபரீதமாயத்தான் இருந்திருத்தல் வேண்டும்

ஆகையாற்றானே இவர்கள் அடிக்கடி இராமனிடஞ்சென்று இராவணனையடக்க முயன்றதுமாம். இவர்களது முறையைக் கேட்டு இராவணன்மீது படையெடுத்த ஆரிய மகனாகிய இராமன் ஜெயம் கொண்டதாகவும் ஆதாரம் ஏற்படவில்லை. இந்தப் போரினால் இராவணனது தம்பியாகிய விபீஷணனுக்கே அரசு கிடைத்ததாய்த் தெரிகிறது. இவ்வாறு தோல்வியுற்ற ஆரியர் தம்பாலுள்ள அழுக்காற்றுப் பகைமையினாலேயே இராவணனை அரக்கனென்றும் கொடியனென்றும் பலவாறாக இழித்துக் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

இராவணன், பததுத் தலைகளையுடையவன என்பதால நான்முகன் ஐநதுமுகன் ஆறுமுகன் எனறு கடவுள்ஞான அபிதானத தபடியே இராவணன் மகா புததிசாலியானவனெனறே தெரிய வேண்டியதாகிறது இதறகேறப விபீஷணனைப்பறறிப் புகழுமிடததே அவனை யொரு மகாஞானியென்றே இராமாயணம் பேசுவதால அவனது தமையன, ஆரியா கதை தருமவவளவு காடியனுக இருநதிரான பினனும இராவணன் உலகந ..னறி மககள பெருகிய முதறகாலததிலேயே சீருஞசிறபபும ..நத அரும்பெறல உயரிய தமிழமொழியாளனுக விருநததா.. தெரிவாகிறது இவனது கோட்டை கொததளம அரசி.. ..ல முதலிய நாகரீகஙகளைப்பறறி இராமாயணமே நனகெடுததியம்புகினறது சீதாபிராட்டியை மீடடுககொணடு வரசசென்ற அனுமான இலஙகையுடசெனறபோது இராவணனது அரண மனைமுழுதும திவயபரிமள முளளதாகவும ஸபடிககலலாலும யானைததநததாலும பொனனுலும்வெளளியாலும முததாலும பவளததாலும அலஙகரிககபபட்ட அநேகஸதமபஙகள நிறுததிய கட்டிடஙகளைககணடார, அபபொழுது அவவனுமான கணட ஸ்திரீகள அனைவரும உததிருஷ்டமான பதமினீ ஜாதியைச சோநதவாகளாதலால அவாகள உறஙகுகையில பலலைககாண பித்தல அரைககண திறததல தூககநத வாயுவை வெளியிடுதல துர்ககுணஙகளிலலாமல பவளததளிாபோனற அதரஙகளால மூடப்பட்ட பற்களோடு தாமரை மொட்டுபபோல அழகாய மூடபபட்ட நேததிரஙகளோடும தாமரைப புஷபஙகளினினறு வீசும பரிமளததோடும நிததிரை செய்வதைக கணடாா

இராக்ஷஸாதிபதியான இராவணனைபபாததாவாகவடைநது சுகித்துவருகிற அவவரணமனையிலுள்ள சுநதரிகளைக்கணட அனுமான் புணயபரிபககுவததால ஆகாசத்தில் நக்ஷததிரஙகளாய விளஙகிப் புணயம நீஙகினவுடன சேஷமான ஸவல்ப புண்யத்தோடு பூமியில விழுகிற நட்சததிரஙகள தானோ வெனறெண்ணினர். (வாலமீகி ராமாயணம சுந்தரகாணடததை இததோடு

வாசிததுணாக) இராவணனது நாயகியாகிய வணடோதரியைப் பாாதது இவளதானோ ஙஞசீதாதேவியெனறெமாநதாா.

எனறவாறுகபபுகழபபடட திவவியராஜஜியம இராவணனு டையதாயிருநதது பினனும இவன சிவபிரானிடததே மிக்க பக்தி வாயநதவனுகவிருநதான, எனபதாக வரதுஙகராமபாண்டி யனவாககாலுமமற்றும சிவபுராணஙகளினுலும அறியபபடுகிறது அதனைப பினனா விளககுதும

இததகையபேரரசனை, வலிமையிலமிககானை,கொடியவன எனறதும இழிவாய அரககன எனறதும நாம கவனிககவேண் டியவராகினறேம

"ஆரியா வருமுனனறு தமிழா அரசியல முறைபிறழாது வாழநதனராகலின அவரை ஆரியா அசுரரெனறு பெயரிட்டு வழஙகினுா இருககுவேதததின முதல ஒனபது மணடிலஙகள் முழுவதும அசுர வெனனுஞசொல வலியஅலலது அதிகாரமுடைய எனும பொருளில உரிசசொலலாய வழஙகபபடடு வருகினற தெனறும உரோமேஷ சநதிர தததரும இனிது விளககினுா " எனபபணடைககாலததமிழரும ஆரியரும எனும நூலிலே காணபபடுகினறது, பினனும

"குறிபிறு எனபது மிறிறு எனவும விசிறி யெனபது சிவிறி யெனவும எழுதது நிலைமாறி வருதறபோல "அரசு" எனுநத மிழசசொல அசுரவென நிலைமாறி இருககுவேதததில வழஙகப படுவதாயிறறு."

எனறும பணடிதா செளரிராயம அவாகளின நுண்ணிய ஆராயசசியுந தொனிககினறது.

"எனவே தமககு எதிரே நாகரீகம நிரமபி விளஙகுகின்ற தமிழ அரசரைத தமககுத தலைவராகக ஒருபபடடுப் பண்டை ஆரியமககள அனனோரை அசுரா எனவழஙகினுா. பிறகால[illegible] வடமொழியில மாததிரம அசுரா எனும அசசொலலின உ[illegible] சிப்பொருளைமாறறி அதறகு அரக்கரெனப் பொருளகட்டி விட்டாா."

இதன் சாராம்சமாகவே Rev. Dr Macdonald என்பவர் Brahmans of the Vedas என்னும் தனது நூல் 35-ம் பக்கத்திலே கூறுவதாவது

"On unquestionable authority that the Asuras of the old Hindus were none other than their brethren of Persia".

அதாவது அசுரரென்று பண்டைய இந்துக்களால் வழங்கப்படுபவர் பாரசீகதேயத்துத் தமது சகோதரர்களே யாவரன்றி வேறெவருமல்லரென்று துணிபு என்றவாறும் அந்த Rev. மக்டானல்துரையவர்களின் கருத்தாவது இந்துக்களானவர் பாரசீகதேயத்திலிருந்து இந்தியாவுக்குட் பிரவேசித்தமாந்தவர்கள், அந்தப்பாரசீக தேயத்து மக்கள்தாமே அசுரராவார் இதனையறியாமல இந்துக்கள் அசுரரை இழிவாகக் கூறுகின்றார்கள் என்றாற் போலும்

இவற்றால் ஏற்படுவதாவது ஆரியராதி சாதிபேத இந்துக்கள் பலதேயத்தினின்று இந்தியாவில் குடியேறினவரென்று நாம முன்னர் கூறியவற்றோடு இந்தப் பாரசீகதேயமும் அனேரது புராதன இடமாகக்குறித்துக் கொள்வதோடு அசுரர் எனப்படுமோர் இனத்தாருளரும் ஆதியசுரர் நவீன அசுரர் என்றுங்கொள்வதற்கிடமாகின்றது இங்ஙனம சீதாக்குயமாயின, இந்தியாவின் இதிகாசங்களில மிகவும் பழமையானது இராமாயணமே! இந்த இராமாயணத்திலே, உத்தரகாண்டத்திலே,

"புலவா ளரகக னிருநா லிரட்டி யொருநாலு பெற்ற புயமும்
தலையான பத்து முறவால விசித்த சயவாலி கொற்றமுழுதும
மலையா சலத்து மறையோ னுரைப்ப வதெலா மனத்திலுணரா
நிலையா லரக்கா திறமவே றறுத்த திறலானிவை யுரைக்கும்."

என்ற பாட்டிலே குறிக்கப்பட்டுள்ள இராவணன் எனும் அரக்கனே ஆதியரக்கன் ஆகின்றதையுங் காண்க.

அசுரன் அரககன எனுஞ்சொறகள் சிலகால நற்பொருளுடையதாகவும, பிறறைய காலததில தீயபொருளுடையதாகவும திரிதறகிருநத தெனனையோ வெனின, எலலாசசிலமுழ ஒருவருடைய இராவணனமீது படையெடுததாராகிச செயமபெறறு வாளாப்போநத இராமன வகையராம ஆரியாகள தாம பிழைத்துககொளளும உபாயததை நாடிப பலதநதிரஙகளாறறி இராவணனது மதமாகிய சைவததை அநுசரிததுக கொணடவராகவும இராவணனது பாஷையாகிய தமிழப பாஷையைப புகழகின்றவராகவும இராவண வகையாரை மிகக நேசிபபவராகவும நடிதது தமதுளளததில வஞசததையே இருததி பாாவைக்குச் சாதுகளாக விளஙகி அரசினததாரை அஙஙனே தமவயபபடுததி, அரசவையில தாமு மிருநது கொளளறகான வழியையத தேடிக் கொணடனா

பினனா இவாகள தமதுளளததுளள வஞசததை நிலைநாட்டவும இராவணன சநததியின குடியைக கெடுககவும தருசசததியாரே தலை யெடுககவுமாகினற வழியைத தேடினவராய் முதலாவது தஙகளின வாசஸதானம தனிமையாக இருததல் வேணடும, அதாவது இராவண குடிகளுககும அலலது திராவிட குடிகளுககும அபபால தாம வசிததலே தமது காரிய சிததிககாதாரமாகும எனறபடிச சோநது வசிபபதால சேரியென்றுவழஙகபபடும விடஙகளுககனறு தமககாக அகரம் என்றோர் இடததை ஏறபடுததிககொண்டு, அவவிடததிலே இவாக கலநது புராதனசரிதஙகளைப பாழபடுததறகான உபாயஙகளைத் தேடிப பேசசு வழககறறதாயத தெனனிநதியாவுககுப் புதிதுயுள்ள தமது சமஸகிருத பாஷையில, இககாலததிய சிறுாகளும் நமபறகாகாத புனமைபபொய்மொழிகளை அளவிடறகாகாதபடி அபூரியிதமாக நுழைததுத தமது புராதனப் பெருமை தமது மததகின பெருமை, தமது ஜாதிப பெருமை யெனறு பலவற்றைக் கற்பிததெழுதி வைததுககொணடார்கள் எனலாம்.

உதாரணமாகப் பாரகுமிடததது பிறகாலததிய நூலாகிய பிங்கலநதையுள்ளும, "மிலேசசராரியா" என்றனனுரை இழிததுககூறியிருகக, முறபோநத வதிகாரஙகளில இவாகளது புராதான இடமும குடியேறிய காலமும தெறறெனககாண விருகக, இநத ஆரியாகள லடசததது லடசககணககாக வருடங களைத தொகுததது யுகம எனறோ படிவாயலாக அளநது கொட்டி 11 லட்சம 12 லட்சம வருஷஙகளுக்கு முனபதாகவே தாஙகள இநதியாவில இருப்பதாக வரைநது வைததுககொண டனா.

சிலவநதஞகிய இராவணனது காலததிலேயே கடவுள—ஆனமா—கனமம எனும முபபொருள விளககமாகிய சைவசமய மானது நினறிருநதது எனனே! சிவபிரானிடததே செயற கரிய தவஙகிடநது மாபல லிஙகததை இராவணன பெறறு னெனறும

இராவணனது மனையாளாகிய வணடோதரி சிவபிரானைத தனனிடம குழநதை வடிவமாக இருககபபெறறுளளனறும நனகு தெரிய விருககினறது பினனும சைவசமயமானது மிக வும பழமையான தென்னிநதியாவின மாாசகம ஆரியா குடி புகறகுமுனனரே இவவிநதியாவில இருநதிருககும மாாககம, பிராமண மதததிற சமபநதபபடாத மாாககம எனறவாறுக Dr போப் துரையவாகள தனது திருவாசக மொழிப்பெயாப பிலே கூறுகினறா

"The tamils have developed a religion of their own independant of Brahmanism from the earliest period and that Saivism is the old prehistoric religion of South India essentially exhisting from pre-Ariyan times." (Dr. Pope)

பினனும ஜீவகாருணயதாதா புததபிரானது திருமொழியாம் பௌததம, அசோக சககிரவர்ததியின குமாரன மஹிநதன்

னவபனால் தென்னிந்தியா (Ceylon) வுக்குட் சென்று போந்ததாயிற்று. அசோக சக்கிரவர்த்தியின் ஆட்சியானது இற்றைக்குச் சுமார் 2192 வருடங்களாகின்றன.

இந்த அளவினையுடைய காலத்திற்கும் முற்பட்டதாய் அதாவது 2492 வருடங்களுக்கு முன்பதாகவே சைவசமயமானது அந்த ராஜ்ஜியத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது. இதற்குச் சான்றாகத் தற்போதும் காட்சியாயுள்ள இலங்கை அநுராதபுரத்தில் பிரசித்தியுற்ற ஈசுருமணியென்ற திருக்கோயிலின் கற்பாறைகள்மீது வரைந்தெழுதப்பட்டுள்ள சிவன் பார்வதி நந்தியென்னப்படும் சைவ விக்கிரகங்களே விளம்புவதாக விருக்கின்றனவென்று கண்டோர் கூறுகின்றனர். 1909-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திய Buddhist Review (251) பக்கத்தைக் காண்க.

பின்னும் இந்நூல் 6-ம் பக்கத்தில் குறித்துள்ளபடி தென்னிந்தியாவின் பகுதியாய இடங்களில் சைவசமயமே புராதனமாயிருந்ததாகவும் பின்வருபவற்றால் தெரியவருகிறது.

* அதாவது கி.பி 875-ஆண்டு தேசத்தில் அகப்பட்ட சிலா சாசனப்படியும், ஆங்குள்ள உலோகேஸ்வரமென்னும் விக்கிரகத்தின் பெயர்சார்பினாலேயும், ஜாவாவிலுள்ள Mr Kern துரையவர்களின் கருத்தின்படி பௌத்தம் சைவம் ஒன்றற்கொன்று அந்நியோந்நியமுற்றதென்ற அபிப்பிராயப்படியும், ஆண்டு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பௌத்தம் நிலைபெற்றதாயினும் சைவத்திற்கு நிகர விதிமுறைகளற்றதாயிருந்தது என்பதினாலேயும் ஆங்கிருந்த இலிங்கம், பிரமா, விஷ்ணு, புத்தர் இவர்களின் விக்கிரகங்களினாலேயும், புத்தராஜன் என்னப்படும். முதலாவது சூரியவர்மன் தனது மரணத்தின் பின் வெளியான நிர்வாணபதா வென்றகோவில் மூலஸ்தான சிலாசாசனத்தில் உள்ள சுலோகங்களிலே யொன்று சிவனுக்கும் மற்றொன்று புத்தருக்

* Prof. Louis. Finot. Buddhist Review.

கும் பின்னுமொன்று சைவாசாரியருக்குமாக வரைந்துள்ள விளக்கத்தினாலும் சைவசமயம் யாதொரு சங்கையுமறப் புராதன சமயமென்று துணிந்துரைக்கலாம்.

சைவசமயமானது தென்னிந்திய சமயமென இதனுக்குத் தோற்றமாகின்றமையால் இது ஆதி திராவிடர்களின் சமயமென்றறிக.

எபிரேய பாஷைக்குக் கிறிஸ்து மதமும் அரபி பாஷைக்கு மகமதிய மதமும் பாலி பாஷைக்குப் பௌத்த மதமும் எப்படி உரிமையுடையதாக விளங்குகின்றதோ அதுபோலக் குடியேறிய ஆரியர்களது சமஸ்கிருத பாஷைக்கு இந்துவேதமும் ஆதிதிராவிடர்களின் தமிழ்ப் பாஷைக்குச் சைவசமயமும் உரிமையுடையதாகும்.

தமிழ்ப் பாஷையையும் உயரிய சைவ சமயத்தினையும் உடைய ஆதிதிராவிட மன்னனாகிய இராவணனுக்கு விரோதிகளாய் எழுந்த இராமலக்குமணரை யுள்ளிட்ட ஆரியரெனும் பிராமணர்கள், அவற்றின் உண்மை விளக்கத்தை மாற்றி, தமிழும் சைவமும் மற்றுள்ள இந்தியவளம் எல்லாவற்றிற்கும் தாங்களே காரணமென்றும்.

பல பிதற்றுரைகளைச் சமஸ்கிருதத்தில் முன்னடியே நுழைத்து விட்டனர். ஊறுகாய் உணவுக்கு உதவுகின்ற முறைப்படிப் பின் தோன்றிய ஆரியர்கள் தமிழ்ப் பாஷையானது சமஸ்கிருதத்தினின்று ஆரியராய அகஸ்தியராலேயே சிறப்பிக்கப்பட்டது; சைவசமயமும் அவ்வாறே சமஸ்கிருதத்திலிருந்தே தமிழில் மொழிபெயர்த்தெழுதற் காகின்றது என்ற, படிற்றுரைகளை இக்காலத்தில் பரப்புகின்றனர் யாம் இதுகாறும் கூறியவற்றால் ஆரியர்களின் உண்மை வன்மை எவ்வளவிற்றெனல் வெளியேயாம். பின்னுஞ் சில கவனிப்பாம்.

“ஆரியர்களது புராதன வேதமாகிய இருக்குவேத முழுவதையும் துருவித் துருவிப்பார்ப்பினும் சிவம் எனும பதம்

பொருள் இயல்பு காணப்படமாட்டாது என்றார் சைவத்தில்லின் ஞானசூரந்த அரும் முதலியார் சுவாமி. வேதாசலம். அவர்கள் பண்டைக்காலத்தமிழரும் ஆரியரும் எனும் நூல் 31-ம் பக்கத்தைக் காண்க

"ஆரியர் இந்தியாவிற் புகுந்தபின்னரே ஆரியபாஷை முறைசெய்யப்பட்டது"

"ஆரியர் வருதற்கு முன்னரே தமிழர் மிக்க நாகரிகமுடையராய் இருந்தனர் என்பது இருக்கு வேதத்திலேயே இனிது அறியப்பட்டதொன்றும் ஆரியர் சிந்துநதிக்கரையில் வந்து குடியேறிய காலத்தில் உள்நாட்டில் இருந்த தமிழர் எழுவகை அரண்மனைகளும் தொண்ணூறு கோட்டைகளும் உடையராய் வாழ்ந்தனரென்று இருக்குவேதம் உரைதருகின்றது" என்றார் பண்டிதர் சௌரிராயம் அவர்கள் "உபநிடதங்களில் பெரும்பான்மையானவை வெண்ணிறப் பரதேசிகளான ஆரியருக்கு முற்றும் புறம்பான வேறொரு ஜாதியாரால் உற்பத்தியானவைகளென்பதற்கு மிகத்தெளிவான சாக்ஷியங்கள் அவ்வுபநிடதங்களிலேயே இருக்கின்றன" என்றார் P சுந்தரம்பிள்ளை M. A. யவர்கள்.

இவற்றால் தமிழ்ப்பாஷையும் சைவசமயமும் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்துதவுகின்றோம் எனக்கூறும் ஆரியர்களின் உண்மைத்திறம் நனகு தெரிகின்றதன்றோ ?

உதாரணமாக தென்னிந்திய சரிதமாகிய திருவிளையாடற் புராணத்தை இவர்கள் ஆலாசியமான்மியம் என்று சமஸ்கிருத பெயர்புனைந்து அதனைத் தமது நூலென்று தமிழர் அறியுமாறு விவகரிப்பதும், நாயன்மார்களெனப்படும் அறுபத்துமூவரும் தென்னிந்தியாவில் வசித்தவர்களாயிருக்க அவர்களது சிவபத்தி விளக்கத்தைக்காட்டும் பெரியபுராணமென்பதையும் தமது சமஸ்கிருத பாஷாப்பெயராய பக்தவிலாசம் என்றழைத்துத் தமிழர் மருள விவகரிப்பதும், ஆதிதமிழ அரசனாகிய

[illegible]னது சங்கீத நூலுக்கு இராவணீயம் என்று சமஸ்கிருதப் பெயர் புனைந்து தாங்களே அதை முதல் எழுதினார்களென்று வைத்திருப்பதும் ஆகிய இவற்றையெல்லாம் நாம் உய்த்துணருங்கால், ஆரியர்கள் பண்டைய தமிழ் நூல்கள் பலவற்றையும் காலவடைவில் தங்களது க்ஷேமத்திற்கு இயைபாகும் வண்ணம், தங்களுக்குத் தோற்றியபடியே கற்பனை பல புனைந்தித் தம்மின் தலைமையே தலையாம் வண்ணம் மருட்டிவிட்டார்கள் எனலாம்.

"Ramayana and Mahabharatta. Neither of them has come down to us in its original form. Additions, interpolations and alterations seem to have been made from time to time to the Mahabharatta till the 10th or 11th century A. D. and to the Ramayana at least up to the 2nd or 3rd century which have given rise to many anchronisms

[Tamil Studies, Page 51].

ஆரியர்கள் இந்தியாவின் பழஞ்சரிதைகளாகிய இராமாயணம் மகாபாரதம் என்பவற்றைக் காலத்திற்குக் காலம் மாறுபடுத்தி, அவற்றின் உண்மையறியற்காகாதபடிப் பெரிதும் மயங்கச்செய்துவிட்டனர். கம்பர் இராமாயண மெழுதியதும் இற்றைக்குச் சுமார் 735 வருடங்களேயாகின்றன.

புராதன சமயமாகிய சைவம் பிராமண மதத்திற்கு முற்பட்டதாயிருந்ததாலும் இராவணனாதியோர் சைவர்களாகவிருப்பதினாலேயும் இராவண விரோதிகளாகிய ஆரியர் காலதேசவர்த்தமானத்தை எண்ணியஞ்சினார்களாகச் சைவத்தை அனுசரித்தவர்களாகவும் அல்லது, சைவசிறப்பை யுள்ளவாறுணர்ந்து அனுசரித்தவர்களாக இருந்தும் பிற்காலத்திலே தந்தலைமை எங்கும் ஓங்கும்படியாகப் பிரமம், விஷ்ணு, உருத்திரன் என மும்மூர்த்திகளைக் கற்பித்து சமஸ்கிருதத்தில் கதை கட்டினர். இதன் கற்

பித்தனை போக்குமின். முதலாவது சைவ சமயம் இருந்திரு ஆரியர்கள் மாற்றித் தந்தலைமையே விளங்கும்படி முதலாவது தங்கள் தந்தையாகிய பிரமாவே முதல் கடவுளென்றபடி யமைத்தனர். இரண்டாவதாக வளங்கெழுமிய இந்தியாவில் தாங்கள் இருந்துவாழக் காரணமாயிருந்த இராமனைக் குறிப்பான் விஷ்ணுவென்றார்கள். மூன்றாவது சிவனைக் கடைசியில் வைத்தாராக உருத்திரன் என்றார்கள்.

இவர்கள் இவ்வாறாக மும்மூர்த்திகளைத் தாபித்துக்கொண்டு மும்மூர்த்திகளுக்குக் கோயில்கள் கட்டுவித்து அவற்றிற்குத் தங்கள் எண்ணம் போனபடிச் சாதியாதாரக் கதைகளையும் ஏற்படுத்தி அக்கால அதிகாரிகளாய் இருந்தவர்களை மகிழ்விப்பாராக அன்னோரின் பூர்வ ஜென்மம் புண்ய ஜென்மமென முகஸ்துதிகள் பலபுரிந்து மும்மூர்த்தி கோயில்களைக் கட்டுவித்து அவற்றைத் தமது (Office) ஆபீசுகளாகச் செய்து தலைமை வகித்துக் கொண்டு சாதி பேதங்களை நிலைபடுத்தும் ஒரு நோக்கத்தையே கொண்டவர்களாக இருந்தார்கள். அக்கால சைவசமயமானது ஏக கடவுள் வணக்க முடையதாக விருந்தது. சைவசமயங் கொண்ட கடவுள் இலக்கணமானது தற்போதிய நாகரீக முதிர்ச்சியிற் பெறப்படும் மாசிலாத்தன்மையைப் பொருந்தியதாம்.

"காணவுங் கருதவும் படாத முதல்வனுக்குத் தாம் நினைத்தவாறு உருவங்களை சமைத்து வணங்கல் பொருந்தாதாகலின், அப்பரம்பொருளை ஒருபிழம்பாகக் கொண்டு வழிபடுதற்கு ஓர் அறிகுறியாகப் பிழம்புவடிவான கந்துரு நிறுத்தினார் "கந்து" என்பதற்குத் 'தெய்வமுறையுந்தறி' என்றுரை கூறினார் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'கந்து' எனப்படும் இதுவே இக்காலத்தில் சிவலிங்கம் எனப்படுகின்றது. இச்சிவலிங்க உருத்தான் மிகப்பழைய நாள்தொட்டு எல்லாச் சாதியாரானும் எல்லாத் தேயத்தாரானும் வணங்கப்பட்டு வந்ததெனச் சரித்திரவா

ராய்ச்சிவல்ல பண்டிதர்கள் உரைநிறுவுகின்றாகள் " பட்டினப் பாலை ஆராய்ச்சி 57-ம பக்கங்காண்க. இந்தச்சிவ வணக்க அறிகுறியே இக்காளினும ஆதிதிராவிட மக்கள்பால் விளங்குகின்றது. மரத்தடியினும ஒருகல்லைநட்டு அதனை வழிபாடு செய்து வரும வழக்கம் பெரிதும ஆதிதிராவிடரிடத்தே காணப்படுகிறது. இத்தகைய அருமபெறலான சைவசமயமானது சாதிபேதம பாராட்டாததாய் இருந்தது.

Concerning this the Government Epigraphist writes as follows.—The Saiva creed ......does not appear to have paid much attention to Sastric karma but taking unsullied devotion to Siva as its basis it received into its fold all classes of people without any distinction of caste. This Catholicity of the faith rendered it not very popular with the orthodox Brahmans

[Tamil Studies Page 292]

சைவசமயத்தின புராதனத்தையும, சைவசமயம சாதிபேத போற்றாதிருத்தலையுங் குறித்துக்கொண்ட ஆரியாகள் இச்சமயத்திற்கு விரோதமாக இராமனை பெயாவிளங்க வைணவ சமயத்தை ஏற்படுத்தியதாக சரித்திர வல்லுநாகள கூறுகின்றனா.

உதாரணமாக.—Dr. Pope's statement that the Vaishnavas system has been a formidable rival of Saivaism since 12th century.

M. ஸ்ரீநிவாச அய்யங்கார், M.A., அவாகள கூறுவதாவது. சைவ பெரிய புராணத்துள் புகலப்படும நாயனமாாகளின் சரிதமும அவரது காலமும ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகவுள. ஆனால் பெரியபுராணத்திற்கு எதிராக எழுதியதாய வைணவ ஆழவாாகளின காலமும் சரிதமும மிகவு முரண்படுவதாகவேயுள்ளன என்றவாறு.

இவற்றுள் சிலவற்றைத் தெரிந்துக்கொண்ட சைவர்கள் இவ்வுண்மை வெளிபடுமாறு பிராமணர்களின் தந்தை அல்லது முன்னோனாகிய பிரமா பொய்சொல்லி அவனுக்குக்கோயிலுமிருந்தற்றதா, சிவபிரான பிரமாவின்சிரசைக் கொய்துவிட்டவனாகும் சிவன (பிராமணா வணங்கும) சூரியனது பற்களைசிதற செய்தவனாகும் இயமனை உதைத்தவனாகும என்று கூறற்காயினர் ஆரியர்கள் தமிழ வேதத்தில கூறும தேவதைகளை இழித்துக் கூறறகாயினா இவ்வாரியா முன்னடியே சமஸ்கிருதத்தில எழுதி வைத்திருந்து பொது ஜனங்களை ஏமாறற வெளிபடுத்திய காலத்திலேயே இந்த வழக்கு ஏறபட்டதாக விருக்கிறது பின்னர் இவர்கள ஜாதிபேத நிமித்தம் எவ்வளவும முயன்று பிரமாவைப பதியாக வைக்கத் துணிந்தும்,பிரமா பொய சொல்லியென்று பொது ஜனங்களுக்கு விளக்கமாய விட்டமையால தங்கருத்தொருங்கே நிறைவேறறக் கூடாதவராகிப் பிரமாவைக் கோவிலற்றவராக நழுவ விட்டார்கள்.

ஆனால் இவ்வாரியர்கள வெகுநாளாக வந்து தங்கி யிருந்த இந்தியாவில், அஜமீா என்ற ஓரிடத்தில மட்டுமே பிரமாவுக்கு கோவில கட்டுவித்திருப்பதாகத் தெரிகிறது, இந்தத் திரிமூர்த்தி வாது நிமித்தமாக காசியிலிருந்த சிலா வியாசரை நோக்கி நீங்கள் ஏறபடுத்திய மும்மூர்த்திகளில தலைமையாவார்,யாவர் என்று வினவ வியாசரானவா (இராமனும) நாராயணனே பரமபதியென்று தனது கையை உயர்த்தியவளவில ஆங்கிருந்த வீரமுஷ்டி யென்பவர் உயர்த்திய அக்கரத்தை வெட்டி விட்டதாக சித்தூா ஜில்லா அதாலத்து கோாட்டுத் தீரப்பு எனப்படும் ஒரு புத்தகத்தில எழுதப்பட்டிருக்கிறது.

சாதிபேத நிமித்தமாக இவ்வளவு பாடுபட்டுச சைவ முறைகக்ப் பிரம விஷ்ணு மார்க்கத்தையும் சாதிபேதத்தையும் புது சைவமதத்தையும் இவர்கள் ஏற்படுத்தினாயினும்,

மக்கள் பாராட்டிய பதியிலக்கணங்களைக் குன்றுது எடுத் துண்மை அவற்றை மறைவாகவே, மருளும்படி எழுதி யிருக்கின் றார்கள். ஆகையாற்றான் சமயத்திற்கு மறையென்றும் ஒருபெயர் புனைந்தனர். கடைசியாகக் கூறுமிடத்து ஆதி திராவிடர்களின் கொள்கைப்படிய ஆதி சிவம் வேறு—உருத்திரன் வேறு; ஆதி திரு மால் வேறு, விஷ்ணு வேறு எனக்கொள்ளுமாறு பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் எனும் நூல் தருகின்றதைக் காண்க.

இங்ஙனம் ஆரியர்கள் மதபேதம் ஏற்படுத்தியது ஜாதி பேதத்தை நிலை படுத்தற்காகவே யன்றி வேறல்ல. இவ்வாறாக இவர்கள் மதமருள் சாத்திரங்களை எழுதியதினாலேயே மறையோர் எனவும் பெயர் பெற்றார்

## மறையோர் தாமே ஜாதி பேத மேற்படுத்தினவா,

என நனருணர்தற்கு ஆதாரமாகவே, தன் வயத்தனாதல் முதலிய தூயவெண்குணமுடைய பகவனது ஆலயங்களிலேயும் சாதிபேத விதிவிலக்குகள் போற்றப் படுகின்றது. இராமனாதி ஆரியர்கள் தென்னிந்தியாவுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் அகஸ்தியர் தென் னிந்தியாவில் வந்திருந்தாரென இராமாயணத்தால் தெரியவருகின்ற தொப்ப அந்த அகஸ்தியர் தன்னோடு 18 இராஜாக்களையும் 18 குடி களையும் கொடுவந்து அருவாளரைத் துரத்திக் காடுகெடுத்து நாடாக் கினா எனத் தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியர் உரை நிறுவு கின்றார். ஆகலின் இந்தப் பதினெட்டுக் குடிகளுக்கும் முற்பட்ட தாக இந்தியாவில் இருந்த பூர்வகுடிகள்தாமே ஆதி திராவிடர் எனப் படுவோர் எனலாம். ஆனால் அருவாளர் துரத்தப்பட்டார் என்பதால் அவர்கள் சென்றோடி ஒழிந்த விடம் எதுவோ வென்பதும் அது இவர்களோ நாங்களாலும் ஆதிதிராவிடர் என்பதுஞ் சங்கை கின்றது.

என்னெனில் "உலக சரித்திரம்" என்ற நூலிலே 654-ம் பக்கத் தில் டாக்டர் சான்டர்சன் தருவதாவது "மிகவும் பழமையதாக

கொள்ளப்படும் பண்டைய காலத்திலே இந்தியாவானது ...ரல்லாத ஓரினமக்களை உடையதாயிருந்தது. அவர்களுள் இலட்சக்கணக்கான பலர் இன்னும் சண்டாளர் என்னும் பெயரிய சாதியினராய் வாழ்ந்து வருகின்றனர் என்றும், இவர்கள் பிற்காலத்தில் தட்சண பாகமாய் வந்து இலங்கையைச் சேர்ந்த புதிய மக்களால் துரத்தப் பட்டிருத்தல் வேண்டு''மென்பர். இது தவிர " ஆரியர்கள் தென்னாட்டாரை வென்றி கொண்டாரகளென்றும் அன்னோரைத் துரத்தி விட்டாரகளென்றும் கூறுதற்கு யாதோர் காரணமும் தாரணயில்லை யென்பர் ஸ்ரீமான் T. பொன்னம்பலம் பிள்ளை M. R. A. S. அவர்கள்.

...ியாதியால ஏற்படும் பூர்வ குடிகள் என்ற அருத்த சம்பந்தத்தே அருவாளர் தாமோ ஆதி திராவிடர் எனற்காகின்றது. ஆனல், அற்றன்று. அருவாளர் வேறு ஆதி திராவிடர் வேறு என்பதைப பின்வருபவற்ருற காண்க.

Ancient History of India. By Prof Max. Duncker. Page 8. " In epic poetry of the Indians we find mention of black inhabitants of Himavat (i. e., inhabitants of the snowy mountains of the Himalayas) and of black Cudra" beyond the delta of the Indus. அதாவது வடவிந்தியாவிலுள்ள இந்து நதி பாங்கர் கரிய நிறமுள்ள மலைவாசிகளும் இருந்துள்ளார் என்றவாறும்.

இது நிற்க இராமனுதியோர் இராவணனோடு பொருத வந்த காலையில் சேனையாக வந்த வானர மொத்த மக்கள் பலர் தென்னிந்தியாவுள் புகுந்தனர் எனறும் இராமாயணந தருவதால் ஷை அகத்தியரால் 18 குடிகளும், பின்னர் இராமனுல் பல குடிகளும் ... ஞிந்தியாவுகருள் புகுந்தமர்ந்தனர் எனல் வெளியாம் ஷை ... யாகக் கூறப்பட்ட குடிகள் எல்லோரும் வடவிந்தியாவினின் ...

...கினரூர்கள். வடவிந்தியாவில அபபோதிருநத ஜாதிகள் (36)-ம பககததில குறிப்பிட்டிருககினறது.

ஆகவே பெருமபாலும அனனோரகளே தெனனிநதியாவுக குள் பிரவேசிததவாகளாதல் வேணடும. ஆனல இவாகளில வேறுகத் தென்னிநதியாவில இருந்தவாகளே ஆதி திராவிடா எனபபடுவா. அவர்களியாரோ வெனின் சாதிபேதமறற ஆதிசைவ சமயிகளான இராவணனாதி யோரனறி வேற்றெவரே யாவா ?

மேறபடி அகஸதியரால கொணடுவரபபடட குடிகளால துரத தப்பட்ட அருவாளரெனபாா யாவரோ வெனின அவாகளதாம தற போது குறுமபா எனறழைககபபடும ஒருவகைக காட்டுச சாதியா ரின் மூதாதைகள் எனச் சரிததிரககாரா கூறுவா. இநத அருவாள ருக்கும இராமன கொண்டு வநத வானர சேனைகட்கும இருநத பேதநதான என்னையோ ? ஒனறும காணேம, குரஙகுகளென ஆரி யரால மதிககபபடட இராமன சேனைகளானவை நீகிரோவரைப் போல நிறததவராய, குளளாகளாய அதிக பலமுடையவாகளாயத தோன்றினா, எனப்படுவதால இராமா அழைததுவநத வானரஙக ளெனப்படுவாருககும குறுமபரெனறுய அருவாளருககும பேதம ஒன்றுமே தோனறவில்லை. இருவரும ஓரினததவரெனறே கொள் ளற்காகினறது.

இநத வானரஙகளதாமே தற்காலததிலுளள இருளா-காடா-சோலிகா முதலிய மலைச்சாதிகளின் மூதாதைகளாவார் எனறு ஆராய்ச்சி வலலா கூறுகின்றா. எனவே வடதேசததினின்று இரா ...னேடு சணடையிட வநத சிலர்தாமே போருககும் அலலது இராவணன வகையாருக்கும் பயந்து மலைகளிலும் குகைகளிலும் ...ந்து வாழற்காயினர் என்றும கூறலாம. அற்றேல் அருவாளர் ...பவர் தென்னிநதியாவில இருநது ஆரியரால் துரத்தப்பட்டா ரெனின் ஆரியர் தாம் நிகழ்ததிய பெரும்போரில் ஜெயம் பெற்று

ராகவேனும் இருந்தலவேண்டும் அப்படிக்கில்லாமல் விபீஷணன் தானே ஜெயங்கொண்டதாக வனரே முடிகின்றது

* The Aryan races had penetrated into vast numbers into the punjab and gangetic valley and had all but exterminated or expelled the children of the soil who were either barbarians, and the population of northern Indian therefore is to the present day more or less of pure Aryan stock.

இதனால் அருவாளர் எனப்படுவர் தென்னிந்தியாவின் பூர்வ குடிகள் எனப்படும் ஆதிதிராவிடர் அல்லவென்பதும், இராவணன் வகையாரே ஆதிதிராவிடர் என்பதும் உணர்ந்தேற்றுக் கொள்ளற்பாலதாம் (11-ம்) பக்கத்திற்குறித்துள்ளபடி வட இந்தியாவுள் புகுந்திருந்த ஆதிதிராவிடர்கள், பிற்காலத்தில் குடி புகுந்த ஆரியரல்லாதவரால் துரத்தப்பட்டவர்களா இராமனது சேனைகளான வானரம் என்றழைக்கப்பட்டவர்களா

ஆதலால் ஆதிதிராவிடர் எனப்படுபவர் காட்டுச் சாதி வகுப்பினைச் சேர்ந்தவர்கள் என்பது துணிபே.

சில நூல்களின் விவகாரப்படி பூர்வகாலத்தில் இருந்த மக்கள் கற்கால மனிதர்களென்றும் உலோககால மனிதர்களென்றும் நாகரெனும் ஓர் சாதியாரென்றும் அறியப்படுகின்றனர். இவற்றை விசாரிப்பாம்.—கற்காலமனிதர் உலோககால மனிதரெனும் இவ்வகுப்பினது நன்ஞானம் மிகவுடைய ஐரோப்பியர்களின் சூழ்ச்சியேயாம். இவை உலகின் எல்லாத் தேயத்தாரின் புராதனமாகவே கொள்ளற்பாலனவேயாம். இவை சாதி யிருள்கவிந்து பிதற்றித் தடுமாறும் நமது இந்திய மக்கள் கொள்கைக்கு ஒத்ததாகுமோ ? ஒருக்காலும் ஆகாது. ஆயினும் கற்கால மனிதரெனப்படுபவர் கற்களை ஆயுதமாகக் கொண்டிருந்தவரென்றும் அவர்களே பிற்றையகாலத்தில்

* "Ancient India" By. R. C. Dutt. C. I. E.

இரும்புக்கருவிகளை உபயோகிப்பவரானபடியால் உலோககாலமனிதர்களென்று அழைக்கப்பட்டார் என்றும் கூறுவர். இந்த வகுப்பினரே ஆதி குடிகள் என்பதற்கு யாரே மறுப்பார்?

நமது சரித்திர புராதனப்படியே பழைமையான தென்னிந்தியவாசியான இராவணனாதியோரே இவ்வகுப்பினைச் சேர்ந்தவரன்றி ஏறக்குறைய 4000 அல்லது 3000 வருடங்கட்குமுன் தென்னிந்தியாவுக்குட்புகுந்து இராவணனோடு பொருதுகளத்தொழிந்த ஆரியராதியோரே கற்காலத்தவராயிருந்து உலோக காலத்தவரானார் என்பது பொருந்துமோ? எவ்வாறாயினும் தென்னிந்தியாவின் பூர்வவாசியார் எனத்தக்க இராவணனாதியோரே அவ்வகுப்பினைச் சார்ந்த ஆதிதிராவிடரெனலாம்

(1) நிற்க நாகரெனும் ஒரு சாதியார் இந்தியாவின் பூர்வகுடிகள் என்பர். இந்நாகர் எனும் வகுப்பார் தமிழ் இலக்கியத்தில் காணப்படும், மறவர்—எயினர்—ஓவியர்—ஒலியர்—அருவாளர்—பரதவர். முதலிய சாதிகளின் தலைவராவார். இவர்கள் தமிழர்களுக்கு விரோதிகளானவர் என ஸ்ரீமான் கனகசபை பிள்ளையவர்கள் கூறுகின்றார்.

(2) ஸ்ரீமான், S. ஸ்ரீனிவாச அய்யங்கார் M. A. அவர்கள் கூறுவதாவது. நாகர்களே தென்னிந்தியாவின் பூர்வகுடிகளெனலாம். துரானியா சித்தியர் எனப்படும் (மத்திய ஆசியா கண்டத்தினர்.) வடவிந்தியர்கள் மங்கோலிய ஜாதியைச் சேர்ந்தவராவார். என்றும்.

(3) நாகரெனும் வார்த்தை பொதுவாக காட்டுவாசிகளுக்கும் பாதலலோகத்தவருக்கும் இலட்சியமாய்த் தமிழில் வழங்கப்படுகின்றது. இவர்கள் சேரசோழ பாண்டியர்களுக்கு விரோதிகள் என்றுங் கூறுகின்றார்.

(4) பின்னும் (Tamil Studies 80-ம் பக்கம்) புராதன நாகரென்பார் தண்டகாரண்யத்தைக் கெடுத்து நாடாக்கினவராவார்.

இவர்கள் அந்தக் காட்டை வெட்டிற்கமர்த்தப்பட்டவர். ஆதலாலே இவர்கள் வெட்டியார் என்ற பெயர் பெற்றனர். அவர்களிற் சிலர் கிணறுகள் தோண்ட அமர்த்தப்பட்டபடியால அவர்கள் தோட்டி என்ற பெயர் பெற்றனர்.

இவர்களின் தலைவர்கள் வேலூர் அம்பூர் முதலிய விடங்களை அரசாண்டவர்களாகவும் நெசிவு முதலிய பலதொழில்களையுடையர்களாகவும் இருந்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

(5) "நாகரென்பவர் புராதன குடிகள் எனபதற்குச் சாட்சி பலவுள. இவர்கள் இரண்டு பிரிவினராவர். அதாவது முதலிலே குடிபுகுந்தோர் நாகரீகமற்ற மிலேச்சர்களா யிருந்தார்கள்; பின்னர் வந்தவர்கள் சற்று நாகரீக முடையரா யிருந்தனர்கள் முதலிலே வந்தவர்கள் நீகிரோ ஜாதியைச் சேர்ந்தவர்கள். பின்னர் வந்தவர்கள் கலப்புச்சாதிகளா யிருந்தார்கள். இவ்விருவர்களும் ஆஸ்த்திரேலியாவும் இந்தியாவும் சமபந்தமாயத தரைபாகத்தை யுடைத்தாயிருந்தபோது தென்பாகங்களினின்று குடிபுகுந்தோரா வார். இவ்வாறு குடிபுகுந்த இவர்களில் முதல்வந்த நாகரீக மில்லா நாகர் காடு மலைகளில் வசிப்பவராஞர் இரண்டாவதாக வந்த நாகரீக நாகர் கன்னியாகுமரியிலிருந்து விசாகப்பட்டணம். நாகப்பூர். மத்திய மாகாணம் பரியந்தம பரவிவாழ்ற்காஞர். இவர்கள் தாம இராமாயணத்தில் கூறப்படும வானரம. இராக்ஷசர் எனப்படுபவர். இவர்கள் எப்பொழுது இந்தியாவில் குடிபுகுந்தார் என்று கூறல் எளி தானதல்ல." என்றுங் கூறினார் டை நூலாசிரியர்.

இவ்வாறு தோன்றியவற்றுள் முதலாவது கூறப்பட்ட கருத்தின்படி நாகர் என்பவர் எயினர் முதலியவர்களின் தலைவர் எனக் கொள்ளப்படின் இவர்கள் பூர்வதமிழ்த்தேயக் குடிகள் என்றே தேறவேண்டியதாகும். எங்ஙனமென்றால் அங்கீகரிக்கத் தக்க ஆராய்ச்சி வல்லுநரால் இற்றைக்குச் சுமார் 2270 வருடமென்று

அளவிடறகாகுங காலத்தைக கொணட தொல்காப்பியததிலே, அக்காலததிய மக்களே ஐநதிணே நிலத்தடியே வகுககுஙகாலே,

குறிஞ்சிநில மககளாவாா "பொருப்பன்—வெற்பன—சிலம்பன்—குறவன—குறததி—கானவா — கொடிச்சி என்றும.

பாலே நிலமககளாவாா —எயினா — எயிற்றியா—மறவா—மறததியா எனறும்

முலலே நிலமககளாவாா —இடையா—இடைச்சியா—ஆயர்—ஆய்ச்சியா எனறும்.

மருதநில மககளாவாா —உழவா—உழத்தியா—கடையர்—கடைசசியர் என்றும்

நெய்தல நில மககளாவாா —பரதா—பரததியா—நுளேயா—நுளேச்சியா—அளவா—அளததியா எனறும் கேடகபபடுவதால் ஷைநாகா அககாலத்தே யிருநத தமிழகததாரெனபது தேறறமாம

பொதுவாகத் தமிழ்பபாஷைககு இலககண மென்றெழுநத தொலகாப்பியததிலே, இககாலததில விரிநது கிடக்கும் பாாபபாா முதலி நாயுடு எனறபடியான சாதிகளும இருநததாகத தோன்ற வில்லே ஷை யோதிய வகுப்பினரும நிலமபற்றி வகுக்கபபட்டவராக இருநதவரே யன்றி இககாலததில் மூச்சுககு மூநநூறு பொய பேசும் கதைகளேக கொணடு உயாநதாமெனறு நடிததும, கீழ் குலத்தா ரெனப படுமொருவா "தொட்டாற் பட்டுப்போம" என்ற அறப மதிப்பைக கொணடு உயர்சாதிபேதம பாராட்டா திருநதனரெ னறும தோன்றுகின்றது.

குறிஞ்சி நிலமெனப்படுவது - மலேச்சாாபான இடமாம்
பாலே நிலமெனப்படுவது - நீரிலலாக் கடு நிலமாம
முல்லே நிலமெனப்படுவது - காட்டுச் சார்பான இடமாம்
மருத நிலமெனப்படுவது - வயற் சார்பான இடமாம்
நெய்தல் நிலமெனப்படுவது - கடற் சார்பான இடமாம்,

இதுதான அககாலததிருநத சாதிபேத காரணமென்று விளங்குகினறது. ஆகவே நாகரெனுஞ சாதியாா இந்தியாவின பூர்வ குடிகள என்ருகினறது

ஷெ நாகா எனும விஷயமாய இரணடாவதாகக கூறபபட்டதின் கருத்தாவது நாகரே பூாவகுடிகள் இவாகளுக்குப பிறபட்டு வநதவாகள் மததிய ஆசியா கணட வாசிகள எனருகிறது. இவாகள யாவரோவெனின இவாகள தாம பாணடியா சோழா சேரா எனும மூவரசா சநததியாரெனலாம இவாகள அநநனம நாகாகளுக்குப பினனரே குடிபுகுநதோ ரானபடியினுலேயும, பிராமணரலலாதாராயிருநதும, பிராமணரைபபோல கடிபபதறகுரியராய அவாகள கட்டளைககுட்பட்டவரான படியினுலேயும இவாகள நாகரை இழித்துக கூறும வேறு சாதியராயினா. இநதப பேதம அறிவுவிளஙகிய இககாலததும இருததல ஆதாரமாகவும நாகரெனப படுவோரே ஆதி திராவிடா எனப்படுப வாகினறது

மூனருவதாகக கூறபபட்டதுள நாகரெனபபடுவா பாதல வாசிகளெனக கருதபபட்டனா எனபதை நோககுமிடத்து உலகிலுள்ள மலைகள யாவற்றிற்கு முயாநத இமாசலத தணித்தான மேட்டுப பாஙகரினின்று குடியேறிகள தெனனிநதியாவுககுள நுழைநதனா. ஆனபடியால அநத அநநியர்களுககுத தெனனிநதியாவானது பாதலம பூமககுள இருககும இடம போலும தோனறியிருககலாம. ஆகவே நாகாகளைப பாதலவாசிகள எனரூா போலும், அறறேல இவர்கள நாகரீக மற்றவரென்பமாயின வடபாலிருநத பாணடவருள அருச்சுனன் நாககனனிகையை மணநதிருகக மாட்டான பினனும நாகரீகம - நகா - நாகரி எனற சொற்களெலலாம நாகா என்ற சொலலையே குறிப்பிடுவதாகவே யிருததலின் நாகரெனபவா சீருஞ சிறபபும உடையவர்களாகவும, நகாகளை = பட்டினக்களை உடையவர்களாகவும். திருநதிய பாஷையை உடையவர்களாகவும் இருநதிருககவேண்டும்.

(The India through 'the ages.' By F. A. Steel.)

Page 2. It is not only that these Aryan invaders were themselves in a state of civilisation which necessorily implies long centuries of culture of seperation from barbarian man; but besides this they found a people in India civilised enough to have towns and discipline troops, to have weapons & banners, women whose ornaments were of gold &c &c.

அதாவது ஆரியா இநதியாவுட் புகுமுனனா ஆங்கிருநத பணடைய மககள் நாகரீக முடையராய அரசியலாதி சிறப்புக் குணஙகளுமுடையராயிருநதனா எனறவாறு இதனால ஏறபடுவது இநதிய சரிததிரஙகளில பழமையதான இராமாயணம ஒதும இராவணன அவனது கோட்டை கொததளஙகளே குறிபபிடறகாகுமே யனறி வேறெனனும.

இவாகள சேர சோழ பாணடியாகளுககும முநதியவாாதலாலே இவாகளே ஆதிதிராவிடா என்றுரைபபவாகினறது.

நானகாவதாகக கூறபபடடதுள இவாகள அரசராக விருநது அரசாணடவாகள ; தணடக வனததை வெடடினதினாலே இவாகளுககு வெட்டியாா எனற பெயரும, நீர் வசதிககாக கிணறு தோணடினபடியினாலே தோட்டியென்ற பெயரும இவாகளுககு உண்டாயிற்றெனறும விளஙகுகினறது.

அரசன எனற நன்வாாததையே அசுரனென்றும அரககனெனறும தீயபொருள தரற்கான கறபனையே போலும், இந்த நாகரெனபாரை இழிவுபடுததும வணணம நற்பொருளடியே எழுநத வெட்டியான் தோட்டி என்றபதஙகளை யவற்றின வாலர்ற்றினபடி யொழுகும தொழிலாளருக்கு இடாமல் அதனை மாற்றி என தொழிலாளருககு அப்பெயரைப் புனைத்து இநத [illegible]னர்தாம் அந்த நாகர் எனறபடிச் செய்து விடடனா எனலாம. ஆயினும

இவர்கள் அக்காலத்திற்கு அரியதான நெசிவு முதலிய தொழில் செய்தவர் என்றமையாலும் தண்டக வன வழக்கினாலும் இந்த நாகர்களே ஆதி திராவிடர் என்று ஒப்பவாகின்றது.

ஐந்தாவதாகக் கூறப்பட்டதுள் நாகரென்பவர் குறித்தற்காகாதபடி பழமையதான வெகு புராதனகாலத்திலே இந்தியாவுக்குள் குடிபுகுந்தோர் என்று குறிக்கப்பட்டதோடு, அக்காலமானது ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் சம்பந்தப்பட்டிருந்த காலமென்பதால் (37) பக்கத்தில் தந்துள்ளபடி 8000 வருடங்கட்குமுன்னர் இவர்கள் தென்பால் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தோராவார் என்றும் பெறப்படுகிறது இங்ஙன மிருக்க ஏனைய வடபானமக்கள் குடியேறியகாலமானது மிகவும் உச்சமாய ஏறறிக்காணினும் 5000 வருடங்களுக்கு மேம்படுவதாக, ஆதாரம் ஏறபடுவதாயில்லை ஆதலால நாகரே ஆதிதிராவிடர் என்றறுணிபு.

பின்னும் நாகரே வானரர் இராக்ஷதர் என்றதை நோக்குமளவில, வானரர்கள் (38) பக்கத்தில் விளங்கும் வாலமீகி கூற்றின்படி வடதிசையினின்று வந்தவராகின்றமையால நாகரென்பவர் வானர சாதியைச் சார்ந்தோரராகார் இராக்ஷதரோ வனனோ எனின ஆம் எனலாம் என்னை ? இராட்சதர் என்பதின பொருளாவது "ரக்ஷாம—யாங்காக்க" என்றபடி காக்குந்தொழிலினராவர் பின்னும் இராமயணத்திலே இராவணனாதியோரையே இராட்சகரென்று கூறுகின்றபடியினாலும இந்த இராவணனதானே நாய காணும அரசர்களில மிகவும புராதனகாலத்தனாகத் தென்பாறகண அரசோச்சினவனாக விளங்குகின்றமையாலும நாகர்தாமே இராக்ஷதர் என்றழைக்கப்பட்டார் என்பது சாவதந்திர சித்தாந்தமேயாகும.

எயினர் முதலிய தமிழ் இலக்கணந்தரும சாதிபபெயர்களும் இவர்களுக்கு, எயதியதுபோலக, காலாந்தரத்தில இவர்களுக்குப் பறையர் என்றும் ஒருபெயர் புனைவுற்றதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. பறையர் என்ற சொலலினவரலாறு காணல கன்னியதாம்,

வெட்டர்ஜே. டாக்டர் ஆப்பர்ட். அவர்களின் சமஸ்கிருத ஆராய்ச்சியின்படி பறையா மலைவாசிகள (நாகர்) அல்லது பொறையன்— என்றபேர்தானே பறையர் எனறவாறு கின்றது இஃதோடு பறையர் என்றபெயர் எயினாகளுககு உரிய பெயர் எனறுங கூறினா. எயினா, நாகரென்றுணர்க. பாறையா எனறது எனனெவெனின் நாக வமசததவனாகிய இராவணன் தனது காலததிலேயே அநேக கோட்டை கொததளஙகளையுடையவனாக விருந்தான எனபது வெளி அஙஙனே இராமனாகவநது இராவணனோடு போாபுரிநதார் எனப்படும விஷ்ணுவானவரே ஆதிதிராவிடததிருநது புகழோஙகிய மாபலி சககிரவாததியையும வதைததாரெனற கதையினபடி மாபலிச சககிரவாததியின அரணமனையும கறபாறையையே குடைந்து அமைததுளளதாயிருககினறது அதனை இனனுஙகாணகின்றோம.

"The sculptures at mavalipuram have reference as well to the religions worship of Siva as of Vishnu, principally however to that of Vishnu. On the other hand as for our present knowledge extends we find not the least trace of the service of Buddah" (Antiquity Historical Researches. By Heeren.)

மாபலி புரமானது தமிழ்சசைவ மன்னன அரணமனை. அது மிகக பழமையானது புததாகாலததிற்கும முறபட்டது. இததகையதாயக கறபாறைகளைககொணடு ஆ தி தி ரா வி டா வசிததிருநதபடியால பறையா எனறழைககப்பட்டா ரென்றும் கொளளலாம். பொறையா என்றது என்னெவெனின, சஙக நூலாகிய பதிறறுப்புததது தருமாறு பொறையா எனப்படுவா தமிழ்ச சேரநாட்டரசாராவார். இவர்களில தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையெனபாா ஒன்று, மற்றொனறு குடக்கோ இளஞ்சேரலிரும் பொறைஎன்றும் ஷை. நூலில் எட்டாம பதிகம். ஒன்பதாம பதிகததால் விளஙகுகின்றது. இவர்கள் தமிழர்களே

யென்பதற் கிலக்காக அவ்விரு மன்னவர்களையும் முறையே தமிழ்ச்சங்கப் புலவர்களாகிய அரிசிற்கிழாரும், பெருங்குன்றூர் கிழாரும் பாடி ஒன்பது நூறாயிரங்காணமும் முப்பத்திராயிரங் காணமும் பரிசிலாகப் பெற்றார் என்பதால் தெரிகின்றது. ஆதலால் தமிழ்க்குடிகளாயிருந்த ஆதிதிராவிடர்களுக்கு அந்தப் பொறையர் என்ற பெயர்ச்சிதைவினாலேயே பறையர் என்று பிறரோ வென்றுஞ் சந்தேகிக்க இடமாகிறது

இந்தப் பொறையர் எனும் அரசர்களின்காலம் ஏறக்குறைய கிறிஸ்துவுக்குப்பின் இரண்டாம் நூற்றாண்டேயாயிருக்கலா மென்பது ஆராய்ச்சியுடையார் கொள்கை. இந்தக் காலத்திலேதான் பறையர் என்றவார்த்தை யுதித்ததாகவும் ஸ்ரீமான் M ஸ்ரீநிவாச அய்யங்காரும் கூறுகின்றார். இதன் சார்பாக, "துடியன் பாணன் பறையன் கடம்பனென்ற நான்கல்லது குடியுமில்லை" என்ற புறநானூற்றின் மேற்கோள் எடுத்துச்சவியதல்லாமல்

"We do not find the name paraiya mentioned either in early Tamil literature or in the inscription untill we came down to the time of the great Rajaraja Chola A D. 1013 from which period it evidently obtained currency as a caste denomination." என்றபடி, தான் இந்தப் பறையன் எனும் பெயரைப்பற்றி விசாரித்ததில் இப்பெயரானது இற்றைக்கு 907 வருடங்களுக்குமுன் அரசாண்ட இராஜராஜ சோழன்காலம்பரியந்தம் உள்ள சிலாசாசனங்களிலும் அல்லது பழந்தமிழ் இலக்கியங்களிலும் கூட பறையன் என்றொரு சொல் இருக்கக் கண்டதில்லை என்கிறார். ஷெ. ஐயங்கார் அவர்கள் இவற்றால் பறையர் என்றபெயர் சற்றேறக்குறைய 900 அல்லது 1000 வருஷத்திற்கு முன்னர்தான் உதித்திருக்க வேண்டியது. மேற்றந்தவற்றால் நாகவம்மிசத்து இராவணனாதியோரின் சந்ததியே ஆதிதிராவிடர் என்றிதுகாறுங் கூறியிருக்கப் பின்னும் சேரநாட்டரசர் பெயராலும் பறையர் என்ற பெயர் வந்திருக்கலா

மென்றது சந்தேகத்திற்கு இடமாம். இதனைநாம் விசா ரிக்குமளவில இதுவுமொருசார பொருத்த முடையதாகவே தோன்றுகின்றது. எங்ஙனமெனறால் ஆரியர்களும் முதல குடி புகுந்த மாறறாதியரோடு இராவணனாதியோா கலந்து வாழ்ந்த தாகவும சரித்திரங்கள கூறுகின்றன இராவணன தேசம இந்தியா முழுவதுமாய விளங்கிற றெனறும முனனா கூறியுள்ளாம. கடைசியாக " கி. பி 12-ம நூற்றாண்டின பிறபாகததில் பாண்டிய இராஜ்ஜியததில இரண்டு அரசிளங்குமாரர்களுக்குள் யார சிம்மாதன மேறுவதென விரோதமுண்டாகி அவருள ஒருவன இராவணனது இராஜதானியான இலங்கைததீவின அரசன் பராக்கிரமபாகுவின் உதவிபெறறிருந்ததாக ஆயந்தோா கூறுகின்றார்கள பிறகு சேரர் கள் ஆரம்பததிலேயே தங்கள நாடெல்லாம மராட்ட குலவரசா களாலும சோழாகளாலும மற்றும பினவந்த அரசாகளாலும கவரப் பெற்று அவர்கள சிற்றரசாகளாக ஒடுங்கிப பின்னா அவாகள குலம இருந்த இடமும தெரியாமல மறைந்துவிட்டார்கள்." (என்றா ஸ்ரீமான. T A இராமலிங்க செட்டியாா B A. B L.)

சேராகள இவவாறு க்ஷீணமடைவதற்குச சிலநூறு வருடங களுககுமுன் சேரனது சமபந்தியாகிய சோழமனனவன இலங்கை யரசனுகவிருந்த கஜபாகுவின்தந்தையோடு போா புரிந்து இலங்கை வாசிகளில் 1200 போகளைச் சிறைபடுத்தி அனனோரைக காவேரி யாற்றிற்குக் கரைகட்டும வேலையிலமாததினனெனபா. இதனுல் ஆதிதிராவிடராய நாகவமிசததவர் சேரநாட்டிற்குள்ளும் புகுந்தி ருந்தனா எனறும தெரிகிறது. இதுவனறியும் Tamil Studies 403-ம் பககததிருமாறு இலங்கையிலிருந்து மலையாள தேசத் திற்கு கொணடு வரப்பட்டவாகளே தற்போது அந்த மலையாள தேசத்தில தீயரெனறு வழஙகப்படுகிறார்கள் என்பதாலும் இந தக் தீயர்கள இக்காலததில் தாழ்குலததவரெனப் படுவதாலும், தீயரெனறும் பின்னுமொரு பெயாபெறறவராகி க்ஷீணமாயினர்சேர

நாட்டரச பெயரால் பொறையா என்ற சொல்லளவே பறையர் என்றழைக்கப்பட்டார் ஆதி திராவிடர் எனலாம். எனனே பஞ்சாப் தேயத்திலிருந்து தெனகன்னடததிலுள்ள கோகாணத்தில் குடியிருததல் நிமித்தமாக சில பிராமணாகளைத தமிழரசர்கள் கொணடு வநததாகவும் அநதக கோகரணத்திலே இந்தப் பிராமணாகள தங்கவும் தஙகளுடைய சுயதேசமாகிய பஞசாபுக்குத் திருமபிப்போகாமலும இருபபதறகு அடையாளமாகத தங்களது பின குடுமிகளைச சிதைததுத தலைகெதிரே குடுமியைத் தக்கொளள அரசா கறபிததகாகவும், அஙஙனே யவாகள் முன் குடுமியுடையவாகளாகி (நமபூரி பிராமணா) தமமுன்தோன் றும் ஏனைய மககளெலலோரும இழிஞா எனறும பேதம் பாராட்டுபவராஞா, எனறு கேடகபபடுவதாலும், நம்பூரி பிராமணர் மிகுததுள்ள இடம சேர நாடாகவே பிருததலாலும, சாதிபேதமுளள இவாகள, சேரா எனறும நாகரெனறுமுளள பேதநதெரியாமல நாகராய ஆதிதிராவிடரைப பொறையா எனறழைததிருக்கலாம. ஆயின இதுவே பறையா எனறுனதுபோலும்.

அலலது பறையா எனபது தொழிலை முன்னிட்டதாய் இருப்பின, பறையாகள புராதன காலததிலே உழவு செசிவு முதலிய அநேக வேறு தொழிலகளுஞ செயதிருநதவாகளாகத் தெரியவருகிறது

1910-ம ஞ ஜுலைம் 25வ "மதராஸ் கவான் மெணட் எபிகிராப்பிஸ்ட் ரிப்போாட் குறிககினறபடி முடிபபககாவூா கிராம கோவில உரிமையைப் பற்றி ஒருபறையன 16-ம நூற்றுண்டின் சாசன ஆதரவோடு வழககாடியதில பறையா பககமே ஜெயமாகத்தீாப்புண்டாயிறறு" என்று தெரியவருகிறது.

The Parayyas or the modern representatives of the ancient Eyinas, as Dr. Caldwell rightly observes, thus constituted '*a well defined distinct ancient caste* independant of every other.

[Tamil Studies page 81].

என்பதினுலே பறையா புராதனமானவர்களென்றும் பிற்காலத்திலே யுதித்த ஒவ்வொரு சாதிகளிலும் கலப்படையாத சுயாதீனமானவர்களென்றும் தெரியவருகிறது. பின்னும் இவர்கள் புராதனகாலத்திலே அரசர்களாகவும் கிராமத்தலைவர்களாகவும் இருந்துவாழ்ந்தது சான்றாகத் தற்காலத்திலும் தஞ்சை திருவாரூர் சிவாலயத்தில் விழாக் கொண்டாடுங் காலை பறையரெனப் படுவரிலொருவன் வெண்கொடை பிடித்தவனாய் ஈஸ்வரனோடு ஊர்வலம் வருவதும் காட்சியாயிருக்கிறது. சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் உள்ள ஏகாத்தம்மன் திருவிழாவிலும் இந்தப்பறையரிலொருவனே அம்மனுக்குத் தாலிகட்டுபவனாகவிருக்கின்றான்.

பின்னும் தென்னிந்தியாவிலே அம்மன் உற்சவகாலத்திலே பறையன ஒருவனையே அதிக சிறப்பாக கொலுவிருக்க வைப்பதும் ஐதிகமாயிருக்கின்றது.

பின்னும் (வட இந்தியாவில்) உள்ள பிராமணர்கள் தாங்கள் திருமணங்கொள்ளுங்காலை தாலிகட்டுவதற்குமுன் இந்தப்பறையரின் அனுமதிபெறும் ஐதிகம் இன்னும் இருப்பதாக Rev. Andrew தனது Depressed Class Mission Report எனும் புத்தகத்தில் குறித்திருக்கின்றார்.

இந்தியாதிபரால் பறையா என்பது, இன்றுகாறும் பொய்க்கதாப் பிரயோகத்தால் தோன்றும் இழிந்தன்மை யுடையரா அல்லது பண்டைய மெய்ச்சரிதங்கள் கூறும் சீர்முடையரா வென்பதை இதனை வாசிப்போரே தெரிந்துகொள்ளலாம்.

இத்தன்மையான சீலம்பொருந்திய ஆதி திராவிடர்கள் பறையரெனப்பட்டது பறையடிக்குந் தொழிலினுலெனின், அதுவுமொருசார் பொருத்தமுடையதேயாகும். எங்ஙனமெனினுல் ஆதிதிராவிடத் தலைவனுகிய இராவணன் சிறந்த சங்கீத விற்பன்ன அவன் அக்காலத்தில் எழுதிவைத்திருந்த இராவணீயமென்ற சங்கீத நூலானது தனது தண்ணிய தமிழ்ப்பாஷை

யில இல்லாது சமஸகிருததததில் நுழைநதுகொண்டதும், இராவணனது காலததிறகுப பினனரே தோனறிய சாமவேதத்திற்குச சாாபுடையதெனப பிறரால தறபோது புகழப்படுவதுமாய ஒனறையொருபாலிருததி நோககுமிடதது, தோறகருவி—துளைககருவி—கஞசககருவி—மிடறறுககருவி யெனும் சதுாக் கருவிகூட்டமே சதுாகசசேரி யெனறழைககபபடும, ஆதலால் இசைசசங்கீதத தடைபினபடித தோற்கருவி வாசிபபவன் 'பறையன' எனறும பாடுபவா பாணரெனறும யாழ்பபாணரெனறும் பெயாகள ஆதிதிராவிடராய இராவணனாதியோாககு உண்டானதாகத தெரிவதால பறையன எனபது இழிவான பொருள பாவனைதரும இககாலததுப பெயா போலாது சிறபெயராகவே அககாலததிருநதிருககலாம பினனும அககாலததிலே

“ தடாவுட லுமபாத தலைபடு முழவம ”

நானமுகந தட்டி நடுமுக முரசப ” எனற கலலாடங காட்டுஞசிறநத முரசமாதி பறைகள இருநதுளளதாகத தெரிகினறது பிற்காலததிலே தணணுமை-முரசம-பேரி-உடுககை-இடக்கை பேரி—படகம—கைததரி—முழவம எனறினைய பறைகளும அதனை வாசிபபவாகளும அநேகமாகவே தறபோதுங காணப்படுவதால இவாகளுககும பறையா எனுமபெயா தொழில நிமித்தமாகச சேரவேணடியதாகவே யிருநதும அபபடிச செலலாமல் தற்போதும பலதுறைபபட்ட வேறுதொழிலினராகவுள்ள ஒரு மக்களுககே பறையா எனறபெயா சாதிபபெயராக விளங்குவதின தாறபரியமாவது இவாகளை ஆதிதிராவிடா எனறு வழியுறுத்தும பாவனையாகவே யிருககினற தெனலாம. ஆகையாற்றான்போலும் அருணாசலக் கவிராயரும தானயாதத இராமநாடகத்திலே (சுந்தரகாண்டம்) “பறையா ஊரிலே சிறையிருந்தவென்னைப் பரிநது கைதொடுவாரோ” எனறு இராவணனிடஞ் சிறைபட்டிருந்த சீதை புலமபுவதாயத தருகினறாா.

இவற்றால பறையர் எனற பெயா எவ்விதமாகச சேர்ந்திருப்பி யார்க்கினும் அது இராவணனாதியோரைக குறிப்பிப்பதாய் ஆதி

திராவிடா என்ற பெயரினை வலியுறுத்துவதாய் விளங்குவதை உய்த்துணர்க.

பின்னும் சிவபெருமான் உடுக்கைப் பறையுடையனாதலின் சிவனும் பறையன, சிவகணமாகிய நந்தி மத்தளப் பறை வாசிப்பவனாதலால் நந்தியும பறையனே என்று கூறலாம் பின்னும, பறையென்ற சொல்லைப் பரியாலோசிக்கு மளவில் பண்டைத் தமிழகத்திலப் பகுப்பாம், குறிஞ்சியாதி ஐந்திணைகளுக்கும வெவவேறு பறைகள இருந்துளளன, ஆகவே அவறறை முழக்கினோராய மக்கள் எலலோருமே பறையா எனற முதுகுடிப் பெயர்க்குரியராவர். என்னை

"தொண்டகமுருகியம்போரத் துடி குறிஞ்சிப்ப றைப்பேர்
மிண்டிய துடியேபாலை வேடாதம பறையினமம்
கொண்டெழு பம்பையேறங் கோட்பறை முல்லைக் காகு
மிண்டிய மருதமுற்ற கிணர்பறை கிணையென் றுமே."
"நிறுவசா பறையே யெனப நெய்தலிற் பறையி னமம்."

எனறா மண்டலப் புருடன்.

அஙஙனே சேநதனும தனது திவாகரமெனற நூல் செயற்கை வடிவப பெயாதொகுதியின கண்ணே விரித்துள்ளமையுங காண்க.

அனறியும, "முரசு கடிபபிடூஉ முதுகுடிப பிறநதோன." என் றமணிமேகலையிற்றேனறும் "முரசு வெனபதற்கு தோற் கருவியாய பேரிகையலலது பொருள் வேறெஃதாம? ஆதலின் பறையாதாமே ஆதிதிராவிடர் என்பது துணிபாம். பின்னும முன்னர் தோற்கருவியொன்றே புயிலபவர் என்றுரை யாடற்கு மின்றி மிடற்றுக்கருவி விறபனர் எனறுங் கூறற்கிலக்காய் அரிசசந்திர புராணம் சூழவினைக்காண்டத்திலே விளஙகுகின்றபடிப் பறை குலத்துப் பெண்களும் நல்லிசை கீதம் பாடினரென்று கூறப்படுகிறது.

" கண்ணை வேண்டினு மீகுவன் காகஙின்ற
மண்ணை வேண்டினு வாழவுட னீகுவன்
பண்ணை வேணடிய செஞசொற பறைதலப்
பெண்ணை யானவேண் டிவனெனறு பேசினுன."

எனபதைககாணக. இவறறுல் "துடியன பாணன பறையன் ......... அலலது குடியுமிலலை' யெனற இலககியபடியே பறையன எனற பெயரினுலும அனனோரது புராதனம நன் கெடுததுக கூறற்கு இலககாதலின அனனோரே ஆதிதிராவிடர் எனறறுணிபு.

இததகையதாகவும சிறபபு வாயநதவராய விளஙகும ஆதி திராவிடரை ஏனாகளெனறு பிறாகாணுமபடியாகவும அதனுல் இந்த ஆதிதிராவிடாகள நாளுககுநாள க்ஷீணமடையுமபடியாக வும் சூழநத கறபனையாதோ வெனபதை விசாரிபபாம

There was no caste system among the Nagas and Dravidians It is an institution introduced by the cow loving Aryan settler.

[Tamil Studies 387].

அதாவது பணடைய மககளாகிய நாகர்— திராவிடாகளுக் குள்ளே ஆதியில சாதிபேதம இருநததிலலை. ஆனுல இநத வரு ணுசசிரம தருமம பசு விருமபும ஆரிய குடியேறிகளால தாபிக் கப்பட்டது. (எ—று)

எனபதால ஆரியா இநதியாவில குடியமாநத காலத் திலே தான இநதப்பேதம் ஒருவாறு ஏறபட்டதாகத தோன் றுகின்றது. இதறகுக காரணமெனனையோவெனின கூறு தும. இராமனுககு விரோதியானவன் இராவணன் ஆதலா லும் இநத இராவண ராஜயம செழிப்புடையதாய இராவண வமிசயாராலேயே ஆளப்பட்டு வருதலாலும, இராமனுதி ஆரியர் கள் அந்த ராச்சியத்தை அபகரிததுக் கொளளவேணடுமென்று அவாவியகொள்கை முற்றுப்பெறுமல் போனபடியினுலும்,

...மையஞான்றிலேனும் தமது கொள்கை சித்தியடையவேண் ... என்ற முயற்சி சூழ்ச்சி வன்மையினாலும் தமது கருத்தைத ...பித்துக்கொள்ளும் ஒரு நோக்குடையவராகவே தங்கருத்திற் ...சொனபடி அநேக பொயககாலஙகளும பொயககதா வர ...றுகளும தமது நூதன பாஷைகளில எழுதி வைத்துக் ...ண்டு புராதன மக்களை நவீன மககளெனறும, நீதியினை ...நீதியெனறும், நாகரீகமுடையோரை அநாகரீகரெனறும், பொயயை மெயயாகவும், மெயயைப பொயயாகவும விகற்பஞ் ...சயயற் றொடஙகினா. அவறறுள முதலாவது எல்லோரும ...ங்கீகரிப்பதறகானவருணபேதம—சிறப்பேதததைத ஏறபடுததி, ...ன்கிழ ஜாதிபேததததை நிலைநாட்டினா. இதுதான அஸ்தி ...வாரம, எனறவர்கள் கொணடதும அஙஙனே முடிநததும, இப் ...து மனனர் முதல் எல்லோரும மயஙகற்கானதுமாயுளளதா ...று. தற்போது பரவியுள்ள அசசுககூடஙகளும். அவறறால் ...ுததகம பத்திரம முதலான பிரசுரஙகள,தறபோது இநதியாவில ...ாபிததிருப்பதுபோல சீரியஞானஞ செழிததலா பிரிடடிஷ் ...ஙககாலததிறகுமுன், அதாவது 300வருடஙகளுக்குமுன, ...இநதியாவில அசசுப் புததகாதிகள இருநதிருககவிலலை. ...வந்தவரான குடியேறிகள தாஙகொணட சாதி பேத கொள்கை வலிமை பெறவும, தங்களுக்கே பிழைப்புண் டாகுமபடியாகவும், பறவைத்தலை—பாமபுததலை—மிருகத்தலை யெனததோற்றும சாமிகதைகளையும, அவற்றால் சமயபேத கதைகளையும், அவறறுள உயரவு தாழவுக கதைகளையும்; அவற்றை விரிததோதத நூதலைமைக கதைகளையும, மீனவயிற் றிலும், மிருகவயிற்றிலும, தவளை வயிறறிலும, சடப்பொருள் களாகிய குடம்—முதலியவறறிலுமிருநது மானிடவர்க்கம பிறக்

ரயும; ஆதாரமறற இலடசாதி லட்சமான வருட ...த்திர கதைகளையும, பலப்பலவாகத தற்போதிய அறிஞரும் ... வண்ணம், தஙகளது விருப்பின்படிப் பொய்களை எழு ...த்துக்கொண்டார்கள்.

முற்போது அச்சுப்பிரசுரமற்ற காலமாயிருந்தமையால், அந்தகைய புனைமைகளும் பரிமளத்தோடு அடங்கியிருந்தன, அச்சுத்துணை யற்றிருந்தமையாற்றானே, புனைமைச்சுவடிகளும் மிகு மதிப்புள்ளதாகி, அவற்றையுடையார் சக்கிரவர்த்தியொப்பப் பெருமை கொண்டவராய், அச்சுவடிகளை விரும்புமொருவர் அவற்றைக் கற்கவேண்டுமாயின் தாம், தமது தானம்—அத்தம—அங்கம்—சற்பாவம் என்பவற்றைத் தந்து ஏமாந்து நின்று பெறுதற்காகவிருந்தனர்.

ஆதலாலே பொய் பொய்யென்றும், மெய் மெய்யென்றும் உணராவதற்கன்று தற்போதும் இந்தியா தேசம் பொய்க்கதைகளில் புரண்டு திண்டாடுகிறது எனலாம்.

இத்தகைய நலவிசாரணையெழக் காரணராயிருந்த பிரிட்டிஷ் ஆளுகையாருக்கு நன்றிபாராட்டக் கடமை யுடையராதல் உத்தம தருமம் எனும் பாற்படுவதாயிருந்தும் நன்றி கெ[illegible]ராய அராஜகவினை புரியும் இந்திய மக்கள், அக்காலையில் [illegible] திராவிடரைக் கெடுக்கும் வினையுடையராய் இருந்தனரென்று சொல்லவும் வேண்டுமோ? பின்னும்

[illegible] தேசத்திலிருந்து ஆரியர்கள் (உஷ்ண தேசமாகிய) தென்னிந்தியாவுக்குள் குடிபுகுந்தோராதலால் இவர்கள் வெண்ணிறத்தராயிருந்தார்கள். இராவணன் தென்னிந்திய வாசியாதலால் * கரியனாயிருந்தான். ஆதலாலேயே இராவணன் என்ற சொல்—இரா—இரவைப்போற்கருகிய, வண்ணன்—நிறத்தையுடையவன். என்றுங்காணவிருக்கின்றது. பின்னும் இராமாயணம் சுந்தரகாண்டத்திலேயே இராவணன் கரியநிறத்தன் என்பதைப் பற்றி வலியுறுத்துவதைக்காண்க.

"தேவலோகமுதல் நாகலோகமளவில் நடுங்குகிற பிரதாபத்துடன் இராஜ்யபோகம் அனுபவிக்கிற பிரபுவாய்இராவணன்

---

* பின்னும் வால்—கரா—[illegible]னரர் என்பதின் பொருளும் வெள்ளை மனிதரென்றேயாம்.

...டிலின்மீது வருஷாகால மேகம்போல் கறுத்தசரீரத்தோடும் ...ருத்து உருண்டு நீண்ட கைகளோடும் சிவந்த கண்களோடும் ........................................... இராக்ஷசப் பிரபுவான இராவணன் உறங்குவதைக் கண்டார் ''

என்பதால் இராவணன் கரியன என்றே விளங்க இதனை மறைப்பான் போலும பொய்சசொலலிகள புதுகதை புதுக்கிச இலபதகுைய இவவிராவணன் சிவபிரானுல நசுஙகுணடா னெனறும அபபடி நசுக்கப்பட்ட காலே இவன கூககுரலிட்டா னென்றும அவவாறு இரைசசல இட்டமையினுலே சிவபிரான் இராவணன் (சத்தமிடுகினறவன) எனற பெயரைச சூட்டினு ரென்றும் ஒருகதை எழுதிவிட்டார்கள இப்படிக்கில்லாமல் ...நிறத்தைக் குறிப்பிபபதே இராவணன என்ற பெயா என் ...தயுறறு ஈனகுதெளிக.

தென்றிசையார் கரியராகவும் வடதிசை ஆரியா வெண் ணிறத்தாராகவும இருநதனா எனபது பெற்றும. இநத ஆரியரோடு வந்த திராவிடர்கள, மாநதளிா நிறததராயிருநதாா என்பது தமிழ வாசகமென்ற நூலில காணபபடுகிறது. மாநத ளிர் நிறமாவது—செம்பின் நிறமாம ஆகவே செம்பின் செந நிறத்தாாயிருநதார் சில திராவிடா என்பது பெற்றும இநநிறப் ...தத்தை முனனிட்டே. " வெள்ளையாயிருப்பவருக்கு உத ... தருமமும மஙகலாயிருப்பவருககு மததிமதருமமும் கறுப்பா யிருப்பவருககு அதம தருமமும விதித்தவராய்ப் பிரம—க்ஷத திரிய—வைசியர் என்று மூனறு வகுப்பைத தோறறிப் பின்னா ...தால குறைகூறினுர் போலக கரியரை அதம தருமத்தில விடுத்தாராய அவர்களைச சூததிரரென்று மறறொரு வகுப்பைத் தோனறவைத்தனர். சூத்திரர் எனப்படுபவரும வடதேசவாசி களேயென்று 55ம் பக்கத்தில் காட்டியுள்ளாம். தவிரத்தற்போதிய ...றக்திலும் அநதச் சூத்திரர் எனப்படுபவர் " இநது '' வென்ற ...ப்பிற் சார்நதோா எனல்பிரசித்தம். "இந்து" என்ற் பெயர்

இந்தியாவின் வடதிசையின்கண்ணுள்ள சிந்து நதிக்கரையிற் குடிபுகுந்து தங்கியிருந்த சிலருக்கே ஷை நதியடியாக இந்-வென்று பெயராயிற்று எனக்காண விருத்தலாலும் அங்கே ஆதிதிராவிடரெனும் புராதனமக்களை இறைறயன்றானறும இந்-வென்று ஷை சூத்திரர் அழைப்பதில்லை. ஆதலால் கரியசிறந் திருல ஆதிதிராவிடர்கள், ஆரியரால் ஏற்படுத்திய சூத்திரர் என்ற வகுப்பினத்தாராகார் என்றறிக

இந்திய இராசசியமானது தற்போது பிரிட்டிஷ் ஆளுகையில் சமாதானம் அடைந்திருப்பதைப்போலாமல் அக்காலத்தில் அடிக்கடி மன்னர் போராட்டம் உண்டாதலும், ஓரரசனை மற்றொருவன் செயித்தலுமாக ஒழியாப்புரட்சியுடையதாய இந்தியா ஆட்டமுற்றிருந்தது, இந்த நிலைமை சாதிபேதம் நாட்டுங்காரியஸ்தர்களுக்கு மெத்த அனுகூலமாகவேயிருந்தது. ஆகவே பிரம—க்ஷத்திரிய—வைசிய—சூத்திரர் என்ற ஜாதியின் உற்பத்தி விஷேத்தை எடுத்துக்காட்டத் துணிந்துவிட்டனர். என்னை! சீவக சிந்தாமணியின் கதாநாயகனான சீவகன், பலசாதி மாதர்களை மணந்து அப்பல சாதியார்களோடு உண்டு உறவாடியிருந்ததாகவும் ஆரியருமநெடுங்காலம் திராவிடமாதரை மணஞ்செய்து திராவிடரோடு கலந்து இருந்ததாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன. இவற்றுள் சீவகன் கிறிஸ்துவுக்குப் பிற்பட்டு நூற்றாண்டில் அதாவது ஏறக்குறைய 2000 வருடகாலத்தில் இருந்தவனாகின்றான். அக்காலத்தில், இக்காலத்திய மந்தபுத்திச் சாதிபேதம் இருந்ததாக காணறகிலலை. இதனால் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்ற நாற்சாதி ஆரியகதை எக்காலத்ததோ வென்பது வாசிப்பவர்களே யூகித்தறியல் வேண்டும். இது இங்ஙனமிருக்க, பொய் சொல்லியரான பிரம புத்திரர் கூறுவதாவது பிராமணர் பிரமாவின் வாயினின்றும், க்ஷத்திரியர் பிரமாவின் புஜத்திலிருந்தும், வைசியர் பிரமாவின் தொடையிலிருந்தும், சூத்திரர் பிரமாவின் பாதத்திலிருந்தும் பிறந்தார்கள் என்று மனுதன்ம சாஸ்திரத்தில் எழுதிவைத்துக்

காட்டுகின்றனர். இந்த மனுதன்ம சாஸ்திரத்தின் காலமோ இரேதாயுகத்தது என்றும் அஞ்சாமல் எழுதிவிட்டனர். இரேதாயுகமோ 1,728,000. வருடங்களைக் கொண்டதாகும். எனவே, அத்துணை நெடியகாலத்திற்கு முன்னரே 'ஷை நாற்குலமும் உண்டாயிற்று' என்று அறியாதார் மயங்கும்படிப் பிரலாபிப்பவரானார். ஆனால் இந்த மனுதன்ம சாஸ்திரமானது இற்றைக்குச்சுமார் 1720 வருடங்களுக்கு முன்பேதான் எழுதப்பட்டதாக, ஆராய்ச்சி வல்லுநர் நன்கெடுத்துக்காட்டுகின்றார்.

"Manava Darma Sastra or the laws of manu took shape about 200 A. D." [History of the Nations. page 140, By Hutchinson M. A., F. R. G. S., F. R. A S]

இங்ஙனமிருக்க அஞ்சாப் பொய்கூறுமக்கள் தமது தலைமையைத்தாபித்துக்கொள்ளும்படியாக லட்ச கணக்கான வருடங்களைக்காட்டி ஷை நாற்சாதி யுற்பத்தி காட்டுகின்றனர்.

பின்னும் பிராமணகுலமே யுலகு என்றபடியாக, மனு 32 பிரமர்தானே, ஸவாயம்புவமனு சதரூபை யென்று ஆண்—பெண் இருகூறாகி உலகில் மக்களைப் பெற்றார் என்றுங்கூறுவர்.

பின்னும் மகாபாரதம் சந்தியர்வம் தருவதாவது —பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரா என்பது முறையே வெண்மை—சிவப்பு—மஞ்சள் கறுப்பு என்ற நிறபேதத்தாலும் பிராமணர்கள் தங்கள் தொழிற் பேதத்தாலும் இவ்வாறு நான்கு குலமாய் முடிந்தது என்றவாறும்.

பின்னும் பகவத்கீதை IV அதிகாரம் தருவதாவது :— கண்ணபகவான் இந்த நாற்குலத்தை யவ்வவர்கள் குணங்களின் நிற்கொப்பப்படைத்தார் எனத் தருகின்றது. எப்படிப்படைத்தாரென்றால், கிருஷ்ணன் நூறு பிராமணர்களைத் தனது வாயிலிருந்தும் நூறு க்ஷத்திரியர்களைத் தனது புஜத்திலிருந்தும் நூறு வைசியர்களைத் தனது தொடையிலிருந்தும் நூறு சூத்திரர்களைத்

தன்து பாதத்திலிருந்தும் படைத்தார்" என்றபடியாம். எல்லாம் நூறுதான்!

பின்னும் விரிப்பிற் பெருகும் ஆனால் Dr. Muir மியூர் என்பவர் சாதியுற்பத்தியைப்பற்றிச் சமஸ்கிருத ஆராய்ச்சியாலாய் இயற்றிய தன்னூற் சாரமாய்த் தருவதாவது: சாதிபேதமானது வாயுபுராணம் எழுதப்பட்ட காலம்பரியந்தம் இவ்வித பேதமொன்றுங்காணற்கில்லை, சாதிபேத கதைகளெல்லாம் ஒருபடித்தா யெழுதப்பட்டதாகவுமில்லை ஒன்றையொன்று முட்டிக்கொள்வதாகவே யிருக்கின்றது.

"Contradictory are the Vedas, contradictory are the Shastras, contradictory are the doctrines of the holy sages"

மேற்றந்தவற்றால் வாயுபுராண காலபரியந்தம் சாதிபேதமில்லாதிருந்தது என்பதால் இந்த வாயு புராணத்தின் காலமாவதென்னை வாயுபுராணமாவதென்னை யெனக்காணபமாயின் வாயு புராணமானது புராணங்களில் மிகப்பழமையானதாம். இதன் காலம் கி பி 320 கடைசியாக சேர்ந்த புராணத்தின் காலம் கி பி. 11-ம் நூற்றாண்டு என்றார் ஆய்ந்தோர்.

"The date of the oldest of these Puranas, probably *Vayu Purana* is believed from about 320. A. D. and the latest to be of the 11th Century. Tamil Studies 280-ம் பக்கங்காண்க

இதனால் 1620 வருடங்கட்கு முன்தானே இச்சசாதிபேதமானது ஏற்பட்டதாகத் தெரிகிறது. இவ்வளவிலே குறுகற்காகும் சாதிபேத ஏற்பாட்டைப் பல லட்ச வருடங்களுக்கு முன்னே ஏற்பட்டதாகச் சாமிகளைக்காட்டி யதன்[illegible]ாரபாகவே சாதுவாக யிருந்துகொண்டு சாதிபேத பிராயசித்தங்களை வெகு கொடூரமாகக் கற்பித்து ஏழைமக்களை வருத்தி வந்தற்கிலக்கானோர் ஆரியர். இவர்கள் நினைத்ததே ஸ்மிருதியென்றாயிற்று. ஸ்மிருதியென்பதின் பொருளும் மனத்தால் நினைக்கப்படுவதென்றே கூறுவர் கற்பண்டிதர்கள்.

மேற்றந்த காலவரம்பின்படி மனுஸமிருதியாக்கமும் பறை என்ற ஒரு குலத்தோற்றமும் ஒரு காலத்ததாகவே வெளியாமது. இந்த மனுஸமிருதி ஏற்பட்டதின் காரணமும க்கப்படின் பறையரென்ற பெயரை அதற்குரிய உடபொருபடிப் பிறர் அழைப்பதற்கு இடந்தாமல் அதன் சிறப்பைபம்படுத்தவும அவா சந்ததியை யொழிப்பதற்குமே ஏறபட்டதாய்த் தெரியவருகிறது எயஙனமெனறுல ஐததிரேய பிரர்ருமாறு வைசியர் இருக்குவேதத்தினின்று வந்தவர்கள். த்திரியா யசூர்வேதத்தினின்று வந்தவாகள. சாமவேதததிறு பிராமணாகள வநதனா. (எ—று).

இதனுல ஷை மூன்று வகுப்பினரும வேதத்திற்குரிய வேதிம எனறவாருயிற்று. ஏனையோா அவவாறுயாநதோரனறுலும. பினனும

The Brahmin caste is sprung from the Gods; the Sudras from the Asuras"

"பிராமணர் கடவுளினின்று பிறநதவாகள சூத்திரா அசுராிலிருந்து பிறநதவாகள." எனறவொரு கொள்கையுடைராகவே இந்த அசுராகளை யொழித்துவிடவேண்டி இராமனுகிய தேவன அசுரனுகிய இராவணனமீது படையெடுத்ததும தங்கள் வேதமெனப்படும ஒனறிலே அசுராகளைக் கொல்லும்படிபிராாதத்னைகளே ஙிரபபிவைத்துக் கொண்டதும மனுதன் மநுவெனற ஓாதனமநூலே ஏற்படுத்திககொணடதுமாகிய ஞ்சிகளெலலாம தாம்வாழவும புராதன குடிகள மாளவுமாகச செய்துக்கொணட ஸமிருதிகளாகவே விளஙகுகினறன உதாரண

மனு. 92. பிராமணன் பரிசுத்தமுள்ளவன்.

,, 93. பிராமணன் முதற்பிறநதவன அவனே வேதத்திற்குரியவன் சிருட்டிகளா எல்லாவற்றிற்கும் ஆண்டவன் அவனே.

,, 100. உலகிலுள்ள பொருள்களெல்லாம பிராமணனுக்கே உரிமையாகும.

,, 317. நெருப்பு எப்படிப் பரிசுத்தமாக விருக்கின் றதோ அதுபோலப் பிராமணர்கள் வாசியா தவனுயிருந்தாலுஞ் சரி. வாசித்தவனுயிருந்தா லுஞ் சரி. அவன் வணங்கத் தக்கவன்.

,, 318. பிராமணனைக் கொல்லவேண்டுமென்ற எண் ணம் அரசனிடத்தும் இருக்கக்கூடாது. அப் படியொருகால் நினைப்பாராயின் அதற்குச் சமமான பாபம் பூதலத்தில் வேறொன்று மேயிராது.

என்றபடிப் பிராமணர் பெருமையினைப் பின் னும் ஷை நூல் 94, 95, 98, 99, 101, 379, 380, 381, சுலோகங்களிலே விதந்தோதப் பட்டிருக்கின்றன

,, VIII பின்னும் ஷை நீதி கருமானுஷ்டானமில்லாத பிராமணனேனும் அவன் அரசன் செய்ய வேண்டிய தீர்ப்புகளைச்செய்யலாம். சூத்தி ரன் ஒருபோதுஞ்செய்யக்கூடாது.

,, XI 379. பிராமணர்களுக்குத் தலை மயிரை முண்டிதஞ் செய்வது கொலைத்தண்டமா கும் மற்ற வருணத்தாருக்கு உயிர்வதையே கொலைதண்டமாகும்.

,, VIII 413. சூத்திரன் விலை கொடுத்து வாங்கப்பட் டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனை பிராமணன் நிர்பந்தப்படுத்தி வேலை வாங்க லாம். கடவுள் சூத்திரனை பிராமணனுக்கு வேலைசெய்யும் ஒருநிமித்தமாகவே படைத் திருக்கிறார்.

,, VIII 417. பிராமணன் சூத்திரனுடைய பொருளை முழுமனச் சமாதானத்துடன் (சற்றேனும் பாவமெண்ணாமல்) கைப்பற்றிக் கொள்ள

லாம. ஏனெனில் அவனுக்குச் சொந்தமான தொன்று மில்லை யாதலாலும், அவன் சொத்தை அவன் எஜமான எடுத்துக் கொள்ளலாமாதலாலும்.

,, VIII 270. சூத்திரன் பிராமணனைத் திட்டினால் அவன் நாவை அறுத்தெறிய வேண்டும.

,, VIII 271. சூத்திரா பிராமணர்களின் பேரையாவது சாதியையாவது தூஷித்தால பத்து விரல் நீளமுள்ள பழுக்கக் காய்ச்சிய இரும்பை அவன் வாயக்குள் செலுத்தவேண்டும.

,, VIII 272. சூத்திரன் ((பிராமணர்களை) உயர் குலத்தானை அடிப்பதற்குக் கையையாவது தடியையாவது உயர்த்தினால் அவன் கையை வெட்டி யெறிந்துவிடவேண்டும்.

அவன் கோபத்தால் அவனை உதைத்தால அவன் காலை வெட்டி யெறிந்துவிடவேண்டும.

பின்னும ஷை நூல 280, 281, 282, 413, 414, 417, 123, 129, 283, 51, 52, 126, 80, 81, 132 முதலியவற்றைக்காண்க.

இத்தகைய அக்கிரமநூலை மனுதர்ம சாஸதிரம் என்று மக்களுக்குப் போதித்து அயாகள பாழடைந்து போகச்செய்தார்கள்.

இது இவ்வாறு அநீதங்களைப் போதிக்கும் தீய நூலாகவிருப்பதினாலேயே Sir William Jones, Chief Justice of Bengal இந்நூலைப்பற்றி கூறுவதாவது :—

Code of Manu, "The work now presented to the European world, contains abundance of curious matter extremely interesting both to speculative lawyers and antiquaries with many beauties, which need not to be pointed out and with *blemishes*, which

cannot be *justified* or *palliated*. It is a system of *despotism* and *priestcraft*, both indeed limited by law but *artfully conspiring to give mutual support* though with mutual checks , it is filled with strange *conceit* in metaphysics and natural philosophy with *idle* superstition and with a scheme of theology most *obscurely figurative* and consequently liable to dangerous misconception ; it abounds with minute and childish formalities, with ceremonies generally *absurd* and often *ridiculous* , the *punishment are partial*, and fanciful for some crimes *dreadfully cruel* for other reprehensibly slight , &c., &c., &c.

அதாவது மனுதன்ம சாஸ்திரமானது கொடுங்கோன்மை யுடையதாகவும் பூர்வ குருக்களது தந்திரங்களைக் குறிப்பதாக வும், நல்லோர்களால் கண்டிக்கப் படத்தக்கதாகவும், வஞ்சகம், மௌட்டீகம், நடுங்கத்தக்க கொடூரம் முதலிய தீய குணங்களை யுடையதாகவும் தண்டிப்பதில் பக்ஷபாதமுடையதாகவு மிருக் கின்றது. (எ—று).

இத்தகையது இந்நூலென்று விசால அறிவுடைய பிரிட்டிஷ் காருண்யர்களைப்போல இதுகாறும் இந்தியாவிலுள்ள ஆரியரில் ஒருவரேனும் இந்த அதன்மநூலின் இழிவை வெளியிட்டாரில்லை. "ஒருகுலத்திற்கொருநீதி', கூறும் இந்தப் புலலிய பிராமண நூல் திராவிட தேயத்திற்குச் சட்டமாகும்படியான பெருமுயற் சியெடுத்து அக்காலத்திய மன்னர்களை எவ்வாறோ மயக்கி இணங் கும்படிச்செய்து, இந்த ஆரியர்களின் சூழ்ச்சியை அறியாதி ருந்த மக்களைத் தமது கீழடங்கியவராகச் செய்துகொண்டு அவர்களுக்குக் குருபீடமாகி அவர்களாலே எல்லாச்சுகமும் அடைந்து வருபவராவார் இவ்வாரியர்கள்.

இவர்கள் இந்நூலை ஏற்படுத்தியது மக்களைப் பக்ஷபாதமாய் நடத்தும் ஒருநோக்கையுட்கொண்டேயன்றி மற்றுயில்லை.

இராமன் வந்தகாலத்திலேயே விரோதியாயினோர் இராவண சந்ததியாராய ஆதிதிராவிடர்கள். இவர்கள் அரசியல் முறைமை சைவசமயம் தமிழ்ப் பாஷை சங்கீதம் நாகரீகம் முதலிய நற்குணங்களெல்லாமுடையராயிருப்பதை நோக்கி இந்த ஆதிதிராவிடர்களை ஒடுக்கி நசிப்பான, முதலாவது அரசைப்பற்றிய சரித்திரத்தை மாற்றி, இவர்களை இராக்ஷசர், அசுரர்—பறையர் என்று கூறி இவற்றை இழிபொருள் தருமாறு எழுதி வைத்தனர். இவர்கள் சைவசமயிகள் என்பவற்றைமாற்றிச் சிவபிரான் இராவணன் வதைபடும்படி நசுக்கினார் என்று ஒரு கதை எழுதிவைத்தனர். அந்தோ! இராமாயணம் உத்தரகாண்டத்தில் அங்காரதாரை... ... ..... .. .. .....என்ற தொடக்கத்துச் செய்யுளிலே வருசம்புமாலி முதலோர். "என்றதில் சம்பெனும் சைவப்பெயரானது

கூட்டத்தாருக்கு இருந்ததாகத் தெரிகின்றதே.

ச்சமன்றோ அவ்வரயன சந்ததியாருக்குச் சாம்புவகுலமென்று தற்காலத்திலும் பெயரா யிருக்கக் காணப்படுகின்றதே. பின்னும் சைவகணமாகிய நந்தியின் பெயரைத் தட்டுத்தமொறின் றிக்காண்பிப்பான போனறனரோ? நந்தன (திருநாளைப்போவார் நாயனார்) என்றபெயரும் இக்கூட்டத்தாருள் இருந்ததாகக் காணப்படுகின்றது. பின்னும் ஆதிசைவசமய நெறியைக் கழித்து மறைத்தவற்றுள் எஞ்சியதாகப் பிற்காலத்தில் அதாவது சகம் 1143-ம் வருடத்ததாயக் காணப்படும் சைவ சித்தாந்த முதனூலாகிய சிவஞானபோதம், இந்த ஆதிதிராவிடருக்கும் போதிக்கலாம் என்றபடி சிவபிரானே கனவிற்றோன்றிக் கட்டளையிட்டதாகவும் ஒருதளாந்த கதையுங் கூறுகின்றதே.

*" அடியாராக கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியாருக் கெழுதியகைச் சீட்டும்—படியின்மிசை
பெற்றானசாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை." என்பதைக்காண்க.

---

*சைவசித்தாந்த வரலாறு அனவரத விநாயகம் பிள்ளை, M. A., L. T. 24-ம் பக்கங்காண்க.

சைவசித்தாந்தநூல பதினுன்கினுள் திருவுநதியாரெனும் ஒருநூ இயறறிய, திருவியலூா. உயயவநத தேவரும புலையராகவே தோன்றப்படுகின்ருா. இத்தியாதியால ஆதிதிராவிடர் ஆதி சைவசமயிகள் என்பது நனகு தோறறமாயிருநதும், இதனை மாறறி இவாகள சிலமிலலாதழியுமபடி ஸமிருதி கறபிதது "பறையரைக கோயிலுககுட் சோகககூடாது." என்ற கட்டளை விதிததுககோவிலுககும புறமபினராககச செயதுவிட்டனா இதற்குசசான்ருக கோபால கிருஷணையா நநதன் கீர்த்தனையும எழுதிவிட்டாா இவரெழுதிய கீாததனைக்கு முதனூலாயுள்ள பெரியபுராணததில விளஙகும 63 நாயனமாாகளின் காலமோ கி. பி. 7-12-ம நூற்ருணடெனறே தீாமானிககபபடுகினறது. உதாரணமாக 1913ளு நவமபாமீ 7உ மதராஸ் மெயில் பததிரிகை சௌத இநதியன இனஸகிரிபஷன எனற மகுடததடியில வெளியான பிரசுரததினுல கவான்மெண்ட் எபிக்ராப்ட்ஸகளுக்கு தெனனிநதியாவில 600 சிலாசாஙகள கிடைததாகவும அவறறில ஆரியா குடியேறுவதறகுமுன் திராவிடா இருநத நாகரீக சிறபபு நன்கு விளஙகுவதாகப் பலகூறுவதுடன 63 நாயனமாாகளில ஒருவராகிய சிறுததொண்ட பததன எனபவா கி. பி 7-ம நூறருணடில இருநதிருககலாம எனததருகினறது. இவற்ருல நாயன்மாாகள சரிதம நன்கு புலமாகினறன. இவாகளின சரிதையை சேககிழார் பெரிய புராணமெனஒருரு காவியமெழுதியகாலமானது இற்றைககுச சுமாா் 850 வருடஙகளாகினறன. இதனிடையில அபபுராணததிறகு எததனையோ பொய மாற்றுககள் வந்திருககலாம. பிறகு 800 வருடமான பிறறை ஞான்று எழுதிய ஸ்ரீ கோபால கிருஷ்ணையா தமபரமபரை போதப்படி பறையருக்குச சைவசமய உரிமையினறென முடிததுககொணடாா். இவவிதமே, ஆரியாகள் சைவபததியுடையராயிருநத ஆதிதிராவிடரைக கெடுத்துச சிவாலயததருகிலும தலைககாட்டககூடாதென ஒடுக்கிவிட்டனர். இநத ஆதிதிராவிடர் தனவயத்தனுகி

...ண்ம்பொருந்திய பகவனது கோயிலுக்கும் போகக் கூடாது என்று தடுத்ததுடன் இதனை ஏற்படுத்திய பிராமணர் வசிக்கும் இடத்திலும் இவர்கள் தமது காலை வைக்கக்கூடாது கிராமத்திற்கு அப்பாலேதான் வசிக்கவேண்டுமென்றும் சட்டமேற்படுத்தியிருந்தார் (மனு 51)

பின்னும் இந்த ஆதிதிராவிடர் நன்றாக உடைதரிக்கக்கூடாது நகைகள் தரிக்கக்கூடாது. நல்ல பாத்திரங்கள் கொண்டு சாப்பிடக்கூடாது. இவர்கள் பிணத்தின்மேல் சுற்றப்பட்டுள்ள துணிகளையே தரிக்கவேண்டும் உடைந்த பாத்திரங்களில்தான் இவர்கள் புசிக்கவேண்டும் இரும்பைத்தான் இவர்கள்நகைகளாக அணியவேண்டும். இவர்கள் ஓரிடத்திலேயே இருந்து வசியாதபடி அங்குமிங்குமாக அலைந்துதிரியவேண்டும் (மனு. 52.) இவர்களை ஆரியர் கொலை செய்தாலும் நாய்—பூனை—தவளை-ஆந்தை காகம் இவற்றைக் கொன்றதற்கே சமமாடி பாபமுமில்லை. (மனு. 182).

என்றபடியான சட்டங்களை விதித்து ஆதிதிராவிடர்களைப் பயமுறுத்தியதல்லாமல், இவர்கள் தாகந்தீரத்தண்ணீர் அருந்துதற்கியலாதபடி நீர்த்துறையண்டையும் ஆதிதிராவிடர் நெருங்கக்கூடாது இப்படியிருக்க இவர்கள் குளித்துச் சுத்தமாதல்தான் எப்படியோ? பின்னும் இவர்களை நசுக்கும்படியாக உபாயஞ் சூழ்ந்த சட்டங்கள் பலவிகழ்த்தினார்கள்

இவற்றால் அறியப்படுவதென்னையோவெனில் இவ்வளவு இவ்வாரியருக்கு அந்த ஆதிதிராவிடர்மீது பகை உண்டானதின் காரணமியாதாக விருக்கலாம் என்று நோக்குமளவில் இராவணனது சந்ததியராகி இந்தியாவின் புராதன குடிகளாக இவர்கள் இருப்பதால் இவர்களைத் தொலைக்க வேண்டுமென்ற ஓர் எண்ணமேயன்றி வேறென்னும்.?

தம்போன்ற மனிதர்களைக் குரங்குகளாகக் கற்பித்துக் கதையெழுதிய ஆரியர்கள் கொள்ளுஞ் சாதிபேதத்தைப்

பாராட்டி அனனோரபோல பாவனைசெயதுகொணடு நீதி அந
மெய பொய் என்ற பகுப்புணராமல அவவாரியாகளைப்பார்க்
கிலும் அதிகபேதம பாராட்டுபவராய இவவாதிதிராவிடர்களைப்
பின்னும ஒடுககும கருததுடையராயததேர்னறிலா இவவாரி
யரின் பின்பற்றிகளும..

இவவாறாக எலலோராலும பகைககப்பட்ட தனிககுடியாக இவ்வாதிதிராவிடர்கள ஒதுககப்படடபினனா "பனையேறி விழுநதவனைக கடா ஏறி மிதிப்பதுபோல" பறையன் வெட்டியான என்ற பெயாகளோடு பாதகா கயவா நீசா புலையர் சணடாளா என்று பல அநநிய பெயாகளையும இநத ஆதி திராவிடர் மேற்சூட்டிப பூட்டிவிட்டனா

"பலலவா கயவா பதகா நீசா"

என்ற பிஙகலை நிகனடு தருமாறு இபபெயாகளானவை பலலவ ராஜன சநததியாருககே உரியனவாம பலலவன இநதியாவின் வடமேறகுத திககிலிருநது தெனனிநதியாவுககு வநதவன எனறும் இவன சோழராஜவினததைப போன்றவனென்றும, இவனது பெயர் பழமையான தமிழ இலக்கியஙகளில காணப்படவிலலையென்றும இவன திராவிடனலலனெனறும கி பி. 7-10-ம் நூற்றாணடிற்றுன் இவன பலவநதனாக தெனனிநதியாவில அரசோசசினவனுவா னெனறும், சரித்திராசிரியாகள கூறுவா.

S. I. Inscription Vol. 11. Part 3. குறிககின்றபடி பல்லவன் கி. பி. 7-ம் நூறறாணடிலேயே இருநததாகவும, கொள்ளப்படு

இநதப் பல்லவன் சேர சோழ பாணடியாகளுககு விரோதியானவன். ஆதலால் இவனையவாகள் கள்ளன எனறழைக்க இப்பெயரானது அவனுடைய சநததியாருககுக கள்ளா எனறாகி அதுவே (கள்ளா) சாதிப்பெயராக வழஙகற்காயிற்று எனறுயஙதோர் கூறுவர். ஆதலால், கயவா-பாதகர்-நீசா. கள்ளா என்ற பெயர்கள் ஆதி

திராவிடர்களுக்கு விலட்சணமாயிருந்தும், இழிவென்றுணர்ந்த அக்குலத்தோர் ஒடுக்கமுற்ற பழங்குடிகளாய ஆதி திராவிடாமீது இப்பெயர்களைச் சுமைத்து விட்டார்கள்.

பின்னும், புலையர் என்னும் மற்றொரு பெயரை ஆதி திரா விடர்களுக்கு இட்டு வழங்கற்காயினர். புலை = பஞ்சமாபாதகம் என்ற பொருளடியே ஆதி திராவிடர்களுக்கு இப்பெயர் எய்தி யதோவென, உயர்ந்த சாதியோர் எனப்படுபவர் எழுதிய புராணங் களை விசாரிக்கப்புகின அந்தப் பஞ்சமா பாதகங்களானவை தேவர் முதல் இந்து உயர்சாதி நரர் ஈறுயுள்ள எல்லோரகத்தும் இழைப் புண்டதாகவே காணப்படுகின்றது. ஆதலின் புலையர் என்றபெயர் ஆதி திராவிடர்க்கே உரிய பெயரென்பது வெற்றுரை யென்க. மற் றொரு சாரார் புலால் உண்ணுபவர் புலையர் எனப்பொருள் தருவர். ஆயின் உலகினுள்ள மாந்தர் எல்லோரும் ஆடு-மாடு- பன்றி-கோழி மீன் முதலிய புலால்= இறைச்சி. தின்பவராகவே காணப்படு

வேதியரான பிராமணர்களும் கி. பி. 250-ம் வருடமட்டும் மாடு, ஆடு பன்றி, மான், மீன இறைச்சிகளைத் தின்று வந்தவராக வும், அதன்பின்பு ஜைனர்களின போதத்தினால் கொலலாமை யெனுந் தன்மம் உணர்ந்தவராகிப் புலாலுண்பதை விலக்கினர் என்றும் தெரிய வருகின்றது. இக்காலத்திலும் பிராமணருள் சிறுபான்மையோர் புலால உண்ணுகின்றாரன்றோ ?

ஆகவே இந்திய பல்கோடிச் சாதித் தலைவராம் ஆரியர் முதல் மற்றெல்லா வருப்பினரும் புலால் உண்டு புலையராயிருந்தும் மற திப் பயன்போலும், ஆதி திராவிடர்களைமட்டும் புலையரெனக் கூசாமற்கூறி வாளா வாழ்கின்றனர். இதனால் புலையர் என்ற பெய ரும் ஆதி திராவிடர்களுக்கு அநீதமாயிடப்பட்ட பெயராமென் றறிக.

பிராமணர்கள் எப்படி ஜைனம் புத்தம், என்ற மதங்களைத் தழுவினார்களோ அங்ஙனே ஆதி திராவிடர்களும் பிற்காலத்தில் புத்தமதந் தழுவியிருந்தார்கள்.

## சிவஞான சித்தியார்.

சௌத்திராந்திகன் மதமறுதலை 37-ம் பாட்டு

"தின்னுமது குற்றமிலைச் செத்ததெனும் புத்தர்" என்ற புத்தர் போதத்தின்படி அஹிம்சாதருமம் = கொலைசெய்யாமை யெனும் விரதம் பூண்டிருந்த சில புத்தர்கள் உயிர்துறந்த மிருகாதிகளையே உண்ணறகானார்கள். பிற்றைய ஞானறிலே ஆதிதிராவிடரை ஒடுக்கவேண்டும் என்றிருந்த மக்கள், இப்பழக்கத்தை ஆதிதிராவிடர் மீதே சூட்டி அனேரைச் செத்தவற்றை யுண்ணும்படியாகவும் வற்புறுத்தா நின்றனர்.

Wheeler observes that the Hindu Yogis were there nothing more than Moghul Priests.

The Moghul priests and the Vedic Aryan might have had a common ancestry. Moghuls were fond of flesh meat. They would eat the flesh of any animal even if it had died a natural death (Origin of Brahmin Page 12)

அதாவது. மோகல், ஆரியர் எனப்படும் இருகுலத்தோரும் ஏகவமிசத்தவர் என்றும் மோகல இனத்தவர் இயற்கையாய் உயிர் துறந்த எந்த மிருகங்களையும் உணபவர் என்றும் கூறியவாறு

இதனால் செத்தவற்றின் புலாலும், பலவேறினத்தவரும் உண்டிருத்தலின் ஆதி திராவிடர் மட்டும் எவ்வாதாரத்தாலும் புலையர் என்று பிரித்தழைத்தற் கருகரல்லர்

பின்னும் ஆதிதிராவிடர்களுக்கு வலங்கை முகத்தார் என்ற மற்றொரு பெயர் வழங்கற்கானதை விசாரிப்புழி அது புகழ்தரும் பெயரே யன்றி வேறல்ல. எங்ஙனமெனின், ஆதிதிராவிடர்கள்

அரசகுடும்பத்தைச் சாராதோராதலால் அவர்கள யானையேற்றம், குதிரையேற்றம், வேட்டை முதலிய வீரச் செயலகளில் மிகக உவப்புடையராவர்.

அங்ஙனே கி. பி. 11. ம நூற்றாண்டில சிறந்தவனுயிருந்த இராஜராஜ சோழனது வெற்றிககுக காரண மாயிருந்த சேனை வகுப்பில் ஆதிதிராவிடாகள் சேனையாக விளஙகியதால, இவாகளை வலங்கை முகததாரெனறும், சோழனுககு விரோதியான பல்லவ ராஜனது குடிகளான பள்ளா—பளளி—மடிகர் பேடா என்னும் வகுப்பினரைக கொணட சேனையைச சோழன இடஙகை முகத்தரா எனப் பெயரிட்டானெனறும சரிததிராசிரியாகள கூறுவா

வீர தீர வனமையை எடுததுக காட்டுவதாயுளள வலஙகை முகததார் என்ற ஆதிதிராவிடாகளின பெயரானது, அனனோர் ஒடுங்கி வறிஞரான இக்காலததிலே கேட்பாரறற கீழ்ப்பெயரே யெனச் சாதிபேத பழக்கமுடையாாபால வழஙகபபடடு வருகின் றது.

பின்னும் வீரபாகு எனற பெயரோனறன இனததவர் ஆதி திராவிடரென இகழவாய் ஒருசார குட்டிககதை யொனறு கட்டி யுள்ளோரே இகழ்படக் கூறுவர். இதனை விசாரிககு மளவிலும், ஆதிதிராவிடர் ஆதிதிராவிடரென்றே அறியற்பாலதன்றிப் பிறி தியாம். அருச்சுனனோடு போாபுரிநதவனெனப் பாரதத் தில் காணப்படும ஆயுரவாகு என்றபடி, கயவாகு பராககிரமவாகு சித்திரவாகு என்ற அரசப் பெயாளவில வீரவாகு என்ற பெயரும் ஒத்திருத்தலோடு அநத வீரவாகு என்பான் அயோததிக்கரசனு யிருந்த அரிச்சநதிரனையும் அடிமையாகக கொள்ளததகக செல்வவந் தனுய விளங்கினுன் எனறும் அறியவிருப்பதால் வீரவாகு என் பான் இகழ்பட விருந்த ஒருவனென்று சொல்லற்ககன்று அவன் —னென்று புகழ்படவிளஙகிய புரவலனென்றே ஒப்பற்காகின்றது

வாகு என்ற விகுதி புணர்ந்த பெயரின் பெரும்பாலார் இராவணனது நாட்டாராக விருத்தலோடு இராவணன் நாட்டை பறையனூர் என்று சின்னாட்களுக்குமுன் தோன்றிய இராமநாடகத்திலும் குறித்திருப்பதால், ஆதிதிராவிடரை இழித்தறையும் ஒரு நோக்கத்தாலேயே வீரவாகுவை இகழ்ந்தனர் எனலாம்.

பின்னும், இராவணனை தமிழ்ப்பாஷையையும் சைவசமயத்தையும் பண்டையுடையான் என்பது வலியுறுத்துமாறன்றோ வீரவாகு என்ற பெயர் நிலவுகின்றது! எங்ஙனமென்றால் தமிழ்த் தெய்வம், குறிஞ்சி நிலக் கடவுள், கந்தவேளின் திருக்கணமாகவுமன்றோ வீரவாகு என்ற பெயர் வழங்கப் படுகிறது. இதனியாதியவற்றிற்கு முற்றும் புறம்பாக, சில காலத்திற்கு முன்தோன்றிய மனுதன்மநூல 52-ம் சுலோகமானது வீரவாகு என்பவன் சுடலை காப்பவன் என்று கூறுவதெனனே!

The yakshas of Ceylon and Rakshasas of South India belongd to the Same race of people called yatudanas in the Vedas and Nagas in the latter Buddhistic and other literature. They might have been the ancestor of the Modern *Pariahs* Pallas Idaiyas Maravas and Kallas. [T. S.

அதாவது இந்திய தென்பாற்கண் இராக்ஷதர் என்றழைக்கப்பட்டவரின் இனத்தவரே தற்போது பறையர் பள்ளர், இடையர், மறவர், கள்ளர், எனப்படும் சாதியார் என்றவாறு.

இராக்கதரோ தமது பிணங்களைப் புதைக்கும் வழக்கமுடையரேயன்றிச் சுடுவாரல்லர். அங்ஙன மிருக்கத் தென்னாட்டிச்சனே யெனுமாறுள்ள (இராக்கத) வீரவாகு சுடுகாட்டில் இருந்து காவல் புரிபவன் என்றது எவ்வாறு பொருந்த முடையதாகும்?

இவன்

—

வன் என்றது அன்னோரைப் பண்டைய அரச இனத்தவரென்று வலியுறுத்தற் பாலதாம் என்க. அங்ஙனே தற்போதும் ஆதி

டர் தமது திருமணகாலத்தில் அரச சின்னங்களாகிய கொடி மாம் முதலிய விருதுகளுடன் குதிரை மீதேறி ஊர்வலம் வரு ம்; உலகுக்கு முதலாவது கடவுள், இரண்டாவது அரசன் ன்ற விசுவாசத்தின்படித் தஞ்சாவூரில் சிவன் ஊர் வலமாம் பாது பறையனும் சிவனோடு வாகன ரூடனாய் வருதலுமே போதிய சான்றாம்.) பின்னும் ஆதி திராவிடர்கள் பண்டைய தமி என்பதற்குத் திருக்குறள் அருளிய திருவள்ளுவர் கபிலர் வ யென்பவர்களே சான்றாம். இவர்கள் சைவ சமயிகளே யென்றும் முன்னரே குறித்துள்ளாம் இத்தகையாளரைச் சைவத ப் புறம்பானவரென்றும், காளி முதலிய தேவதை வணக்க முடையவர்களென்றும் கூறுவர் சிலர்.

வடவிந்தியாவாகும் வங்காளத்தில் உள்ளவர்களின் தொகை யில் முக்கால் பங்கினர் காளி வணக்கமே யுடையார் என்றும், யினாலேயே அவ்வூருக்கு (காளி-காட்) கல்கத்தா வென்ற பெயர் வழங்கற்கான தென்றும், கல்கத்தா வாசிகள் காளி யை வணங்குவதில் மிகவும் பக்தி வைராக்கிய முடையவர் என்றும், காளிமீதுள்ள பக்தி வைராக்கிய முதிர்ச்சியால் கொடிய நரபலியும் செய்து வந்தார்களென்றும், இந்தக் கொடிய செய்கையாம் பக்தியைத் தாங்களே தக்கதன்று என்றுணர்ந்து ர்த்தி செய்வதற்கில்லாமல், வீணே மடிவதைக் கண்ட காருண்ய ட்டிஷ் அரசாங்கத்தவர்கள் 1845-ம் வருடத்தில், ஷை நரபலி யைத் தடுக்கத் தலைவர்களை ஏற்படுத்தி 1861-ம வருடம் பரியந்தம் கவனித்துத் தடுத்து நல்வழி காட்டினர் என்றபடி, டாக்டர். டாக் துரையவர்கள் தனது "இந்து மதம்" என்ற புத்தகத் திலே வெளியிட்டுள்ளார்.

இப்படி யிருக்க பலர் ஷை வங்காள வாசிகளின் காளி வணக் கை முற்றும் மறந்து சைவ சமயாதிகாரிகளான ஆதி திராவிட ரக் காளியை வணங்குகின்றவர், சைவ சமயத்திற்குப் புறம்பான

வர்கள்; என்று தாஙகள் தஙகள் பழககப்படிப் பேசுவாரானர். அந்தகையோர்களுக்குப் பிரமாணமாகும்படி ஸ்ரீமான். கோபால கிருஷ்ண ஐயா அவர்களும் நநதனா கீர்த்தனை என்றோர் அவரது நூல் இயற்றி யுதவி விட்டார்.

இவ்வித குரூர நெஞ்சத்தவாகள் ஆரியா என்று தெரிந்து கொண்டமையினறன்றே ஆதிதிராவிடாகள், தஙகளது சேரிக்குள் ஆரியர் புகுவரேல் அவாகளா காலவைதத இடமும் கெட்டதென் பானபோலும் ஆதிதிராவிட மாதாகள அவ்வாரியர்களைப் பின் தொடாந்து அவாகள் சேரியை விட்டகலுமவரையில சாணந் தெளிததுச சுததப்படுததுபவராய முன் வருகின்றார்கள். இது 30-வருடஙகளுககுமுன் யான் திரிசசிராப்பள்ளியில் கண்ட காட்சியாம.

இது நிற்க "கள்ளன மறவன கனதததோ ரகம்படியான், மெள்ளமெள்ள வெள்ளாளன்." எனறவணணம் ஆரியரல்லாதார் தாஙகள நாளுககு நாள வெவ்வேறு சாதிகளெனப் பிரிந்துகொண் டாாகள. உதாரணமாக கள்ளரெனப்படுவோர் தேவர்களென் றும, பள்ளியெனப படுவோா வன்னியர்களென்றும் கம்மாளர் எனப்படுவோா விஸவ பிரம வமிசத்தவரென்றும் இவ்வாறு ஆதி திராவிடருககு வேறாக அநேக சாதிகளா முளைததுககொண்டே வருகினறன. பின்னும சாமாவென்பது பிராமணருககும் வர்மா வென்பது க்ஷத்திரியருககும குப்தாவென்பது வைசியருக்கும், தாசரெனபது சூததிரருககும் உளள குடுமப சாதி பெயர்களென அவை யொருபால வழங்கப்பட்டு வருகினறன, தசசன் தட்டான் கணககன் என்றபடித தொழிலைப்பற்றி அநேக சாதி பெயர்கள் தோனிப்புண்டு வருகின்றன. விரிப்பிற் பெருகும்.

இநதியாவின் ஜனததொகையானது 30 கோடியென்று கணிப்பா சாஸ்திரிகள். இநதியாவின தேவா தொகையோ 33 கோடியென்று கணிப்பர் இந்து ஞானிகள். ஆக இநதுவான ஒருவற்

ஒரு தேவனுகை வகுத்திககாணினும மிகுதியான 3 கோடி தேவர் நகது மக்களிலலாமற போகினறது. அதுபோலத் தென்னிந்தி பரவில் தோன்றியுள்ள சாதி வகுப்பின் விபரீதங்களாக காணப் பின் ஒவ்வொருவரும ஒவ்வொரு ஜாதியாா என்று சொல்லும்படி ாகவும் அலலது ஒவவொருவராக தனிததுக காணப்படுபவ நன் சிலருக்கு மட்டும் உயாவு நோககி மூனறே அலலது டோவாகக கூட்டுச சாதிபெயாகளுஞ சோததுக கணிதப் டுத்தும்படியாகவும சாதிப்பெயர்கள பயிராகிப்பாவி வருகினறன

ஆயின ஆதிதிராவிடா எனற பெயா மேற்றநதபடிப புதுப் பெயரானறேவெனின அற்றனறு. அறியாததனமையால சிரிய ராவிட தேயததைப்பாழடையச செயவதாயுள்ள புல்லிய சாதி பதம் பிதறறுரைகளுக்குச் சமாதானம புகன்று தேசசிறப்பைத ாங்குவதாய உணமை புகலவநத பழம் பெயரே ஆதிதிராவிடா ன்ற பெயா எனலாம்

'இராமாயண வுள்ளுறை பொருளும, தெனனிந்திய சாதி ாறும்'' எனும் நூல 34. 35. ம பககங் குறிககுமாறு.

"இராவிடருள் அடங்கிய வேளாளா—மறவர்—இடையர் ம்மாளர் முதலிய சாதிகள பல செயற்கைச சாதிகளாயும, ஒரே யறவகைச்சாதிகளாயு மிருக்கின்றனர். பிராமணரிற் சிலா, மறவ சிலர். இடையரிற் சிலர், கம்மாளரிற் சிலர் மறறைய தென் ிந்திய சாதிகள் ஒவ்வொன்றிலுஞ சிலா ஆகிய இவாகளை ஒரேவ யாகச் சவரஞ செய்வித்து ஒரேவிதமான உடையுடுப்பித்து சோத் திரட்டினுல் அவர்களுள் இன்னா இன்னசாதியென்று ித்தூல வல்லாரே பகுத்தறிய மாட்டாாகள்.

நீகிரோவர் கருநிறத்தவர். சீனர் மஞ்சள் நிறத்தவர். அமெ க்கர் இநதியரென்றசாதிகள் இவ்விருசாதியினின்றும் பிரித்துக் ட்டும் உருவயேததோடு செம்பு நிறமுடையவர். இம்மூன்று

சாதி மனிதரையும முன சொன்னபடி ஒரேவகையாகச் சவரஞ் செயவித்து உடை யுடுவித்தலே யன்றி எல்லாருக்கும் ஒரே வருணம பூசிவிட்டாலும் இவாகளை வெகு லகுவாக இன்னின்ன சாதி யென்று பகுத்தறியக கூடும'.—என்றா ஷை நூலின் அறிஞர். ஷெ நூல இயற்கைச்சாதி செயற்கைச்சாதி யென்று மற்றொரு கிளாசசியையும தூணடி விட்டது அவவண்ணமே நந்நாடு போற்றும் சாதிவாதத்தை நோக்கு மிடத்து பாரப்பார-பறையா என்று இரண்டு வகையாரே இயற்கைச சாதிபோலும ஈண்டு வரைதற்குரியராவர். குடியேறிகளென்றும பழங்குடிகளென்றும பகுத்தறியுமவி லும் பாரப்பார-பறையா எனபவரே இயற்கைச்சாதியெனும பாற் படுவா

பண்டைய மக்களெனபானபோலும "ப" என்ற எழுத்து முதறகொண்ட பறையா எனபபடுவதூஉம், குடி புக்கார என்பான் போலும. பகரத்திறகு இரண்டாவதான "பா." என்ற எழுத்து முதறகொண்ட பாரப்பனா எனபபடுவதூஉம சீர்தூக்குமளவில் பறையா, பாரப்பா ஆகிய இவவிருவரே இயற்கைச சாதியெனப் படுவா. இவவிருவருள் விருந்தின ரொபபக்குடிபுகுந்த ஆரியா நீங்க, திராவிடதேய சுயாதீனரான ஆதிதிராவிடாகள் செயற்கைச்சாதி யென்ற சொலலுக்கு எட்டுணையும பொருந்தினராகாமல் பூர்வ இயற்கைச சாதியோரே எனபபெற்றது.

38-ம பக்கத்தில காட்டியபடித தென்னிந்தியாவின் முழுப் பாகங்கரும் இராவணனது இராஜியமாகவிருந்தது

[South of Vindhia mountains, the whole peninsula including Ceylon was the dominion of Ravana Vibishnan Buddhi]

என்பதோடு 37-ம பக்கத்தில குறித்துள்ளபடி பிரளயத்தின் இலங்கையெனும இராசசியம தீவு, என்ற அளவுற்றது ; என் பதையாதாரமாயக கொண்டு அந்தப்பிரளயம எப்போதுண்டாயி ருக்கலாம் என்று விசாரிக்கபபுகின், கடைசிப்பிரளய மானது இற்

றைக்கு 9000 வருடங்களுக்கு முன்பு உண்டாயிற்று என புரோபசர் எலியட் துரையவர்கள் தருகின்றபடியினால் ஷை 9000 வருடங்களுக்கு முன்பிருந்த குடிகளேயாய் விளங்குவார் தாமே ஆதிதிராவிடர். ஆதலால் அன்னோர் இயற்கைச்சாதியோரே யென்று பின்னும் வலியுறுத்துவாம், ஷை இராவணன் நிமித்த முதித்த பகைமையடியே அவனது இனத்தவரான ஆதிதிராவிடர்களை வறுமையிலும் பிணியிலும் கவலையிலும் பிணிப்புண்ணச்செய்து ஒடுக்கும் முறையாகவே பழங்குடிகளைத் தாழ்குலமெனத் தப்பறை சாற்றலாயினரெனலாம்.

"காணுதாற் காட்டுவான் தான்காணான் காணுதான் கண்டானாந் தான்கண்டவாறு" என்ற பழந்தமிழ் நாவலர் கூறிய வண்ணம் முயற் கொம்புக்கதை போலும் புராணங்களும் = பழங்கதைகளும், ஸ்மிருதி = மனதால் நினைக்கப் படுபவை, யாகும் நீதிகளும் பற்பல எழுதிக்கொண்டு சாதி வியாபாரத்தில் தலைதூக்கி நிற்க முந்தினர் இந்துக்கள்.

Among no other nation was it ever observed with such strictness or enforced by such severe penalties as among the Hindus. From birth to the funeral pile, it directs every movement. The Hindu by day and night at home or abroad in waking, sleeping eating, drinking in all the systen of the society in which he moves, and in the events determining his entire life is always under its pervading and over mastering influenee." [Sherring's Hindu Tribes and Castes

அதாவது இந்தியாவின் சாதிபேதமானது, இந்தியர் தொட்டிலில் இருந்து சுடுகாடு போகும்பரியந்தமுள்ள வழக்காகி எப்பாதும் ஒருவரைத் தாழ்த்தியாட்கொள்ளும் முறைமையுடையதாயிருக்கிறது என்றபடியாம்.

The Queen of England Can raise any of her subject [to] peerage but she cannot alter the Caste of a Hindu.

The highest nobleman in England may enter th[e] Cottage of the humblest person in England and sit with him at table; not so in India." [John. Murdoch]

அதாவது இங்கிலாந்து தேசத்திலுள்ள அரசி தனது குடிகளில் எவரையும் உயர் பதவிக்குக் கொண்டுவரக்கூடும் ஆனல் இந்து ஒருவனுடைய சாதியை மாற்ற அந்த அரசியாலேயும் கூடாது. இங்கிலாந்திலுள்ள மிகப் பெரிய பிரபுவானவன் அவ்வூரில் மிகத் தாழ்ந்துள்ள ஒரு குடியானவனது குடிசைக்குள் நுழைந்து அவனோடு பேதமின்றிச் சமபோசனஞ் செய்வான் ஆனல் இந்து பிரபுக்களிடத்தில் அவ்வித சுகுணங்கிடையா. என்றவாறு.

ஆரிய வர்க்கமான சாதிகட்டுகள் ஆதி சத்துருக்களாகிய வட தேசத்து ஆரியரால் அத்தியந்த சாதுரியமான சூழ்ச்சியோடு ஆக்கப்பட்டுக் கைகால்களைக் கட்டலினும் அதிகக்கேடு பயப்பதாக ஆன்மாக்களுக்கு இடப்பட்டிருக்கிற விலங்குகள் என்றும் . . ......கலகாஸ்பதமான கொள்கை என்றும் கூறுவர் [ஸ்ரீமான். P. சுந்தரம் பிள்ளை. MA. யவர்கள். இவற்றால் இந்துக்களின் சாதி பேதவாதங்களும் ஒழுக்கங்களும் சத்துருத் தன்மையையே காரணமாகக் கொண்டுள்ளவெதென நன்கு புலமாகின்றதன்றோ? இத்தகைய பகைமை சாதிகளும் சாதிபேதத்தையும் இதற்[கு] றெழுந்த கொடிய மனுதாம சாத்திரத்தையும் சாதிபேதிகள் வாள் போர்லும் ஆண்டு பயின்று வந்தமையாற்றனே, ஆதிதிராவிடர்கள் தம்து உரிய நிலங்களையும் பொருள்களையும் இழந்தவர்களாகி அழிஞராரா எனலாம். தற்காலத்திலும் ஆதிதிராவிடர்களின் [நில] மனைக்கட்டுகளும் இந்துக்களின் ஏமாற்ற வஞ்சகத்திற் சிக்குண்டு இழப்புண்டு போகின்றன.

ஆயினும் இவர்கள் புராதன குடிகள் என்பதற்குச் சான்ருக பாதும் இந்திய ஜனதொகையில் ஐந்திலொரு பங்கினராக ம்பியிருக்கின்றனர். இவர்கள் அரசவமிசத்தவர் என்பதற்குச் சான்ருகப் பரம்பரையடியே தீரவீரசேனை சமூகங்களில் சுபேதார் பஹதூர், சுபேதாரமேஜா, ஜமேதார் அவுல்தார் எனப்படுமோர் கௌரவ உத்தியோகத்தவராய்ப் பெருமபாலோர் விளங்குகின்றனர்; இவர்கள் பழந்தமிழ்க குடிகள என்பதற்குச் சான்ருக, நாவலர் பாவலா அவதானியாா எனறு பணடைநாள் தொட்டு இதுகாறும நன்றே விளங்குனறனா; இவர்கள புராதன சைவசமயிகள் என்பதற்குச சான்ருகத தற்காலையிலும கண்கூடாயக கணடறிவதற் கிலககாய உதகமணடலததிலே சிவாகாரமாய ஸ்ரீமத.ஏகாம்பர சுவாமிகள. ஸ்ரீமத. ஓம்பிரகாச சுவாமிகள் ஸ்ரீமதி. இரத்தின அம்மையார் சென்னையில் ஸ்ரீமத. பாலதேசிக நாயனர். பிருங காசலம் மாஙகுள கிராமத்தில சமாதிகொணடுள்ள ஸ்ரீலஸ்ரீ. சிவலிங்கநாயனா. சென்னைச் சேததுபேடு, சிவப்பிரகாச தேசிக ஸ்வாமிகளமுதலிய சைவாசிரியாகள்பலர் நிலவுகின்றனா, இவர்கள் காருண்ய பிரிட்டிஷ் ஆளுகையாரின் சாதிபேதமற்ற செஙகோல் கொடையினுககுச் சான்ருவாாபோலும, ஆங்கிலேயரின் பலதுறை பட்டவேலைக கூடஙகளில் உத்தியோகததவராயும, தமது புராதன வேளாணமை யுடைமைதோனற பலா வேளாளாகளாகவும், சோதிட வாகடகலா பண்டிதர்களாகவும் இலஙகுகின்றனர். பின்னும் சாதிபேதம் பாராட்டும் ஆரியரல்லாதவாகள், பேதஞ் செயவோராகிய ஆரியரிடத்தில் வேலையாட்களாக விருந்து அல்லல் பட்டு அயர்ந்து நிற்பதைப் போலாகாமல், இவ்வாதிதிராவிடர்கள் இந்தியாவைப் பரிபாலிக்கும் பிரிட்டிஷ் மெய்ஞ்ஞான கவர்னர் (ஆளுபவர்) நியாயதுரந்தரர் சேனைத்தலைவா. சாஸ்திரிகள். கண்டனவர்த்தகராயுள்ள ஐரோப்பியரிடத்தில், அறிவுசான்ற சுகமைம்பாக சாஸ்திரம், ஐரோப்பிய கணிதலிகிதம், குதிரையேற்றம் முதலிய பயிற்சிகளைத தேர்ந்து அவற்றிற்கென நல்யோக்யதாம்

பத்திரங்களை பெற்று வை ஐரோப்பியரின் விலையேறப்பெற்ற பொருளகளுககு உததரவாத முடையராம் அலுவல்களில் அமர்ந்து தமது ஒரே இனததவரிடம் பழகும பாவனைபோல் அவ்வளவு நெருஙகிய அனபு விசுவாசம கீழ்படிதலுடையராகவும அவரோடி ருநது விளஙகுகினறனா.

பஞசபாணடவாகள விராடபுரத தாசனிடம் அவனது அரண் மனை வேலையாட்களாக இருநது சினனாள் கழித்தனா. ஙளசக்கிர வாததியும சாரதிவேலை செயதனா. அதுபோல ஆதிதிராவிடர் கள் அககாலைய கொடுஙகோன் மன்னரின் பணபைத தெரிகது ஊமையனகண்ட கனவைபபோல தஙகிலைமையை நோககி வருநதி நின்றனா எனறாறபோலும், எல்லாம வல்ல இறைவனது பெருஙகருணை திரண்ட தொபபச் சாதிபேதம் பாராட்டாத பிரிட் டிஷ் அரசு இநதியாவுககு வாயததது. ஆதிதிராவிடர்களின் நிலைமையை அருகிலிருநது கணட வை ஐரோபபிய கணடத்தினர் தாங்கள் இநதியாவினின்று தமது சுயதேசம் சென்று, ஆதி திரா விடரின விலகியிருநதும், தாஙகள் தமது கண்ணுறகண்ட இந்தி யாவின் சாதிபேத கொடுமைகளை மறத்தற்காகாதவராகிப பரோப கார சிநதையால கிறிஸது மதசபையினரைஅனுப்பினா போலும்; வநத வை மிஷனெரிகளால அநேக பாடசாலைகளும நறபோதங் களும் நாளுககுநாள் விருத்தியாக அவை ஆதிதிராவிடர்களுக்கு

இநதியாவில் அநேக நூற்றாண்டுகளாக சுதேசிகளென விருந்து வாழ்நது வருபவரோ, ஆதி திராவிடர்களை அவரது பிறவிக் கும் மாறாக யாதென்றோ ! எண்ணுமோர் புல்லிய எண்ணமும் உதேசமும் உடையவர்களாகி அவர்களைததாழ்த்துமோா அறிவே பெரிதும் உடையராய் இருப்பவரானா்.

சயாநலப் பிரியரான சாதிபேதம பாராட்டும் முன்னோர்களின் சந்ததியாராய பிற்றைய காலததிலே தோன்றினவர்களும் தங்க

மூதாதையரின் சூழ்ச்சிகளை இனைய தென்றுணராமல் தாழ்ரய் நடத்தற்கானதை யுணாநது அவரது அறியாமையையகற்றும் வண்ணம், கபிலாகவல்ஞானவெட்டி முதலிய நூலாசிரியர்கள் அறிவுசுடர் அருளியுள்ளபடி 50 வருஷங்களுக்கு முன்னிருநத பெரியாருன், பாலவாகட திரட்டு., என்ற நன்னூலாற்றிய வலல காளத்திநகர் ஸ்ரீமான் அயோத்திதாச பண்டிதா அவர்களும (45) ஆணடுகளுககுமுன் சுகிர்தவசனி யென்ற பததிரிகை நடாத்தி வநத ஸ்ரீமான் நாராயணசாமிப் பிள்ளையவர்களும் மற்றும பலரும் ஆதிதிராவிடா எனப்படும் பழஙகுடிகளைப் பஞ்சமா பறையா எனறுதிய பொருளடியே அழைதது வரும் பழககததைக் கணடிதது வநதனர். சென்னைக காசிமேடு. ஷட்டாவதானம. லைாககண். வேலாயுத புலவர், ஸ்ரீமான். அரஙகையதாசப பணடிதர் முதலிய சுற்றோாகள் பலர் கூடி "ஆதி திராவிடர் மகாஜனசபை" என்றொரு பெருஙகழகததைக கடநத 1890-ம் ஆணடில் ஆரம்பித்து 1892-ம் ஆணடில் 1860-ம் ஹுத்திய XXI-ம சட்டத்தின் படி ஆளுகையாரின் முததிரையுறச செயவிததனா. ஷை ஆதி திராவிட மகாஜன சபைக்குத் தனது நீடிய ஆயுளபரியநதம் சபாநாயகமாய விளஙக நோநது கொணடாா பெருநதகையாளர் ஸ்ரீமான். ஷாப்பு P. V. சுப்பிரமணியம் பிள்ளையவாகள. 1890-ம ஹு ஏப்ரல் மீ. 8 நதிகதிய மகா விகடதூதன் பத்திரிகையைக காணக.

இவ்வாறு தோன்றிய ஆதி திராவிட மகாஜன சபையின் கருத்தின் படியே, ஆதி திராவிடர்களை அழைக்கப்படும் பெயர் பலவற்றுள், பறையன என்ற வொரு பெயரைக கொணடு விவாதிக்கும் படியாக ஸ்ரீமான். இரட்டைமலை ஸ்ரீநிவாசம் அவர்கள் "பறையன்" என்றொரு பததிரிகை நடாததி அக்கால் சென்னைக் கவர்னராயிருநத லார்ட் வென்லாக் பிரபுவிடம, ஆதி திராவிடர்களுக்கு உண்டாயுள்ள குறைகளை யெல்லாம் எடுத்துக் காட்டி நன்மையுண்டாக்க விளங்கினர்.

ஸ்ரீமான். T. ஜான் இரத்தினம் அவர்கள் "திராவிடபாண்டியன்" பத்திரிகை நடாத்தித் தென்னிந்திய பழங்குடிகளின் வரலாறுகளை விளக்கக் கூறி வந்தனர். ஸ்ரீமான். வே. இரத்ந முருகேச பண்டிதர் அவர்கள் ஸ்ரீமான், வேலூர்-து. முனிசாமிப்பண்டிதர் அவர்கள் "ஆன்றோர் மித்திரன்" எனும் பெரிய பத்திரிகையொன்று நடாத்திச் சாதிபேத தவறுகளை எடுத்தோதி வந்தனர். சதாவதானம். ஸ்ரீமான். பூஞ்சோலை முத்துவீர நாவலரவர்கள் "பூலோகவியாசன்" எனும் பத்திரிகை யொன்று நடாத்தி ஆதி திராவிடர் முன்னேற்றத்தை யவாவி நின்றனர்.

ஆதி திராவிடர்கள் புராதன மக்கள் என்றும்; தமிழர்களென்றும்; வஞ்ச நெஞ்ச பிராமணர்களது சூழ்ச்சியால் பழந்தமிழர் சரிதங்களும் அவரது செல்வங்களும் நாளுக்கு நாள் மறைவுண்டு போக அன்னோர் தாழ்த்தப்பட்டாரென்றும், ஆன்றகலவி கேள்வி பெருக்கினால "தமிழன்"- எனவொரு பத்திரிகை நடாத்தி இரவும் பகலும் பழங்குடிகளாகிய ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்தையே கருதினவராகப் பிரகாசித்திருந்தார் ஸ்ரீலஸ்ரீ. க. அயோத்திதாச பண்டித பெருமான் அவர்கள்.

ஜெயாதி உழைப்பில் வளர்ந்துவந்த ஆதி திராவிட மகாஜன சபையானது மூன்று வருடங்களுக்குமுன், டாக்டர் T. M. நாயர். சர். P. தியாகராய செட்டியார் ஆகிய பெருந்தகையாளரது இராஜிய கிளர்ச்சி, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற அமைப்பின்கண் வன்மையுடன் நின்று தோன்றற்காயிற்று.

அக்காலையில் ஆதி திராவிட மகாஜன சபையின் நாயகராகிய ஸ்ரீமான். ஷாப்பு, P, V. சுப்பிரமணியம் பிள்ளை யவர்களின் தலைமையின்கீழ், ஷை மகா சபைக்குக் கௌரவ காரியதரிசியாய்ப் பரோபகார திடமனதுடன் எழுந்தார் ஸ்ரீமான். M. C. இராஜா அவர்கள்,

கல்வி கேள்வி நிறைந்த பண்டிதர்களாகிய சிமான்கள் T. ஜான், இரத்தினம அவர்கள். "இல்லற வொழுக்கம்" எனும் நூலாசிரியர் ஸ்ரீமான். ம. க. சினனதமபி பிள்ளையவர்கள் சைவ பிரசாரகர் ஸ்ரீலஸ்ரீ. கி.ஊ.பா.கஙகாதர நாவலா அவர்கள. ஸ்ரீலஸ்ரீ. சகஜானந்த சுவாமிகள். வித்வான. மதுரவாசகம் பிள்ளையவர்கள் வேதாநத விதவசிரோமணி, களததூா முனிசாமிப் பிள்ளையவர்கள் ஸ்ரீலஸ்ரீ. அதவைதானந்த சுவாமிகள். செநதமிழ நறவந துளிகரும் பன்னூலாசிரியன, மகாவிததுவசாகரம வீ ஏ. முனிசாமிப் பிள்ளையவாகள ஸ்ரீமான். மா. தேசிகானநத சுவாமிகள். ஸ்ரீமான். திரு. பழனிசாமிப் பிள்ளையவாகள. ஸ்ரீமான பெ. மா. வெஙகடபதிநாவலர் அவர்கள ஸ்ரீமான். R. இராஜகோபால். ஸ்ரீமான் M. C D. வரத ராஜலு அவர்கள. அஷட்டாவதானம. கஙகாதர பாலதேசிகர். நரசிங்க புரம ஸ்ரீமான். பொ. இரததினப் பிள்ளை யவர்கள். ஸ்ரீமான். ஐ. பாலகுருசிவம. அவர்கள். திரிசிரபுரம் ஆ. பெருமாள் பிள்ளை யவர்கள் பினனுமபல நல்விசைப் புலவர்கள், எல்லோரும் கிராமங்க டோறும் சென்று ஆஙகாஙகு ஆதி திராவிட சபையின நலததை எடுத்தோதி வந்தனர்.

இநதியாவின சீர்திருதத விஷயமாக 1917-ம் வரு. சென்னைக்கு விஜயஞ் செயதருளிய H. E. Lord Chemsford, Right Honourable Mr. E. S. Montagu ஆகிய பிரபுககளிடம் ஆதி திராவிடா எனும் பெயரைப்பற்றியும் ஆதி திராவிடாகளின முன் னேறப் பற்றியும் அவாவிய பததிரமொனறு விடுக்க சென்னை விக்டோரியா பொதுக்கூடத்தில், திருமயிலை. திவ்ய கவி. இராகவதாசர் அவாகளின் தலைமையின்கீழ் ஆதிதிராவிடர் களின் பெருங்கூட்டமொன்று நிறைவேற்றி ஷை பததிரததில், ஸ்ரீமான். P. V. சுப்பிரமணியம்

பிள்ளை ஸ்ரீமான. T. ஓங்காரம்

,, V. முக்குந்துபிள்ளை ,, M. சண்முகம் பிள்ளை

,, M. C. இராஜா ,, ஸ்ரீமதி. திருப்புகழ்

அ

ஸ்ரீமான். K. முனிசாமிப் பிள்ளை ஸ்ரீமான் V. G. வாசு
தேவ பிள்ளை

,, V. இராஜரத்தினம் பிள்ளை ,, V. G. வேணுகோபால்
பிள்ளை

ஆகிய இவர்கள் தங்களது கையொப்பஞ் சார்த்தி இந்திய மந்திரியாகிய மாண்டேகு பிரபுவிடம் சமர்ப்பித்தனர்.

அதன் பிறகு ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கு அறிகுறியாக சென்னை கவர்னர் H. E. Lord Willingdon பிரபு ஷை ஆதிதிராவிடர் மகாஜனசபையின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் M. C. இராஜாவை ஆதிதிராவிடர்களின் பிரதிநிதியாக சட்டசபையில் அமர்த்தினர். ஸ்ரீமான் M. C. இராஜா அவர்கள் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அந்நாள் தொட்டுத் தான் தனது கடமையைப் பூர்த்தியாய்ச் செய்துமுடிக்க வேண்டுமென்ற விரதமே பூண்டவராய்க் கைம்மாறொன்றுங் கருதாமலும் பிறரால் உண்டாகும் பல கஷ்டங்களைப் பொருள் பண்ணாமலும், ஷை சபைக்காக உழைத்து வருவதோடு ஆதிதிராவிடர் எனும் பெயரை ஆளுகையாரின் புத்தகங்களிலே பதிவுசெய்விக்க வேண்டும் என்று திடமனதுடன் முயன்றதின் பலனாக நிகழும் 1922-ம் ஷு. ஜனவரி மீ 20-ம் தேதியன்று நடந்த சென்னை சட்டசபையில் ஸ்ரீமான், M. C. இராஜா M. L. C. அவர்கள் ஆதிதிராவிடர் எனும் பெயரைப் பிரேரேபிக்க ராவ். பஹதூர் ஸ்ரீமான். T. நம்பெருமாள் செட்டியார் அவர்கள் அதனை ஆமோதிக்க, ஆனரெரி மாஜிஸ்ட்டிரேட்டும் ஆதிதிராவிடர்களின் பிரதி நிதியுமாகிய ஸ்ரீமான். M. C. மதுரைப்பிள்ளை M. L. C. அவர்கள் மிக்க நயம்படும் இதமொழிகளால் ஆதிதிராவிடர் என்ற பெயரை ஷை சட்டசபை பெருங்கழகத்தில் ஆதரித்துப் பேச ஆதிதிராவிடர் என்ற பெயர் ஆளுகையாரால் மங்களகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

# முடிவுரை.

துகாறும் குறித்தவற்றின் திராவிடமெனப் படுவது பல் வறிடஙகட்கும் பெயராயிருப்பதினாலே ஆதி திராவிடரென்ற ஒரு யர் ஓரிடததிற்குரியதா யிருததல் வேண்டும் என்றும், அந்த தி திராவிடம் என்பதே தென்னிந்தியா வென்றும், திராவிடம் ப்படுவது தமிழ எனுஞ்சொலலின் திரிபு எனறபடிததிராவிடா க்ளே நோககுமளவில பழநதமிழராயத தோன்றுபவரைப் பிரித் தாற்றும் பாவனேயெனவே ஆதி திராவிடர் என்றும், மனுதன்ம நூல் தரும ஜாதிகளெலலாம் பிற்கால ஏற்பாடுகளென்றும் இநதச் சாதிபேத ஏற்பாட்டில உட்படாது சுயாதீன மாயுள்ள ஒரு வகுப் பாரே ஆதி திராவிடரென்றும் இந்தியா சரித்திரப் பழமையடியாய் அனேஞர் இராவணுதியாச வினததவரென்றும் ஆதலால் இவர்கள் இநதியாவுள் குடிபுகுநத ஆரியராதியோருக்குக் கைத்த விரோதிகளா, கப் பாவிககப பட்டாரென்றும், அவ்வித பகைமை காரணத்தா லேயே ஒடுககப பட்டாரென்றும் ஆதி திராவிடர்களின் தவத்தின் பயனக வநதது காருண்ய பிரிட்டிஷ ஆளுகையென்றும், ஆளுகை யாரின் ஒரு துணையும் திடமுமே உறுதியாய் நம்பியுள்ளது ஆதி திராவிட மகாஜன சபையென்றும் இப்புத்தகததில் தோன்ற முடி வுற்றதாகும்

கருணையங்கடவுள் செங்கோலைக் காப்பாராக.

PRINTED AT THE
NOBLE PRESS,
TRIPLICANE, MADRAS.

# இப்புத்தகத்தை அச்சிற் பதிப்பிக்கப் பொருளுதவிபுரிந்த கனவான்களின் பெயர்கள்

அயனபுரம் கிராமம் ஸ்ரீமான் பசசையப்பதாஸ் அவர்கள்.

பூவிருந்தவல்லி ஜரோட் கோழம்பேடு கிராமம் ஸ்ரீமான் R. தாமலிங்கம் பிள்ளையவர்கள்

பெரம்பூர் ஸ்ரீ வேணுகோபால சுவாமி சந்நிதியங்கம் திருமயிலை நிவாசகர் ஸ்ரீமான் சோ குப்புசாமிதாஸ் அவர்கள்.

திரு ... வே அ கோயில் அழகிய மணவாள இராமானுஜ ஏகாங்கி ஸ்வாமிகள் மடத்து சம்பந்தராகிய ஸ்ரீமான் அ வே. முராரி ராமானுஜதாஸ் அவர்கள்

அ வீ இரா கோவில் ஸ்ரீமான் அருளாள பெருமாள் இராமானுஜதாஸ் அவர்கள்

சென்னை வேப்பேரி "கிரீன் வில்லா" அருணாசல பண்டாரம் தெரு ஸ்ரீமான் M C கோபால பிள்ளையவர்கள்.

சென்னை "கன் பௌண்டரியில" அடுத்த பொன்னப்பன் தெரு ஸ்ரீமான் பி ராஜகோபால் அவர்கள்.

சென்னை ராயபுரம் ராமநாயக்கன் தெரு ஸ்ரீமான். பொ ஆ முனிசாமிப் பிள்ளையவர்கள், Fitter, (P W P.)

காசிமேடு கொடிமரத்தெரு ஸ்ரீமான் T பெருமாள் பிள்ளையவர்கள்

அகரம் திம்முசாமித் தெரு திருப்பாணாழ்வார் திருச்சபைத் தலைவர் ஸ்ரீமான். நா வ. ராகவதாஸ் அவர்கள்

சைதை தாலூகா போர்ட் மெம்பரும், அகரம் சேர்மராம செட்டித் தெரு நிவாசகருமாகிய ஸ்ரீமான் அ லட்சுமண பிள்ளையவர்கள்

சென்னை மண்ணடி மலையப்பன் தெரு ஸ்ரீமான் அ. சிவலிங்கம் பிள்ளையவர்கள்

பெரம்பூர் ஆறுமுக முதலித் தெரு ஸ்ரீமான் பா கோவிந்தராஜலு அவர்கள்

சென்னை வியாசர்பாடி சிவஞானசுந்தர சிதவிலாச பக்தஜன சபையின் காரியதரிசி ஸ்ரீமான் அ. பெரியதம்பி பிள்ளையவர்கள்.

ஆயிரந்திபங்கா அஜ்ஜால முங்க தெரு ஸ்ரீமான் C. பொன்னுசாமிப் பிள்ளையவர்கள்

காசிமேடு கொடிமரத்தெரு ஸ்ரீமான் சி மா பொன்னம்பலம் பிள்ளையவர்கள்

பெரம்பூர் ஸ்ரீமான். R அரங்கநாதன் பிள்ளையவர்கள்.

பூவிருந்தவல்லி ஜரோட் திருமங்கல கிராமம் ஸ்ரீமான். வே. மன்னார் பிள்ளையவர்கள்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசதார ரிடம் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

சென்னைப் புரசை சாமி நாய்க்கன் தெரு கிராமத் தலைவர் ஸ்ரீமான். M. C. D. வரதராஜுலு அவர்கள்.

சென்னைப் புரசை தாக்கர்ஸ் வீதி 17-வது எண்ணுள்ள கிருஹம ஸ்ரீமான் மு. சிவசுப்பிரமணியம் பிள்ளையவர்கள்.

# விளம்பரம்.

அறிவானந்தன் எனும் பெயரிய செந்தமிழ்க்கதை யொன்று இந்நூலாசிரியனால் எழுதிச் சென்னைத்திராவிடன் பத்திரிகையில் வெளியிடப்பட்டுவந்தது. இதனைப் புத்தகரூபமாகக் காணவிரும்பும் அன்பர்கள் தங்களது பெயரைக் கீழ்கண்ட விலாசதாரருக்குத் தெரிவித்துக் கொள்ளுவாராக "இக்கதையானது பொழுது போக்கற் காகக்கொள்ளும் சில கதைகளைப் போலாகாமல் நன்னீதி முறைகளை யெடுத்தோதுவதாயுள்ளது." எனக்கற்றோர் உரைதந்துள்ளார்.

300 பெயர்கள் பதிவானபின்னர் ஷை கதைக்குரிய சந்தா அணா 8. சேகரித்து அச்சிடப்படும்.

புத்தகத்தளவு கிரௌன். 130 - பக்கங்கள். விலை சந்தாதாரல்லாருக்கு பன்னிரண்டணாவாகும்.

திரிசிரபுரம். ஆ. பெருமாள் பிள்ளை,
49, சாமிரெட்டித் தெரு,
1-5-'22. எழும்பூர், சென்னை.